மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி

**MANONMANIAM SUNDARANAR UNIVERSITY**

**THIRUNELVELI**

தொலைநிலை தொடர் கல்வி இயக்ககம்

# DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

**B.A.** தமிழ் இரண்டாமாண்டு

மூன்றாம் பருவம்

முதன்மைப் பாடம் **(MAJOR SUBJECT)**

# இலக்கணம் – யாப்பிலக்கணம்

---

முனைவர் சு.சு. ஷீபா,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,
மார்த்தாண்டம் – 629 165
குமரிமாவட்டம்.

# B.A. தமிழ் இரண்டாமாண்டு
# மூன்றாம் பருவம்
# முதன்மைப் பாடம் (MAJOR SUBJECT)
# இலக்கணம் – யாப்பிலக்கணம்

## பொருளடக்கம்


| எண் | பாடங்கள் | பக்கஎண் |
|---|---|---|
| அலகு – 1 | உறுப்பியல் | |
| | 1. எழுத்து | 5 – 10 |
| | 2. அசை | 10 – 11 |
| | 3. சீர் | 12 – 24 |
| | 4. தளை | 24 – 28 |
| அலகு – 2 | 5. அடி | 29 – 34 |
| | 6. தொடை | 34 – 37 |
| | தொடை விகற்பங்கள் | 38 – 50 |
| அலகு – 3 | செய்யுளியல் | |
| | பாக்களுக்குரிய அடியும் ஓசையும் | 51 – 57 |
| | 1. வெண்பா | |
| | வெண்பாவின் பொது இலக்கணம் | 57 |
| | வகைகள் | 58 – 68 |
| | இனங்கள் | 68 – 73 |
| | 2. ஆசிரியப்பா | |
| | பொது இலக்கணம் | 73 |
| | வகைகள் | 73 – 75 |
| | இனங்கள் | 75 – 79 |
| அலகு – 4 | 3. கலிப்பா | |
| | கலிப்பாவின் பொது இலக்கணம் | 80 |
| | உறுப்புக்கள் | 80 – 82 |
| | வகைகள் | 82 – 101 |
| | இனங்கள் | 101 – 104 |
| | 4. வஞ்சிப்பா | |
| | வஞ்சிப்பாவின் பொது இலக்கணம் | 104 |
| | வகைகள் | 104 – 105 |
| | இனங்கள் | 105 – 107 |

| எண் | பாடங்கள் | பக்கஎண் |
|---|---|---|
| | 5. மருட்பா | |
| | மருட்பாவின் இலக்கணம் | 108 |
| | வகைகள் | 108 - 112 |
| அலகு – 5 | **ஒழிபியல்** | |
| | உறுப்பியல் ஒழிபு | |
| | 1. எழுத்து ஒழிபு | 113 - 118 |
| | 2. அசை ஒழிபு | 119 - 121 |
| | 3. சீருக்கும் தளைக்கும் ஒழிபு | 121 - 124 |
| | 4. அடிக்கு ஒழிபு | 124 - 127 |
| | செய்யுளிய் ஒழிபு | |
| | 1. தரவு தாழிசைக்கு ஒழிபு | 127 - 128 |
| | 2. பாக்களுக்குரிய பொது ஒழிபு | 128 – 150 |
| மாதிரி வினாத்தாள் | | 152 |

# யாப்பிலக்கணம்

## 1. முன்னுரை

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவினையுடையது. எழுத்தால் ஆவது சொல்லாகும். சொற்கள் பல சேர்தல் தொடராகும். இத்தொடரின் உள்ள சொற்கள் சிறந்த பொருளைத் தருமாறு கற்றறிந்த புலவரால் அழகுபெறப் பாடப்படுவது யாப்பாகும்.

## 2. யாப்பிலக்கண நூலாசிரியர்கள்

யாப்பிலக்கணம் பல்வேறு புலவர்களால் தனித்தனி நூலாக இயற்றப்பட்டது. அவிநயனார் – அவிநயம், காக்கைப்பாடினியார் – காக்கைபாடினியம், சிறுகாக்கைபாடினியார் – சிறுகாக்கைபாடினியம், கையனார் – யாப்பிலக்கணம் - நத்தத்தனார் – நத்தத்தம், பல்கயனார் – பல்காயம், பல்காப்பியனார் – பல்காப்பியம், மயேச்சுரனார் – மயேச்சுரம் முதலிய புலவர் பலர் யாப்பிலக்கணம் இயற்றினர்.

## 3. யாப்பருங்கலக்காரிகை – ஆசிரியர்

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த அமிதசாகரர் என்னும் ஆசிரியரால் யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரு நூற்கள் இயற்றப்பட்டன. இந்நூல்களே பிற்காலத்தவர்களால் யாப்பிலக்கணப் பயிற்சிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றில் யாப்பருங்கலக்காரிகையே சிறந்தது என்பதை "காரிகை கற்றுக் கவி பாடுவதில்" என்னும் வழக்கால் அறியலாம். அமிதசாகரர் சமணச் சமயத்தைச் சார்ந்தவர் என்பதைக் "கந்தமடிவில்" என்னும் கடவுள் வாழ்த்துச் செய்யுளால் அறியலாம்.

## 4. உரையாசிரியர்

யாப்பருங்கலக்காரிகைக்கு உரை எழுதியவர் குணசாகரர். இவர் அமிதசாகரர் காலத்திலேயே வாழ்ந்தவர் எனச் சிலரும், அவருக்கு பிற்பட்டக் காலத்தில் வாழ்ந்தவர் எனச் சிலரும் கருதுகின்றனர். இவர் உதாரணச் செய்யுட்களை அருகதேவன் வாழ்த்தாகவும், சமண சமயக் கோட்பாடுகளை விளக்குவனவாகவும் உள்ளதாலும், சிந்தாமணி, சூளாமணி, போன்ற சமண நூல்களை மேற்கோளாக காட்டுகின்றதாலும் இவர் சமணரென்றே துணியலாம்.

## 5. யாப்பருங்கலக்காரிகை – பெயர்க்காரணம்

யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய், அலங்காரம் (அழகு) உடையதாகச் செய்யப்பட்டமையால் யாப்பருங்கலக்காரிகை எனப் பெயர் பெற்றது. இதற்கு, யாப்பாகிய கடலைக் கடக்கப் பயன்படும் அரிய மரக்கலம் (கப்பல்) போன்றது என்றும், காரிகை என்ற கட்டளைக் கலித்துறை யாப்பால் செய்யப்பட்டது என்றும் அதனால் இப்பெயர் பெற்றது என்றும் பெயர்க்காரணம் கூறுவர்.

## 6. நூலின் அமைப்பு

யாப்பருங்கலக்காரிகை தற்சிறப்புப் பாயிரத்துடன் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்று இயல்புகளையுடையது.

உறுப்பியலில் 21 காரிகைகளும், செய்யுளியலில் 29 காரிகைகளும், ஒழிபியலில் 10 காரிகைகளுமாக 60 காரிகைகள் உள்ளன. நேரசை முதலாகத் தொடங்கும் காரிகைக்கு ஓரடிக்கு 16 எழுத்தாக நான்கு அடிக்கும் 64 எழுத்துக்கள் உள்ளன. நிரையசை முதலாகத் தொடங்கும் காரிகைக்கு ஓரடிக்கு 17 எழுத்தாக நான்கு அடிக்கும் 68 எழுத்துக்கள் உள்ளன.

நூலில் காட்டப்படும் உதாரணங்கள் எல்லாவற்றையும் நினைவிற்குக் கொண்டுவர வாய்ப்பாக உதாரண முதல் நினைப்புக் காரிகைகள் உள்ளன. அக்காரிகைகளைக் கொண்டு என்னென்ன பாடல்கள் உதாரணமாக காட்டப்பட்டுள்ளன என்று நினைவிற்குக் கொண்டு வரலாம். இது இந்த நூலில் அமைந்துள்ள பெருஞ்சிறப்புக்களுள் ஒன்றாகும்.

## தற்சிறப்புப் பாயிரம்

(1) “கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்தம் அடிகள் இணையடி ஏத்தி எழுத்தசைசீர்
பந்தம் அடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குலலே”

“அசோக மரத்தின் நிழலில் அமர்ந்துள்ள அருகக் கடவுளை வணங்கி எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, இனம் ஆகிய எட்டினையும் கூறுவேன்” என்று கூறுகின்றார்.

ஒவ்வொரு காரிகையும் ஒரு பெண்ணை அழைத்துக் கூறுவதாக அமைந்திருக்கும்.

**அவையடக்கம்**

(2) “தேனார் கமழ்தொங்கல் மீனவன் கேட்பத்தெண் ணீரவிருக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனேக்கே நகைதருமால்
ஆனா அறிவின் அவர்கட்னென் னாங்கொலென் ஆதரவே”

தேனிறைத்த மணம் கமழ்கின்ற வேப்பமாலையைத் தரித்த பாண்டியன் கேட்க, தெளிந்த அருவி நீரையுடைய சந்தனச் சோலை சூழ்ந்த பொதிய மலையில் எழுந்தருளி யிருக்கின்ற அரிய தவத்தினையுடைய அகத்திய முனிவரால் அருளிச் செய்யப்பட்ட அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள், இயற்றமிழின் கூறாகிய யாப்பிலக்கண நூலை, யானும் அவாவினால் எனது புல்லிய நாவைக் கொண்டு சொல்லத் தொடங்கினேன். இதனை நினைக்கும்போது எனக்கு வியப்பாக இருக்கின்றது. அப்படியானால் அறிவிற் சிறந்தவர்கள் என் முயற்சியைப் பற்றி என்ன நினைப்பார்களோ? என்று நூலினுடைய பெருந்தன்மையினையும் அதனைச் செய்த அகத்திய முனிவருடைய பேரறிவினையும் தன்னுடைய அடக்கத்தையும் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

(3) “சுருக்கமில் கேள்வித் துகள்தீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொருள் தானும் விழுப்பொரு ளாம்பணி மாலிமயப்
பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னி றமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ் விருநிலமே”

இமயமலையின் சிகரத்தைக் கரிய காக்கையும் பொன்னிறமாகத் தோற்றமளிக்கும். அதுபோலக் குற்றத்தீர்ந்த நூலறிவினையுடைய புலவர் பெருமக்களுக்கு முன்னே யான் எடுத்துக்கூறிய இந்நூற்பொருளும், சிறந்த நூற்பொருளாகக் காட்சியளிக்கும் என்று அவையடக்கம் கூறுகின்றது.

# அலகு - 1

## உறுப்பியல்

### (எழுத்து – அசை – சீர் – தளை)

தற்சிறப்புப் பாயிரமாக அமைந்த மூன்று செய்யுட்களில் முதற் செய்யுள் யாப்பருங்கலக் காரிகையில் விரித்துச் சொல்லப்படும் எட்டு உறுப்புகளைக் கூறுகின்றது. அந்த எட்டு உறுப்புக்களில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் ஆறு உறுப்புகளைப் பற்றி கூறுவதால் 'உறுப்பியல்' என்னும் பெயர்பெற்றது. இவற்றுள் முதல் அலகில் எழுத்து, அசை, சீர், தளை என்னும் நான்கு உறுப்புக்கள் இடம் பெற்றுள்ளது. அவற்றைக் கீழே காண்போம்.

**1. எழுத்து (13)**

(4) "குறில்நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தமெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப் பாவனவே"

அசைக்கு உறுப்பாக வரும் எழுத்துக்கள் மொத்தம் பதிமூன்று ஆகும். அவை,

1. குறில்
2. நெடில்
3. உயிர்
4. குற்றியலிகரம்
5. குற்றியலுகரம்
6. ஐகாரகுறுக்கம்
7. ஆய்தம்
8. மெய்
9. வல்லினம்
10. மெல்லினம்
11. இடையினம்
12. உயிர்மெய்

13. அளபெடை (உயிரளபெடை, ஒற்றளபெடை)

என்பனவாகும்.

## 1. குறில்

(இ-ள்) குறில் என்பது குற்றெழுத்து :- அ, இ, உ, எ, ஒ என்ற ஐந்தும் ஆகும்.

“அ - இ - உ – எ – ஒ என்னும் அப்பால் ஐந்தும்

ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப”

## 2. நெடில்

நெடிலென்பது நெட்டெழுத்து :- ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்ற எழும் நெடில் ஆகும்.

“ஆ,ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்

ஈரளபிசைக்கும் நெட்டெழுத் தென்ப”

## 3. ஆவி (உயிர்)

ஆவி என்பது உயிரெழுத்துக்கள். அவை அகரமுதல் ஔகாரம் வரை உள்ள பன்னிரண்டு உயிரெழுத்துக்கள் ஆகும். அ, ஆ, இ,ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

“ஔகார இறுவாய்ப்

பன்னீரெழுத்தும் உயிரென மொழிப”

## 4,5,6 குறுகிய மூவுயிர்

1. குற்றியலிகரம்
2. குற்றியலுகரம்
3. ஐகாரக்குறுக்கம்

குறுகிய மூவுயிராவன, குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஐகாரக்குறுக்கமும் என்பனவாகும்.

### 4. குற்றியலிகரம்

குறுகிய இகரம் குற்றியலிகரமாகும். குற்றியலுகரத்தைத் தொடர்ந்து யகரம் வரும்போது அந்த குற்றியலுகரம் இகரமாகத் திரிந்து ஒலிக்கும். அவ்வாறு திரியும்போது அந்த இகரமும் குற்றிலுகரம் போன்று அரை மாத்திரை அளவில் ஒலிப்பதால் குற்றியலிகரம் ஆகும்.

உகரம் திரிந்தும், திரியாதும் யகரமோடு இயைபின்கண் வந்த இகரம் குற்றியலிகரம் என்றும் வழங்கப்படும்.

(எ.டு) நாகு+ யாது= நாகியாது
காசு + யாது = காசியாது
காடு + யாது = காடியாது
} உகரம் இகரமாக திரிந்து வந்துள்ளது

கேள் + மியா = கேண்மியா
செல் + மியா = சென்மியா
} திரியாது வந்த குற்றியலிகரம்

## 5. குற்றியலுகரம்

நெடிற்கீழ், நெடிலொற்றின் கீழ், குறிலிணைக் கீழ், குறிலிணை ஒற்றின் கீழ், குறல்நெடில்கீழ், குறில் நெடில் ஒற்றின் கீழ், குற்றொற்றின் கீழ் என இவ்வேழு இடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து வரும் உகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவினின்றும் குறுகி அரை மாத்திரையளவாக ஒலிக்கும். அவ்வாறு குறுகி ஒலிப்பது குற்றியலுகரம் எனப்படும்.

(எ.டு)

1. காடு, காது - நெடிற் கீழ் வந்த குற்றியலுகரம்
2. நாக்கு, காற்று - நெடிலொற்றின் கீழ் வந்த குற்றியலுகரம்
3. வரகு, முரசு - குறிலிணைக் கீழ் வந்த குற்றியலுகரம்
4. பொருப்பு, அரக்கு - குறிலிணைக் கீழ் வந்த குற்றியலுகரம்
5. அசோகு, கெடாது - குறில் நெடிற் கீழ் வந்த குற்றியலுகரம்
6. பனாட்டு, கடாத்து - குறில் நெடில் ஒற்றின் கீழ் வந்த குற்றியலுகரம்
7. கத்து, கற்று - குற்றொற்றின் கீழ் வந்த குற்றியலுகரம்

## 6. ஐகாரக்குறுக்கம்

ஐகாரமானது அளபெடுக்கும் போதும், தனியே 'ஐ' என்னும் எழுத்தைச் சொல்லும் போதும் தவிரப் பிற இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவினின்றும் குறுகி ஒலிக்கும். அவ்வாறு குறுகும்பொழுது, சொல்லின் முதல், இடை, கடை என்ற மூன்றிடத்திலும் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து

குறைந்து ஒலிக்கும். அவ்வாறு தன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ‘ஐகாரக்குறுக்கம்’ எனப்படும்.

(எ.டு) ஐந்து – மொழிமுதல்

இடையன் - மொழிஇடை

தாமரை - மொழிகடை

## 7. ஆய்தம்

மூன்று புள்ளி வடிவிலானது ஆய்தம். ஆய்தம் என்பது அஃகேனம், அஃகேனம் எனினும், ஆய்தம் எனினும், தனிநிலை எனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் இதனையே குறிக்கும்.

“அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி

ஒற்றிப் பால் ஐந்தும் இதற்கே”

(எ.க) எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு என வரும்.

## 8. மெய்

ககரமுதல் னகரம் வரையிலான பதினெட்டு எழுத்தும் மெய்யெழுத்தாகும். அவை,

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்பன.

“னகர இறுவாய்ப்

பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப்”

மெய்யெனினும் உடம்பெனினும், உறுப்பெனினும், ஒற்றெனினும், புள்ளியெனினும் ஒன்றாகும்.

## 9, 10, 11 மூவினம்

மூவினம் என்பது வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற மூன்றுமாகும். வல்லினமாவன :- க, ச, ட, த, ப, ற. மெல்லினமாவன : ங, ஞ, ண, ந, ம, ன. இடையினமாவன : ய, ர, ல, வ, ழ, ள.

“வல்லெழுத் தென்ப கசட தபற”

“மெல்லெழுத் தென்ப ஙஞண நமன”

“இடையெழுத் தென்ப யரல வழள”

என்பனவாகும்.

**9. வல்லினம்**

வல்லினம் என்பன : க், ச், ட், த், ப், ற் என்ற ஆறெழுத்தும் ஆகும்.

**10. மெல்லினம்**

மெல்லினம் என்பன : ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறெழுத்தும் ஆகும்.

**11. இடையினம்**

இடையினம் என்பன ய், ர், ல், வ், ழ், ள. என்ற ஆறெழுத்தும் ஆகும்.

**12. உயிர்மெய்**

பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யும் சேர்வதால் உண்டாகும் 216 எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் ஆகும்.

**13. அளபெடை (அளவு)**

அளபெடை இரண்டு வகைப்படும், அவை,

1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை

**உயிரளபெடை :**

உயிரெழுத்துக்களுள் நெட்டெழுத்துக்கள் ஏழும் அளபெடுக்கும், அவை அளபெடுக்குமிடத்து ஐகாரம் இகரத்தோடும், ஔகாரம் உகரத்தோடும் அளபெடுக்கும். பிற நெட்டெழுத்துக்கள் தமக்கினமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும்.

அளபெடை தனிநிலை, முதநிலை, இடைநிலை, இறுதிநிலை என்ற நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும்.

(எ.டு)

1. ஆஅ - தனிநிலை அளபெடை
2. ஓஒதல் - முதனிலை அளபெடை
3. எடுப்பதூஉம் - இடைநிலை அளபெடை
4. குரீஇ - இறுதிநிலை அளபெடை

**ஒற்றளபெடை :**

ஒற்றுக்களுக்குள் ங, ஞ, ந, ம, ன, வ, ய, ல, ள, ஆய்தம் என்னும் பதினோரொற்றும் குறிற்கீழும், குறிலிணைக் கீழும் வந்து அளபெடுக்கும்.

(எ.டு) மங்ங்கலம், அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு. குறிற்கீழ்ப் பதினோரொற்றும் அளபெடுத்தன.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு, முரன்ன்று, குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு.

குற்றிலிணைக்கீழ்ப் பதினோரொற்றும் அளபெடுத்தன.

இவ்விருப்பத்திரண்டு ஒற்றளபெடையும் செய்யுள்ளில்லாது உலக வழக்கில் வாரா.

### மாத்திரை

ஒரு எழுத்தை ஒலிக்கக்கூடிய கால அளவு மாத்திரை என்று கூறப்படுகிறது. கண் இமைக்கும் நேரம் அல்லது கைவிரல்கள் நொடிக்கும் நேரம் காலஅளவாகக் கருதப்படுகிறது.

| | | |
|---|---|---|
| குறில்எழுத்து, ஒற்றளபெடை | - | 1 மாத்திரை |
| நெடில்எழுத்து | - | 2 மாத்திரை |
| உயிரளபெடை | - | 3 மாத்திரை |
| ஐகாரக்குறுக்கம் | - | ஒன்றரை மாத்திரை |
| ஔகாரக்குறுக்கம் | - | ஒன்றரை மாத்திரை |
| குற்றியலுகரம், குற்றியலிகரம் | - | அரை மாத்திரை |
| மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் | - | கால் மாத்திரை |

## 2. அசை

எழுத்துக்கள் சேர்ந்து இசை கொள்வது அசை எனப்படும். இது 1. நேரசை, 2. நிரையசை என இரண்டு வகைப்படும்.

(5) “குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே
நெறியே வரினும் நிறைந்தொற் றடுப்பினும் நேர்நிரையென்று
அறிவேய் புரையுமென் தோளி உதாரணம் ஆழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே”

**1. நேரசை**

குறில் தனியே வந்தாலும், நெடில் தனியே வந்தாலும், குறிலுக்கு அடுத்து ஒற்று வந்தாலும், நெடிலுக்கு அடுத்து ஒற்று வந்தாலும் நேரசை ஆகும்.

(எ.டு)

| | | |
|---|---|---|
| க | - | குறில் தனியே வந்த நேரசை |
| கல் | - | குறிலுக்கு அடுத்து ஒற்று வந்த நேரசை |
| கா | - | நெடில் தனியே வந்த நேரசை |
| கால் | - | நெடிலுக்கு அடுத்து ஒற்றுவந்த நேரசை |

**2. நிரையசை**

குறில் இணைந்து வந்தாலும், குறில்நெடில் இணைந்து வந்தாலும், குறில் இணைந்து ஒற்று அடுத்து வந்தாலும், குறில்நெடில் இணைந்து ஒற்று அடுத்து வந்தாலும் நிரையசை ஆகும்.

(எ.டு)

| | | |
|---|---|---|
| பல | - | குறில் இணைந்து வந்த நிரையசை |
| பலம் | - | குறில் இணைந்து ஒற்று அடுத்து வந்த நிரையசை |
| கலா | - | குறில்நெடில் இணைந்து வந்த நிரையசை |
| கலாம் | - | குறில்நெடில் இணைந்து ஒற்று அடுத்து வந்த நிரையசை |

**நேரசை நான்கும் வந்த செய்யுள் :**

"போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே" (யா.க.கா. ப.21)

**நிரையசை நான்கும் வந்த செய்யுள்**

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிகழ அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே" (யா.க.கா. ப.21)

## 3. சீர்

அசைகள் தனித்தோ தொடர்ந்தோ அமைவது சீர் ஆகும். சீர்கள் முப்பதாகும். அவை நான்கு வகைப்படும்,

1. ஓரசைச்சீர் - 2
2. ஈரசைச்சீர் - 4
3. மூவசைச்சீர் - 8
4. நாலசைச்சீர் - 16

30

(6) "ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே"

**1. ஓரசைச்சீர் - 2 (அசைச்சீர்)**

பெரும்பாலும் இரண்டு அசை சேர்ந்துதான் சீர் உண்டாகும். சிறுபான்மையாக ஏதேனும் ஓரிடத்தில் ஒரு அசை கூடச் சீராக நிற்றல் உண்டு. வெண்பாவின் இறுதியடியில் இறுதிச்சீர் அவ்வாறு நிற்கும் அதாவது ஒரு அசையாக நிற்கும். ஆனாலும் அது சீராகக் கருதப்படும்.

"நேரசை தானே நின்று சீராகும்"
"நிரையசை தானே நின்று சீராகும்"

(எ.டு) நேர்
நிரை

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்"

நீர் – நேர்

"வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்"

சொலல் - நிரை

ஓரசைச்சீர் 'அசைச்சீர்' என்று வேறு பெயராலும் வழங்கப்படும்.

**2. ஈரசைச்சீர் - 4 (ஆசிரிய உரிச்சீர்)**

இரண்டு அசையினாலாகிய நான்கு சீரும் அகவற்பாவிற்கு உரியதாகும். அகவற்பா எனவும் பெயர் பெறும். ஆதலின் இரண்டு அசையினால் வரும் சீர் ஆசிரிய உரிச்சீர் எனப்படும்.

(எ.டு) நேர் நேர்

நிரை நேர்

நிரை நிரை

நேர் நிரை

"குன்றக் குறவன் காதல் மடமகள்

வரையர மகளிர் புரையுஞ் சாயலள்

ஐயள் அரும்பிய முலையள்

செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே" (யா.க.கா. ப.27)

இச்செய்யுளில் ஆசிரிய உரிச்சீர் நான்கும் வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| குன்ற க் | - | நேர் நிரை |
| குற வன் | - | நிரை நேர் |
| வரை யர | - | நிரை நிரை |
| சா யலள் | - | நேர் நிரை |

இவை இயற்சீர் என்றும் ஈரசைச்சீர்கள் என்றும் வேறு பெயர்களால் வழங்கப்படும். ஆசிரியப்பாவில் மிகுதியும் பயிலுவதால் இவை ஆசிரியவுரிச்சீர் எனப்பட்டன.

**3. மூவசைச்சீர் - 4 (வெண்பா உரிச்சீர்)**

நேரசையால் முடியும் மூவசைச்சீர் நான்கும் வெண்பா உரிச்சீர் எனப்படும்.

(எ.டு) நேர் நேர் நேர்
நிரை நேர் நேர்
நிரை நிரை நேர்
நேர் நிரை நேர்

"பொன்னார மார்பிற் புனைகழற்காய் கிள்ளிபோர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேன் - கென்னோ
புன்னாடன் பேரே வரும்" (யா.க.கா. ப.28)

இச்செய்யுளில் வெண்பா உரிச்சீர் நான்கும் வந்தன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உன் | னே | னென் | - | நேர் | நேர் | நேர் |
| புன | னா | டன் | - | நிரை | நேர் | நேர் |
| புனை | கழற் | காற் | - | நிரை | நிரை | நேர் |
| றூ | ழுலக் | கை | - | நேர் | நிரை | நேர் |

வெண்பாவில் மிகுதியும் பயிலுவதால் இவை வெண்பாவுரிச்சீர் எனப்பட்டன.

**4. மூவசைச்சீர் - 4 (வஞ்சியுரிச்சீர்)**

நிரை என்பதை இறுதியாக பெற்று வரும் நான்கு சீரும் வஞ்சிவுரிச்சீர் எனப்பட்டன.

(எ.டு) நேர் நேர் நிரை

நிரை நேர் நிரை

நிரை நிரை நிரை

நேர் நிரை நிரை

"பூந்தாமரைப் போதலமரத்
தேன்புனலிடை மீன்றரிதரும்
வளவயலடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம் பலைக் கயலார்ப் பவும்நாளும்
மகிழுமகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே" (யா.க.கா. ப.28)

இப்பாடலில் வஞ்சியுரிச்சீர் நான்கும் வந்தன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பூந் | தா | மரைப் | - | நேர் | நேர் | நிரை |
| வினைக் | கம் | பலை | - | நிரை | நேர் | நிரை |
| வள | வய | லிடைக் | - | நிரை | நிரை | நிரை |
| மீன் | றரி | தரும் | - | நேர் | நிரை | நிரை |

வஞ்சிப்பாவில் மிகுதியும் பயிலுவதால் இவை வஞ்சியுரிச்சீர் எனப்பட்டன.

**5. நாலசைச்சீர் - 16 (பொதுச்சீர்)**

நான்கு அசையினாலாகிய சீர் நாலசைச்சீர் அல்லது பொதுச்சீர் எனப்படும்.

(எ.டு)

(1) நேர் நேர் நேர் நேர்
நிரை நேர் நேர் நேர்
நிரை நிரை நேர் நேர்
நேர் நிரை நேர் நேர்

ஈரசைச்சீர்

நேர் நேர்
நிரை நேர்
நிரை நிரை
நேர் நிரை

என்ற நான்கோடு நேர் நேர் என்பதைச் சேர்க்க நான்கு சீர் வந்தது.

(2) நேர் நேர் நிரை நேர்
நிரை நேர் நிரை நேர்
நிரை நிரை நிரை நேர்
நேர் நிரை நிரை நேர்

ஈரசைச்சீர்

நேர் நேர்

நிரை நேர்

நிரை நிரை

நேர் நிரை

என்ற நான்கோடு நிரை நேர் என்பதைச் சேர்க்க நான்கு சீர் வந்தது.

(3) நேர் நேர் நிரை நேர்

நிரை நேர் நிரை நேர்

நிரை நிரை நிரை நேர்

நேர் நிரை நிரை நேர்

ஈரசைச்சீர்

நேர் நேர்

நிரை நேர்

நிரை நிரை

நேர் நிரை

என்ற நான்கோடு நேர் நிரை என்பதைச் சேர்க்க நான்கு சீர் வந்தது.

(2) நேர் நேர் நிரை நேர்
நிரை நேர் நிரை நிரை
நிரை நிரை நிரை நிரை
நேர் நிரை நிரை நிரை

ஈரசைச்சீர்

நேர் நேர்
நிரை நேர்
நிரை நிரை
நேர் நிரை

என்ற நான்கோடு நேர் நிரை என்பதைச் சேர்க்க நான்கு சீர் வந்தது.

"அங்கண்வானத்தமரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார் கூந்தல் மங்கையரும்
கடிமலரேந்திக் கழந்திறைஞ்சக்
சிங்கஞ்சுமந்த மணியணிமிசை
கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்
செழுநீர்ப்பவளத்திரள்காம்பின்
முழுமதிபுரையு முக்குடைநீழல்
வேங்கண்வினைப்பகை விளிவெய்தப்
பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப
அனந்தசதுட்டய மவைபெய்த
நனைந்தலையுலகுட னவைநீங்க
மந்தமாருத மருங்கசைப்ப
அந்தரதுந்துபி நின்றியம்ப
இலங்குசாமரை யெழுந்தலமர
நலங்கிளர்பூமழை நனிசொரிதர இனிதிருந்
தருணெறி நடாத்திய ஆதிதன்
திருவடிபரவுதுஞ் சித்திபெற்ற பொருட்டே" (யா.க.கா. ப. 29)

இப்பாடலில் பொதுச்சீர் பதினாறும் வந்தன.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அங் | கண் | வா | னத் | - | நேர் | நேர் | நேர் | நேர் |
| வடி | வார் | கூந் | தல் | - | நிரை | நேர் | நேர் | நேர் |
| கடி | மல | ரேந் | திக் | - | நிரை | நிரை | நேர் | நேர் |
| வெங் | களி | யா | னை | - | நேர் | நிரை | நேர் | நேர் |
| சிங் | கஞ் | சுமந் | த | - | நேர் | நேர் | நிரை | நேர் |
| செழு | நீர்ப் | பவ | ளத் | - | நிரை | நேர் | நிரை | நேர் |
| முழு | மதி | புரை | யும் | - | நிரை | நிரை | நிரை | நேர் |
| கொங் | கவி | ரசோ | கின் | - | நேர் | நிரை | நிரை | நேர் |
| மந் | த | மா | ருத | - | நேர் | நேர் | நேர் | நிரை |
| இலங் | கும் | சா | மரை | - | நிரை | நேர் | நேர் | நிரை |
| நலங் | கிளர் | பூ | மழை | - | நிரை | நிரை | நேர் | நிரை |
| அந் | தர | துந் | துபி | - | நேர் | நிரை | நேர் | நிரை |
| வெங் | கண் | வினைப் | பகை | - | நேர் | நேர் | நிரை | நிரை |
| அளந் | தச | துட் | டய | - | நிரை | நேர் | நிரை | நிரை |
| நனந் | தலை | யுல | குட | - | நிரை | நிரை | நிரை | நிரை |
| பொன் | புனை | நெடு | மதில் | - | நேர் | நிரை | நிரை | நிரை |

‘ஈரசை நாற் சீர் அகவற்குரிய’ எனக் காரிகை தொடங்குகின்றது. இந்த அடியில் வந்துள்ள ‘நூல்’ (நன்கு) என்பதை எல்லாவற்றோடும் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். இடையில் இந்த ‘நூல்’ என்ற சொல் வந்தபடியால் இது மத்திம தீபம் (இடைநிலை விளக்கு) எனப்படும். இடையில் உள்ள விளக்கு அப்புறமும் இப்புறமும் ஒளி தருதல் போல இந்த ‘நூல்’ என்னும் சொல் பல இடங்களில் இணைந்து பொருள் தரும். ஆதனால் ஈரசையால் வந்த மூவசைச்சீர் நான்கும் வெண்பா இனமாம். நிரையான இருபத்தி நான்கும் வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர் என்று நான்கு என்பதை ஒவ்வொரு தொடரோடும் சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும். மத்திம தீபம் என்பது ஒருவகை அணி.

## வாய்பாடு

ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர் இவைகளை நினைவில் வைத்துக் கொள்ளுவதற்கு உதவியாக 'தேமா புளிமா கருவிளம் கூவிளம்' எனத் தொடங்கும் காரிகை இயற்றப்பட்டுள்ளது.

(7) "தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குல் மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த அரைச்சீர்க் குதாரணம் நாள்மலரே"

### ஆசிரிய உரிச்சீருக்குரிய வாய்பாடு

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கும் ஆசிரிய உரிச்சீருக்குரிய வாய்பாடு ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (எ.டு) | தேமா | - | நேர் | நேர் |
| | புளிமா | - | நிரை | நேர் |
| | கருவிளம் | - | நிரை | நிரை |
| | கூவிளம் | - | நேர் | நிரை |

### வெண்பா உரிச்சீருக்குரிய வாய்பாடு

'கடைகாய் அடையின் வெண்பாவிற்கு' என்ற காரிகையடியானது தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்ற நான்கு வாய்பாட்டுன் காய் என்பதைக் கடைசியில் சேர்த்தால் வெண்பா உரிச்சீருக்கு உதாரணமாகிய வாய்பாடு அமையும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.டு) | தேமாங்காய் | - | நேர் | நேர் | நேர் |
| | புளிமாங்காய் | - | நிரை | நேர் | நேர் |
| | கருவிளங்காய் | - | நிரை | நிரை | நேர் |
| | கூவிளங்காய் | - | நேர் | நிரை | நேர் |

### வஞ்சியுரிச்சீருக்குரிய வாய்பாடு

'அந்தம் கனியாக வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்' என்ற காரிகையடியானது தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் ஆகிய நான்கு வாய்பாட்டுடன் கனி என்பதைக் கடைசியில் சேர்த்தால் அவை நான்கும் வஞ்சியுரிச்சீருக்குரிய வாய்பாடு ஆகும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (எ.டு) | தேமாங்கனி | - | நேர் | நேர் | நிரை |
| | புளிமாங்கனி | - | நிரை | நேர் | நிரை |
| | கருவிளங்கனி | - | நிரை | நிரை | நேர் |
| | கூவிளங்கனி | - | நேர் | நிரை | நிரை |

## அசைச்சீருக்குரிய வாய்பாடு

நேர், நிரை என்று சொல்லப்பட்ட ஓரசைச்சீருக்கு வாய்பாடு நாள் (நேர்) மலர் (நிரை) என்பனவாகும்.

| | | |
|---|---|---|
| நாள் | - | நேர் |
| மலர் | - | நிரை |

## பொதுச்சீருக்குரிய வாய்பாடு

(8) “தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்துறழ்நதால்
எண்ணிரு நாலசைச் சீர்வந் தருகும் இனியவற்றுட்
கண்ணிய பூவினங் காய்ச்சீ ரனைய கனியொடொக்கும்
ஒண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கும் ஒண்தளைக்கே”

தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்து உறழ்ந்தால் எண் இரு நாலசைச்சீர் வந்து அருகும் என்பது.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் ஈரசைச்சீருடன் தண்பூ, நறும்பூ, தண்நிழல், நறுநிழல் ஆகியவற்றைச் சேர்த்தால் பதினாறு நாலசைச் சீர்களும் வரும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (எ.டு) | தேமாந்தண்பூ | - | நேர் | நேர் | நேர் | நேர் |
| | புளிமாந்தண்பூ | - | நிரை | நேர் | நேர் | நேர் |
| | கருவிளந்தண்பூ | - | நிரை | நிரை | நேர் | நேர் |
| | கூவிளந்தண்பூ | - | நேர் | நிரை | நேர் | நேர் |
| | தேமாநறும்பூ | - | நேர் | நேர் | நிரை | நேர் |
| | புளிமாநறும்பூ | - | நிரை | நேர் | நிரை | நேர் |
| | கருவிளநறும்பூ | - | நிரை | நிரை | நிரை | நேர் |
| | கூவிளநறும்பூ | - | நேர் | நிரை | நிரை | நேர் |
| | தேமாந்தண்ணிழல் | - | நேர் | நேர் | நேர் | நிரை |
| | புளிமாந்தண்ணிழல் | - | நிரை | நேர் | நேர் | நிரை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கருவிளந்தண்ணிழல் | - | நிரை | நிரை | நேர் | நிரை |
| கூவிளந்தண்ணிழல் | - | நேர் | நிரை | நேர் | நிரை |
| தேமா நறுநிழல் | - | நேர் | நேர் | நிரை | நிரை |
| புளிமா நறுநிழல் | - | நிரை | நேர் | நிரை | நிரை |
| கருவிள நறுநிழல் | - | நிரை | நிரை | நிரை | நிரை |
| கூவிள நறுநிழல் | - | நேர் | நிரை | நிரை | நிரை |

சீர்களுக்கு எவ்வாறு தளை கொள்வது என்பது குறித்து 8 –ஆம் காரிகையின் இறுதி இருவரிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'இனி அவற்றுள் கண்ணிய பூ இனம் காய்ச்சீர் அளைய' என்பது தண்பூ என்றும், நறும்பூ என்றும் முடியும் எட்டுச் சீரும் தளை கொள்ளும்போது காய்ச்சீர் போலக் கொண்டு வருஞ்சீர் முதலில் நேர் அசை சவந்தால் வெண்சீர் வெண்டளையாகும். வருஞ்சீர் முதல் அசையோடு ஒன்றாதது (அதாவது வருஞ்சீர் முதலில் நிரை இருந்தால்) கலித்தளையாகும்.

தேமாந் தண் பூ முதல் கூவிளநறும்பூ வரையுள்ள எட்டு நாலசைச் சீரையும் தேமாங்காய் என்ற மூவசைச் சீர் போலக் கொள்ள வேண்டும்.

'கனியொடு ஒக்கும் ஒண்நிழற் சீர்' என்பது தண்நிழல், நறுநிழல் என முடியும் எட்டு நாலசைச் சீரும் தேமாங்கனி என்ற மூவசைச் சீர் போலக் கொள்ளப்படும். தளை கொள்ளும்போது வருஞ்சீர் முதல் அசை நேராக இருந்தால் ஒன்றாத வஞ்சித்தளை என்றும், நிரையாக இருந்தால் ஒன்றிய வஞ்சித் தளை என்றும் கொள்ளப்படும்.

'அசைச்சீர் ஒக்கும்' என்பது ஓரசைச்சீர் (நாள், மலர்) ஈரசைச்சீர் போல (ஆசிரிய உரிச்சீர் போல, இயற்சீர் போல) கொள்ளப்பட்டு வருஞ்சீர் முதல் அசையோடு ஒன்றினால் ஆசிரியத்தளையாகவும், ஒன்றாவிட்டால் இயற்சீர் வெண்டளையாகவும் கொள்ளப்படும்.

8–ஆம் காரிகையில் 'கண்ணிய பூவினம்' என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டதால் எங்கெங்கே நாலசைச்சீர் வரும். எங்கெங்கே நாலசைச்சீர் வராது என்பது ஆசிரியரால் விளக்கப்பட்டுள்ளது.

வெண்பாவில் நாலசைச்சீர் வாரா. ஆசிரியப்பாவில் குற்றியலுகரம் வரும்போது மட்டும் வரலாம். கலிப்பாவிலும் பெரும்பாலும் குற்றியலுகரம் வரும்போது மட்டும்

வரலாம். வஞ்சிப்பாவில் குற்றியலுகரம் வராமல் வரப்பெறும். இப்பாவில் இரண்டு நாலசைச்சீர்கள் ஒரே அடியில் நிற்கலாம். பிற பாக்களில் ஓரடியில் ஒன்று மட்டும் வரும். பாவினத்துள்ளும் பயின்று வாரா.

“நாலசை யானடை பெற்றன வஞ்சியுள்

ஈரொன் றணைதலு மேனுழி யொன்றுசென்

றாகலும் அந்தம் நிரையசை எந்தன

கூறிய வஞ்சிக் குரியா ஆகலும்

ஆகுமென்ப அறிந்திசி னோரே”

என்று காக்கைப்பாடினியார் கூறியுள்ளார்.

ஒரு சாரார் வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைச்சீர் வருமென்று கூறுவர். அக்கருத்துப் பொருந்தாது. அலகிட்டு உதாரண வாய்ப்பாட்டால் ஓசையூட்டும்போது செப்பலோசை தவறும். அங்குச் சீரும் தளையும் சிதைய வாராமையால் அவை அளபெடுப்பன அல்ல. அளபெடுத்தாலும் அவ்வளபடைகள் அலகு காரியம் பெறமாட்டா. இது காக்கைப்பாடினியார் முதலிய தொல்லாசிரியர்க்கும் உடன்பாடாகும்.

**உதாரண இலக்கிய முதனினைப்புச் செய்யுள் :**

(9) “குன்றக் குறவன் அகவல்பொன் னாரம்வெண் பாட்டு வஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப ஓரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றதென் னாரள்ளற் பள்ளத்தி னோடங்கண் வானத்துமே”

காரிகை நூலில் எந்த நூலிலும் இல்லாத ஒரு புதுமையைக் காணலாம். ஆசிரிய உரிச்சீராகிய (இயற்சீர் நான்கு, அவை தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்) நான்கு சீரும் வந்துள்ளமைக்குக் ‘குன்றக் குறவன்’ என்று தொடங்கும் மேற்கண்ட பாடலை (9) ஆசிரியர் காட்டியுள்ளார்.

**ஆசிரிய உரிச்சீர் :**

(எ.டு) “குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயன் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே”

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| குன் | றக் | - | நேர் | நேர் | - | தேமா |
| குற | வன் | - | நிரை | நேர் | - | புளிமா |
| வரை | யர | - | நிரை | நிரை | - | கருவிளம் |
| சா | யலள் | - | நேர் | நிரை | - | கூவிளம் |

**வெண்பா உரிச்சீர் :**

(எ.டு) "பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபேர்

உன்னேனென் றூழுலக்கை பற்றினேன் - கென்னோ

மன்னொடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழிப்

புன்னாடன் பேரே வரும்"

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பொன் | னா | ர | - | நேர் | நேர் | நேர் | - | தேமாங்காய் |
| புன் | னா | டன் | - | நிரை | நிரை | நேர் | - | கருவிளங்காய் |
| றூ | ழுலக் | கை | - | நேர் | நிரை | நேர் | - | கூவிளங்காய் |

**வஞ்சியுரிச்சீர்**

(எ.டு) "பூந்தாமரைப் போதலமரத்

தேம்புனலிடை மீன்றரிதரும்

வளவயலிடைக் களவயின்மகிழ்

வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்

மனைச்சிலம்பிய மணமுரசொலி

வயற்கம்பலைக் கயலார்பவும் நாளும்
மகிழு மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே"

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பூந் | தா | மரைப் | - | நேர் | நேர் | நிரை | - | தேமாங்கனி |
| வினைக் | கம் | பலை | - | நிரை | நேர் | நிரை | - | புளிமாங்கனி |
| வள | வய | லிடைக் | - | நிரை | நிரை | நிரை | - | கருவிளங்கனி |
| மீன் | றரி | தரும் | - | நேர் | நிரை | நிரை | - | கூவிளங்கனி |

**அசைச்சீர்**

(எ.டு) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயி றூறிய நீர்"

நீர் – நேர் – நாள்

“வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்

தீமை யிலாத சொலல்”

சொல் - நிரை – மலர்

### பொதுச்சீர்

(எ.டு) “அங்கண்வானத்தமரரசரும்

வெங்களியானை வேல்வேந்தரும்

வடிவார் கூந்தல் மங்கையரும்

கடிமலரேந்திக் கழந்திறைஞ்சக்

சிங்கஞ்சுமந்த மணியணிமிசை

கொங்கவிரசோகின் குளிர்நிழற்கீழ்ச்

செழுநீர்ப்பவளத்திரள்காம்பின்

முழுமதிபுரையு முக்குடைநீழல்

வெங்கண்வினைப்பகை விளிவெய்தப்

பொன்புனைநெடுமதில் புடைவளைப்ப

அனந்தசதுட்டய மவைபெய்த

நனைந்தலையுலகுட னவைநீங்க

மந்தமாருத மருங்கசைப்ப

அந்தரதுந்துபி நின்றியம்ப

இலங்குசாமரை யெழுந்தலமர

நலங்கிளர்பூமழை நனிசொரிதர இனிதிருந்

தருணெறி நடாத்திய ஆதிதன்

திருவடிபரவுதுஞ் சித்திபெற்ற பொருட்டே” (யா.க.கா. ப. 29)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அங் | கண் | வா | னத் | - | நேர் | நேர் | நேர் | நேர் | - | தேமாந்தண்பூ |
| வடி | வார் | கூந் | தல் | - | நிரை | நேர் | நேர் | நேர் | - | புளிமாந்தண்பூ |
| கடி | மல | ரேந் | திக் | - | நிரை | நிரை | நேர் | நேர் | - | கருவிளந்தண்பூ |
| வெங் | களி | யா | னை | - | நேர் | நிரை | நேர் | நேர் | - | கூவிளந்தண்பூ |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிங் | கஞ் | சுமந் | த | - | நேர் | நேர் | நிரை | நேர் | - | தேமாறும்பூ |
| செழு | நீர்ப் | பவ | ளத் | - | நிரை | நேர் | நிரை | நேர் | - | புளிமாறும்பூ |
| முழு | மதி | புரை | யும் | - | நிரை | நிரை | நிரை | நேர் | - | கருவிளநறும்பூ |
| கொங் | கவி | ரசோ | கின் | - | நேர் | நிரை | நிரை | நேர் | - | கூவிளம்நறும்பூ |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மந் | த | மா | ருத | - | நேர் | நேர் | நேர் | நிரை | - | தேமாந்தண்ணிழல் |
| இலங் | கும் | சா | மரை | - | நிரை | நேர் | நேர் | நிரை | - | புளிமாந்தண்ணிழல் |
| நலங் | கிளர் | பூ | மழை | - | நிரை | நிரை | நேர் | நிரை | - | கருவிளந்தண்ணிழல் |
| அந் | தர | துந் | துபி | - | நேர் | நிரை | நேர் | நிரை | - | கூவிளந்தண்ணிழல் |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெங் | கண் | வினைப் | பகை | - | நேர் | நேர் | நிரை | நிரை | - | தேமாநறுநிழல் |
| அளந் | தச | துட் | டய | - | நிரை | நேர் | நிரை | நிரை | - | புளிமாநறுநிழல் |
| நனந் | தலை | யுல | குட | - | நிரை | நிரை | நிரை | நிரை | - | கருவிளநறுநிழல் |
| பொன் | புனை | நெடு | மதில் | - | நேர் | நிரை | நிரை | நிரை | - | கூவிளநறுநிழல் |

8 – ஆம் காரிகையில் நாலசைச்சீர் வந்து அருகும் என்று கூறப்பட்டிருப்பதனால் நாலசைச்சீர் செய்யுளில் சிறுபான்மையாக வரும்.

## 4. தளை

நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதல் அசையும் ஒன்றியும் (பொருந்தினாலும்) ஒன்றாதும் வருவது தளை எனப்படும். தளை என்பதற்கு கட்டுதல், பொருத்துதல், இணைத்தல் என்றும் பொருள் கூறுவர்.

(10) “தண்சீர் தனதொன்றில் தன்தளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்தளையாம்
ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும் ஒண்ணுதலே”

**தளையின் வகைகள் :**

1. நேரொன்றாசிரியத்தளை } ஆசிரியப்பாவிற்கு உரியன
2. நிரையொன்றாசிரியத்தளை

3. இயற்சீர் வெண்டளை } வெண்பாவிற்கு உரியன
4. வெண்சீர் வெண்டளை
5. கலித்தளை — கலிப்பாவிற்குரியது
6. ஒன்றியவஞ்சித்தளை } வஞ்சிப்பாவிற்கு உரியன
7. ஒன்றாத வஞ்சித்தளை

**1. நேரொன்றாசிரியத்தளை (மா முன் நேர் வருவது)**

ஆசிரிய உரிச்சீர் (தேமா, புளிமா) நின்று, தன் வருஞ்சீர் முதலசையோடு நேராயொன்றுவது நேரொன்றாசிரியத்தளை.

(எ.டு) குற வன் கா தல்

மா நேர்

**2. நிறையொன்றாசிரியத்தளை (விள முன் நிரை வருவது)**

ஆசிரியை உரிச்சீர் (கருவிளம், கூவிளம்) நிற்க தன் வருஞ்சீர் நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத்தளை.

(எ.டு) வரை யர மக ளிர்

விள நிரை

**3. இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை, விள முன் நேர் வருவது)**

ஆசிரிய உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளை.

(எ.டு) மக ளிர் புரை யும்

மா நிரை

சா யலள் ஐ யள்

விள நேர்

**4. வெண்சீர் வெண்டளை (காய் முன் நேர் வருவது)**

வெண்பா உரிச்சீர் (தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய்) நின்று, தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை.

(எ.டு) சிலை விலங்கு நீள் புறா வஞ்

காய் நேர்

**5. கலித்தளை (காய் முன் நிரை வருவது)**

வெண்பா உரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது கலித்தளையாம்.

(எ.டு) செல் வப் போர்க்கதக் கண் ணன்
காய் நிரை

**6. ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரை வருவது)**

வஞ்சியுரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம்.

(எ.டு) வெண்சா மரை புடை பெயர் தரச்
கனி நிரை

**7. ஒன்றாத வஞ்சித்தளை (கனி முன் நேர் வருவது)**

வஞ்சியுரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையாம்.

(எ.டு) பூந் தா மரை போ தல மர
கனி நேர்

**தண்சீர்**

ஈரசைச்சீர் நின்று வருமொழியிலும் ஈரசைச்சீர் வந்தால் இரண்டும் தண்சீர் எனப்படும்.

(எ.டு) குற வன் கா தல் நின்ற சீரும் ஈரசையுடைய சீர், வருஞ்சீரும் ஈரசையுடைய சீர் இது தண்சீர் எனப்படும். (நேரொன்றாசிரியத்தளை)

**பிறிதாகி வருஞ்சீர்**

நின்ற சீர் ஈரசையாக இருந்து வருஞ்சீர் மூன்று அசையுடைய சீராக வருதலும் உண்டு. அவ்வாறு வந்தால் அது பிறிதாகி வருஞ்சீர் எனப்படும்.

நின்ற சீர் மூன்று அசைச் சீராக நின்று வருஞ்சீர் இரண்டசைச் சீராக வந்தால் அது பிறிதாகி வருஞ்சீர் எனப்படும்.

(எ.டு) பிடி யின் புறத் தசைத் த
(இருசீர்) (மூன்று சீர்)
கமழ் கின் ற காந் த
(மூன்றுசீர்) (இருசீர்)

**உதாரண இலக்கிய முதல் நினைப்புச் செய்யுள் :**

காரிகை 11 –ல் ஒவ்வொரு தளையும் வந்தப் பாடலை ஆசிரியர் உதாரணம் காட்டியுள்ளார்.

(11) "திருமழை உள்ளார் அகவல் சிலைவிலங் காகும் வெள்ளை
மருளறு வஞ்சிமந் தாநிலம் வந்துமை தீர்கலியின்
தெரிவுறு பந்தல்நல் லாய் செல்வப் போக்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை ஓரசைச் சீருக் குதாரணமே"

**1. நேரொன்றாசிரியத்தளை (மா முன் நேர் வருவது)**

(எ.டு) "உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குலை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில்பொதி பவளம் ஏய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே" (யா.க.கா. ப.33)

'உள் ளார் கொல் லோ"
மா நேர்

**2. நிரையொன்றாசிரியத்தளை (விள முன் நிரை வருவது)**

(எ.டு) "திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப்
பண்ணமைந் தவர்தேர் சென்ற வாறே"

திரு மழை தலை இய
விள நிரை

இப்பாடலில் விள முன் நிரை வந்தபடியால் நிரையொன்றாசிரியத்தளை வந்தது.

**3. இயற்சீர் வெண்டளை (மா முன் நிரை, விள முன் நேர் வருவது)**

(எ.டு) "சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் - மலை விலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும்போது"

மார் ப தனி மை
மா நிரை

இதில் மா சீர் நிரை வந்தமையால் இயற்சீர் வெண்டளை

“பொறுக்கு மோ கார் மாலை”

விள நேர்

இதில் விள முன் நேர் வந்தபடியால் இயற்சீர் வெண்டளை.

**4. வெண்சீர் வெண்டளை (காய் முன் நேர் வருவது)**

(எ.டு) “சீலை விலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி”

காய் நேர்

இப்பாடலில் காய் முன் நேர் வந்தபடியால் வெண்சீர் வெண்டளை.

**5. கலித்தளை (காய் முன் நிரை வருவது)**

(எ.டு) “செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி

முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்

எல்லைநீர் வியன்கொண்மு இடைநுழையு மதியம்போல்

மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே” (யா.க.கா. ப.34)

“செல்வப்போர்க் கதக்கண்ணன்”

காய் நிரை

இதில் காய் முன் நிரை வந்தபடியால் கலித்தளை.

**6. ஒன்றிய வஞ்சித்தளை (கனி முன் நிரை வருவது)**

(எ.டு) “மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை என வாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
மனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே”

“வெண் சா மரை புடைபெயர்தரச்”
கனி நிரை

இதில் கனி முன் நிரை வந்தபடியால் ஒன்றிய வஞ்சித்தளை.

**7. ஒன்றாத வஞ்சித்தளை (கனி முன் நேர் வருவது)**

(எ.டு) “செந் தா மரை நாண் மலர் மிசை”
கனி நேர்

இதில் கனி முன் நேர் வந்தபடியால் ஒன்றாத வஞ்சித்தளை.

# அலகு – 2

## (அடி, தொடை)

### 5. அடி

சீர்கள் இரண்டும் இரண்டுக்கு மேற்பட்டனவும் அடுத்து வருவது அடி எனப்படும். அடுத்து நடத்தலால் இது அடி எனப்படுகிறது.

(12) “குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை அளவோடு நேரடி ஐயொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோள்
கறைகெழு வேற்கணல் வாய்மிக்க பாதங் கழிநெடியே”

**அடியின் வகைகள் :**

1. குறளடி
2. சிந்தடி
3. அளவடி (நேரடி)
4. நெடிலடி
5. கழிநெடிலடி

என ஐந்து வகைப்படும்.

**1. குறளடி**

இரண்டு சீர்களால் வந்த அடி குறளடி

(எ.டு) “திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொள் மாலையாய்” (யா.க.கா. ப.36)

**2. சிந்தடி**

மூன்று சீர்களால் வந்த அடி சிந்தடி

(எ.டு) “இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுமறக் கத்தினோ

டரிது வேற்றுமை யாகவே

கருது வேற்றடங் கையினாய்”　　　　(யா.க.கா. ப.36)

### 3. அளவடி (சிந்தடி)

நான்கு சீர்களால் வந்த அடி சிந்தடி

(எ.டு) “தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா

மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்

மாம்பழக் களிகளு மதுத்தண் டீட்டமும்

தாம்பழுத் துளசில தவள மாடமே”　　　　(யா.க.கா. ப.36)

### 4. நெடிலடி

ஐந்து சீர்களால் வந்த நெடிலடி

(எ.டு) “வென்றான் வினையின் தொகையாய் விரிந்து தன்கண்

ஒன்றாய் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்

சென்றான் திகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி

நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்”　(யா.க.கா. ப.36)

### 5. கழிநெடிலடி

அறுசீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களால் வந்த அடி கழிநெடிலடி

(எ.டு) அறுசீர்க்கழிநெடிலடி

“இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்

இனவெண்டு புடைசூழ

நுரைக்க ளென்னுமக் குழம்புகள் திகழ்ந்தநெழ

நுடங்கிய விலையத்தால்

திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத்

திரள்களைக் கரைமேல்வைத்

தரைக்கு மாற்றிது குணகடல் திரையொடு

பொருதல தவியாதே”

எழுச்சீர் கழிநெடிலடி

கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு

கமழ்கின்ற காந்த ளிதழால்

அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி

அகிலாவி குஞ்சி கமழ

மணிக்குண் டலங்கள் இருபாலும் வந்து

வரையாக மீது திவளத்

துணிகொண் டிலங்கு சுடர்வேலி னோடு

வருவானி தென்கொல் துணிவே" (யா.க.கா. ப.37)

எண்சீர்க்கழிநெடிலடி

மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நூண

முழுதுலக மூடியெழின் முளைவயிர நாற்றித்

தூவடிவி னாவிலக்கு வெண்குடையி னிழற்

சுடரோயுன் அடிபோற்றிச் சொல்வதொன் றுண்டால்

சேவடிகள் தாமரையின் சேயிதழ்கள் தீண்டச்

சிவந்தனவோ சேவடியின் செங்கதிர்கள் பாயப்

பூவடிவு கொண்டவனோ பொங்கொளிகள் சூழ்ந்து

புலங்கொளா வாலெமக்கெம் புண்ணியர்தங் கோவே" (யா.க.கா. ப.37)

ஒன்பதின் சீர்க்கழிநெடிலடி

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்ந்த தானையை

இலங்கும் ஆழியின் விலங்கியோள்

முடங்கு வாலுளை மடங்கல் மிமீசை முனிந்து சென்றுடன்

முரண்ட ராசனை முருக்கியோள்

வடங்கொண் மென்முலை நுடங்கு நுண்ணிடை மடந்தை சுந்தரி

வணங்கொள பூண்முலை மகிழ்ந்தகோன்

தடங்கொள் தாமரை யிடங்கொள் சேவடி தலைக்கு வைப்பவர்

தமக்கு வெந்துயர் தவிர்க்குமே" (யா.க.கா. ப.38)

பதின்சீர்க்கழிநெடிலடி

"கொங்கு தங்கு யோதி மாத ரோடு

கூடு நீடு மோடை நெற்றி

வெங்கண் யானை வேந்தர் போந்து வேத கீத

நாதவென்று நின்று தாழ

அங்க புவ்வ மாதி யாய வாதி நூலி

வீதி யோது மாதி யாய

செங்கண் மாலை காலை மாலை சேர்நர் சேர்வர்

சோதி சோர்ந்த சித்தி தானே”

பத்து சீர்களுக்கும் மேற்பட்ட சீர்களால் வரும் கழிநெல் அடிகளும் உண்டு.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

“திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பமுத்து

விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றான்வினையின்

இரைக்குங் கணிகொண்ட மூவடி வோடிடங் கொங்குமற்றும்

கரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே”

**நான்கு பாக்களுக்கும் உரிய அடியின் சிறுமையும் பெருமையும்**

(14) “வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்

கொள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகும் இழபுரைப்போர்

உள்ளக் கருத்தின் அளவே பெருமையொன் போதலைத்த

கள்ள கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே”

சிறுமை என்பது குறிப்பிட்ட அடிக்கும் குறைந்து வரக்கூடாது என்பதாகும். பெருமை மிகுதியாக வந்தால் எத்தனை அடி வரலாம் என்பதாகும்.

வெண்பாவிற்கு இரண்டடியே சிறுமை

ஆசிரியப்பாவிற்கு மூன்றடியே சிறுமை

கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை

வஞ்சிப்பாவிற்கு மூன்றடியே சிறுமை

நான்கு பாவிற்கும் பெருமைக்கெல்லை பாடுவோனது பொருள் முடிவுக் குறிப்பே வரையறை இல்லை.

காரிகை 14 –ல் கலிக்கு என்று சொல்லாமல் எள்ளப்பட்ட கலிக்கு என்றதனால் துள்ளல் ஓசையின் சிறிதும் வழுவாமல் நற்சீர் நாலடியால் வருவது தரவு கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளலோசையில் சிறிது வழுவி நாற்சீர் நாலடியால் வருவது கலிவிருத்தம் என்று கொள்ளப்படும்.

வெண்பா, அகவல், கலிப்பா, வஞ்சி என முறையாகக் கூறாமல் ‘வெள்ளைக்கு இரண்டடி வஞ்சிக்கு மூன்றடி என்று கூறியது தலைதடுமாற்றம் தந்து புணர்ந்து உரைத்தல் என்னும் உத்தியாகும். முறைமாறிக் கூறுதல் என்பது இந்த உத்தியின் பொருள். இவ்வாறு முறைமாறிக் கூறியதால் வஞ்சிப்பா இரண்டு அடியாலும் வரப்பெறும். ஆசிரியப்பாவும் இரண்டு அடி சுரிதமாக வரப்பெறும் என்பன பெறப்பட்டன. தலைதடுமாற்றமாகக் கூறி மேற்சொன்ன இரண்டு கருத்துக்களையும் பெற வைத்தார்.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

(15) “அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலியின்
திறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழல்திரு வேயன்ன பூங்கொடியே”

(எ.டு)

குறள் வெண்பா

“அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை” (யா.க.கா. ப.41)

இது இரண்டடியால் வந்த வெண்பா.

**ஆசிரியப்பா**

“முதுக்குறைந் தனளே முதுக்குறைந் தனளே
மலையன் ஒள்வேற் கண்ணி
முலையும் வாரா முதுக்குறைந் தனளே” (யா.க.கா. ப.42)

இது மூன்றடியால் வந்த ஆசிரியப்பா.

**தரவு கொச்சக் கலிப்பா**

“செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையு மதியம் போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே” (யா.க.கா. ப.42)

இது நான்கடியால் வந்த கலிப்பா

## வஞ்சிப்பா

“செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருத்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுபயிலும் செழுநீர்
நல்வயற் கழனியூரன்
புகழ்த லாரைப் பெருவண் மையனே” (யா.க.கா. ப.42)

இது மூன்றடியால் வந்த வஞ்சிப்பா.

### 6. தொடை

அடிகள் இரண்டு தம்முள் எழுத்தாலோ, சொல்லாலோ, பொருளாலோ தொடுத்து முடிவது தொடை எனப்படும். தொடை பாட்டுக்கு ஓசையும், உணர்வும் தருவது. “தொடையற்ற பாட்டு நடையற்று போகும்” என்பது பழமொழி.

(16) “எழுவா யெழுத்தொன்றின் மோனை இறுதி இயைபிரண்டாம்
வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரண்டி தோறு முதன்மொழிக்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகும் அளபெடையே”

## தொடை வகைகள் :

தொடை எட்டு வகைப்படும். அவை,

1. மோனைத்தொடை
2. எதுகைத்தொடை
3. இயைபுத்தொடை
4. முரண்தொடை
5. அளபெடைத்தொடை
6. அந்தாதித்தொடை
7. இரட்டைத்தொடை
8. செந்தொடை

என்பனவாகும்.

### உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை

(17) “மாவும்புள் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணும் மிருள்பரந் தீண்டள பா அவளிய
ஓவிலந் தாதி உலகுட னாமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே”

### 1. மோனைத்தொடை

அடிதோறும் முதற்சீரின் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனைத்தொடை எனப்படும்.

(எ.டு) “மாவும் புள்ளும் வதிவயின் படர
மாநீர் விரிந்த பூவும் கூம்ப
மாலை தொடுத்த கோதையும் கமழ
மாலை வந்த வாடை
மாயோன் இன்னு யிர்ப்புறத் தன்றே” (யா.க.கா. ப.47)

### 2. எதுகைத்தொடை

அடிதோறும் முதற்சீரின் முதல் எழுத்து அளபெடுத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

(எ.டு) “வடியோர்க்கண் ணீர்மல்க வான்பொருட்கட் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டில்
இடியின் முழக்கஞ்சி யீங்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை” (யா.க.கா. ப.47)

### 3. இயைபுத்தொடை

அடிதோறும் இறுதிச்சீரின் இறுதி எழுத்தோ அல்லது சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

(எ.டு) “இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி ஊடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே
திருநுதற் பொறித்த திலகமும் அணங்கே” (யா.க.கா. ப.47)

### 4. முரண்தொடை

அடிதோறும் முதற்சீரின் சொல்லோ அன்றி பொருளோ தமிழ் மாறுபடத் தொடுப்பது முரண் தொடை ஆகும்.

(எ.டு) “இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்

நிலவுகுவித் தன்ன வெண்மணல் ஒருசிறை

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை

பொன்னின் அன்ன நுண்தா(து) உறைக்கும்

சிறுகுடிப் பரதவர் மடமகள்

பெருமதர் மழைக்கணும் உடையவால் அணங்கே” (யா.க.கா. ப.48)

### 5. அளபெடைத்தொடை

அடிதோறும் முதற்சீரின் முதலில் அளபெடை ஒன்றி வருமாறுத் தொடுப்பது அளபெடைத் தொடை எனப்படும்.

(எ.டு) “ஆஅ அளிய அலவன்தன் பார்ப்பினோ

டீஇ ரியைங்கொண் டீரளைப் பள்ளியுள்

தூஉந் திரையலைப்பத் துஞ்சா(து) இறைவன்தோள்

மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதல்

ஓஒ உழக்குத் துயர்” (யா.க.கா. ப.48)

### 6. அந்தாதித் தொடை

அடிதோறும் இறுதிச்சீரின் எழுத்தோ அல்லது சொல்லோ அடுத்த அடியின் முதலாக வருவது அந்தாதித் தொடை எனப்படும்.

(எ.டு) “உலகுடன் விளங்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நிழல் பொற்புடை ஆசனம்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவன்
ஆசனத் திருந்த திருந்தொளி அறிவனை
அறிவுசேர் உள்ளமொடு அருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னிருஞ் சிறப்பின் விண்மிசை உலகே” . (யா.க.கா. ப.48, 49)

இது நான்கு அந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

அந்தாதித் தொடை 1. எழுத்தந்தாதி, 2. அசையந்தாதி, 3. சீரந்தாதி, 4. அடியந்தாதி என நால்வகைப்படும்.

மேற்கண்ட பாடலில், ஆறாம் அடியின் இறுதியில் வந்த ‘து’ என்னும் எழுத்து அடுத்த அடியின் முதலில் வருமாறு தொடுக்கப்பட்டுள்ளதால் எழுத்தந்தாதி, முதலடியின் இறுதியில் வந்த ‘மதி’ என்னும் அசை அடுத்த அடியின் முதலில் வருமாறு தொடுக்கப்பட்டுள்ளதால் அசையந்தாதி, இரண்டாமடியின் இறுதியில் வந்த ‘முக்குடை’ என்னும் சீர் அடுத்த அடியின் முதலில் வருமாறு தொடுக்கப்பட்டுள்ளதால் நான்காம் அடியே ஐந்தாம் அடியாக வருமாறு தொடுக்கப்பட்டுள்ளதால் ‘அடியந்தாதி’ எனப்படும்.

**7. இரட்டைத்தொடை**

ஓரடி முழுவதும் ஒருச்சொல்லே வரத்தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும்.

(எ.டு) “ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினிற் சீறெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்” (யா.க.கா. ப.49)

இது ஓரடி முழுவதும் ஒருச்சொல்லே வரத்தொடுத்தமையால் இரட்டைத்தொடை.

**8. செந்தொடை**

மேற்சொல்லப்பட்ட மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை ஆகிய ஏழுவகைத் தொடைகளும் அவற்றின் விகற்பம்போல் அல்லாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்.

(எ.டு) “பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதல் கொடிச்சி மனத்தகத் தோனே” (யா.க.கா. ப.49)

## தொடை விகற்பம்

ஓரடிக்கண் உள்ள சீர்கள்தோறும் மோனை முதலாகிய தொடைகள் வருமாறு தொடுப்பது விகற்பம் எனப்படும். தொடை விகற்பங்கள், இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழு வகைப்படும்.

மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்னும் ஐந்து சிறப்புடையத் தொடைகளும் விகற்பங்களுடன் உறழத் தொடை விகற்பங்கள் (5+7=35) முப்பந்தைந்து ஆகும்.

(19) "இருசீர் மிசைஇணை யாகும் பொழிப்பிடை யிட்டொருவாம்
இருசீ ரிடையிட்ட தீறலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயிலில் மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவதும் ஒன்றின்முற் றாமென்ப மற்றவையே"

### தொடை விகற்பங்கள்

'இருசீர் மிசைவரத் தொடுப்பதை யிணையே'
'முதலொடு மூன்றாஞ் சீர்தொடை பொழிப்பே'
'சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத்தொடை'
'மூவொரு சீரு முதல்வரத் தொடுப்பது
கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே'
'முதலயற் சீரொழித் தன்னல மூன்றின்
மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே'
'ஈற்றயற் சீரொழித் தெல்லாந் தொடுப்பது
கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்'
'சீர்தொறுந் தொடுப்பது முற்றெனப் படுமே' (யா.க.கா. ப.51)

### 1. இணைத்தொடை

நாற்சீர் கொண்ட அடியில் முதல் இரண்டு சீர்களில் மோனை முதலாயின வரத்தொடுப்பது இணைத்தொடை ஆகும்.

**2. பொழிப்புத்தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை முதலாயின வரத்தொடுப்பது பொழிப்புத் தொடை ஆகும்.

**3. ஒரூஉத் தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை முதலாயின வரத்தொடுப்பது ஒரூஉத் தொடை ஆகும்.

**4. கூழைத்தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் முதல் மூன்று சீர்களில் மோனை முதலாயின வரத்தொடுப்பது கூழைத்தொடை ஆகும்.

**5. மேற்கதுவாய்த்தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் முதல், மூன்று, நான்காம் சீர்களில் மோனை முதலாயின வரத்தொடுப்பது மேற்கதுவாய்த் தொடை ஆகும்.

**6. கீழ்க்கதுவாய்த் தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் முதல், இரண்டு, நான்காம் சீர்களிலும் மோனை முதலாயின வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய்த் தொடை ஆகும்.

**7. முற்றுத்தொடை**

நாற்சீர் கொண்ட அடியில் நான்கு சீரிலும் மோனை முதலாயின ஐந்து தொடைகளும் வரத்தொடுப்பது முற்றுத்தொடை ஆகும்.

**தொடை விகற்பத்திற்கு உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை.**

(20) "மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னாமியைபிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன இனிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப்பேர தளபெடையின்
தான விகற்பமுந் தாட்டாஅ மரையென்ப தாழ்குழனே"

இக்காரிகை இணைமோனை முதலாகிய முப்பத்தைந்து தொடை விகற்பங்களுக்குரிய எடுத்துக்காட்டுப் பாடலின் முதல் தொடக்கத்தினைக் கூறுகிறது.

## மோனை தொடை விகற்பம்

முதல் இரண்டு சீரில் மோனை ஒத்து வந்தால் இணை மோனை. இவ்வாறே பிறவற்றையும் பார்க்க வேண்டும்.

(எ.டு) "அணிமலர் அசோகின் தளிர்நிலம் கவற்றி
அரிகுரல் கிண்கிணி அரற்றும் சீறடி
அம்பொன் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல்
அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள்
அவிர்மதி அனைய திருநுதல் அரிவை
அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த
கருங்கய னெடுங்க ணோக்கமன்
திருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே" (யா.க.கா. ப.52)

இப்பாடலில் இணைமோனை முதலான ஏழு விகற்பமும் வந்துள்ளது.

### 1. இணைமோனை (1, 2)

முதல் இரண்டு சீர்களிலும் முதல்எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது இணை மோனைத்தொடை ஆகும்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" (குறள். 45)

### 2. பொழிப்புமோனை (1, 3)

முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது பொழிப்பு மோனைத்தொடை ஆகும்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (குறள் 100)

### 3. ஒரூஉ மோனை (1, 4)

முதல் சீரிலும் நான்காம் சீரிலும் முதல் எழுத்து ஒன்றி வரத்தொடுப்பது ஒரூஉ மோனைத்தொடை ஆகும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" (குறள் 72)

**4. கூழை மோனை (1, 2, 3)**

முதல் மூன்று சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது கூழை மோனைத்தொடை ஆகும்.

“செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்து ளெல்லாந் தலை” (குறள் 411)

**5. கீழ்க்கதுவாய் மோனை (1, 2, 4)**

முதல், இரண்டு, நான்காம் சீர்களிலுள்ள முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் மோனைத்தொடை ஆகும்.

“அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும்” (குறள் 121)

**6. மேற்கதுவாய் மோனை (1, 3, 4)**

முதல், மூன்று, நான்காம் சீர்களிலுள்ள முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் மோனைத் தொடை ஆகும்.

“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று” (குறள் 108

**7. முற்றுமோனை (1, 2, 3, 4)**

நான்கு சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது முற்று மோனைத்தொடை ஆகும்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக” (குறள் 391)

### எதுகைத்தொடை விகற்பம்

முதல் இரண்டு சீரில் இரண்டாம் எழுத்து ஒத்து வந்தால் இணை எதுகை, இவ்வாறே பிறவற்றை கொள்ள வேண்டும்.

(எ.டு) “பொன்னி ன்னன பொறிகணங் கேந்திப்

பன்னரும் கோங்கி னன்னலங் கவற்றி

மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய

கன்னிற மென்முலை மின்னிடை வருந்தி

என்னையு மிடுக்கண் துன்னுவித் தின்னடை

அன்ன மென்படை போல பன்மலர்க்

கன்னியம் புன்னை யின்னிழல் துன்னிய

மயிலேய் சாயலவ் வாணுதல்

அயில்வேல் உண்கணெம் அறிவுதொலைத் தனவே" (யா.க.கா. ப.53)

இப்பாடலில் இணை எதுகை முதலான ஏழு விகற்பமும் வந்துள்ளது.

**1. இணை எதுகை (1, 2)**

முதல் இரண்டு சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது இணை எதுகைத்தொடை எனப்படும்.

"உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்

கள்ளத்தால் கள்வேம் எனல்" (குறள் 282)

**2. பொழிப்பு எதுகை (1, 3)**

முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எதுகைத்தொடை எனப்படும்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று" (குறள் 236)

**3. ஒரூஉ எதுகை (1, 4)**

முதல் சீரிலும் நான்காம் சீரிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ எதுகைத்தொடை எனப்படும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை

ஆரிருள் உய்த்து விடும்" (குறள் 121)

**4. கூழை எதுகை (1, 2, 3)**

முதல் மூன்று சீர்களிலும் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை எதுகைத்தொடை எனப்படும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு" (குறள் 350)

5. **கீழ்க்கதுவாய் எதுகை (1, 2, 4)**

முதல், இரண்டு, நான்காம் சீர்களிலுள்ள இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எதுகைத் தொடை எனப்படும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" (குறள் 131)

6. **மேற்கதுவாய் எதுகை (1, 3, 4)**

முதல், மூன்று, நான்காம் சீர்களிலுள்ள இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எதுகைத் தொடை எனப்படும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று" (குறள் 108)

7. **முற்று எதுகை (1, 2, 3, 4)**

நான்கு சீர்களிலும் உள்ள இரண்டாம் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது முற்று எதுகைத் தொடை எனப்படும்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்" (குறள் 202)

## இயைபு தொடை விகற்பம்

இயைபு கடைசி சீரைப் பற்றியதாகலின் கடைசி சீரையே முதற் சீராகக்கொண்டு பார்க்க வேண்டும். கடைசி சீரும் மூன்றாவது சீரும் ஒத்து வந்தால் இணை இயைபுத் தொட ஆகும்.

(எ.டு) "மொய்த்துடன் றவழு முகிலே பொழிலே
மற்றத னயலெ முத்துறழ் மணலே
நிழலே யினியத னயலது கடலே
மாதர் நகிலே வல்லே யியலே
வில்லே நுதலே வேற்கண் கயலே
பல்லே தளவம் பாலே சொல்லே
புயலே குழலே மயிலே யியலே அதனால்
இவ்வயி னிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந் நிறையே" (யா.க.கா. ப.52)

**1. இணை இயைபு (1, 2)**

இறுதி இரண்டு சீர்களில் உள்ள இறுதி எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது இணை இயைபுத்தொடை ஆகும்.

"செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்து ளெல்லாந் தலை" (குறள் 411)

**2. பொழிப்பு இயைபு (1, 3)**

நான்காம் சீர், இரண்டாம் சீரிலுள்ள இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு இயைபுத்தொடை ஆகும்.

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று"

**3. ஒரூஉ இயைபு (1, 4)**

நான்கு, முதல் சீரிலுள்ள இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ இயைபுத்தொடை ஆகும்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை

தீயினும் அஞ்சப் படும்" (குறள் 202)

**4. கூழை இயைபு (1, 2, 3)**

நான்கு, மூன்று, இரண்டாம் சீர்களிலுள்ள இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது கூழை இயைபுத்தொடை ஆகும்.

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும்" (குறள் 138)

**5. கீழ்க்கதுவாய் இயைபு (1, 2, 4)**

நான்கு, மூன்று, முதல் சீர்களிலுள்ள இறுதி எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் இயைபுத் தொடையாகும்.

"ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்

கருதி இடத்தாற் செயின்" (குறள் 484)

**6. மேற்கதுவாய் இயைபு (1, 3, 4)**

நான்கு, இரண்டு, முதல் சீரிலுள்ள இறுதி எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் இயைபுத்தொடை ஆகும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

**7. முற்று இயைபு (1, 2, 3, 4)**

நான்கு சீரிலும் இறுதி எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது முற்று இயைபுத்தொடை ஆகும்.

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு" (குறள் 631)

## முரண்தொடை விகற்பம்

முதல் இரண்டு சீர் முரணாக வந்தால் அது இணைமுரண் எனப்படும். பிறவற்றையும் இவ்வாறு கொள்ள வேண்டும்.

(எ.டு) "சீரடிப் பேரக வல்கு லொல்குபு
சுரங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக்
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன்
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும்
இருக்கையு நிலையு மேந்தழி லியக்கமும்
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது
என்னு மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே" (யா.க.கா. ப.53)

இப்பாடலில் இணை முரண் முதலான ஏழு விகற்பமும் வந்துள்ளது.

**1. இணை முரண் (1, 2)**

முதல் இரண்டு சீர்களிலும் முரண்படத் தொடுப்பது இணை முரண்தொடை ஆகும்.

"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த
தன்மையான் ஆளப் படும்" (குறள் 511)

**2. பொழிப்பு முரண் (1, 3)**

முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் முரண்படத் தொடுப்பது பொழிப்பு முரண்தொடை ஆகும்.

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்” (குறள் 505)

**3. ஒரூஉ முரண் (1, 4)**

முதல் சீரிலும் நான்காம் சீரிலும் முரண்படத் தொடுப்பது ஒரூஉ முரண்தொடை ஆகும்.

“அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு” (குறள் 72)

**4. கூழைமுரண் (1, 2, 3)**

முதல், இரண்டு, மூன்றாம் சீர்களில் முரண்படத் தொடுப்பது கூழை முரண்தொடை ஆகும்.

“செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து” (குறள் 431)

**5. மேற்கதுவாய் முரண் (1, 3, 4)**

முதல், மூன்று, நான்காம் சீர்களில் முரண்படத் தொடுப்பது மேற்கதுவாய் முரண்தொடை ஆகும்.

“வெள்வளைத் தோளும் சேயரிக் கருங்கண்ணும்”

**6. கீழ்க்கதுவாய் முரண் (1, 2, 4)**

முதல், இரண்டு, நான்காம் சீர்களில் முரண்படத் தொடுப்பது கீழ்க்கதுவாய் முரண்தொடை ஆகும்.

“காலை நண்பகல் மகிழ்தரும் மாலை”

**7. முற்று முரண் (1, 2, 3, 4)**

நான்கு சீரிலும் முரண்படத் தொடுப்பது முற்று முரண் தொடை ஆகும்.

“இரவா பகலா குளிரா வெயிலா”

### அளபெடைத் தொடை விகற்பம்

முதல் இரண்டு சீர் அளபெடுத்து வந்தால் இணை அளபெடை எனப்படும். இவ்வாறே பிறவற்றையும் கொள்ள வேண்டும்.

(எ.டு) "தாஅட் டாஅ மலைமல ருழக்கிப்
பூஉக் குவளைப் போஒ ருந்திக்
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய்
மாஅத் தாஅண் மோஒட் டெருமை
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅல்
மீஇ னாஅர்ந் துகளுஞ் சீஇர்
ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னாவே" (யா.க.கா. ப.54)

'தானவிகற்பம்' என்று சிறப்பித்ததனால், இரண்டளபெடையும் தம்முள் மயங்காதே வரப்பெறும் என்று அறியப்படுகிறது.

**1. இணை அளபெடை (1, 2)**

முதல், இரண்டு சீரிலும் அளபெடை அமையும்படி தொடுப்பது இணை அளபெடைத்தொடை ஆகும்.

(எ-டு) தாஅட் டாஅ மரைமலர் உழக்கி

**2. பொழிப்பு அளபெடை (1, 3)**

முதல் மற்றும் மூன்றாம் சீரில் அளபெடை அமையுமாறு தொடுப்பது பொழிப்பு அளபெடைத் தொடை ஆகும்.

(எ-டு) பூஉக் குவளைப் பொஓ தருந்தி

**3. ஒரூஉ அளபெடை (1, 4)**

முதல் சீரிலும் நான்காம் சீரிலும் அளபெடை அமையும்படி தொடுப்பது ஒரூஉ அளபெடைத் தொடையாகும்.

(எ-டு) காஅய்ச் செந்நெல் கறித்துப் போஒய்

**4. கூழை அளபெடை (1, 2, 3)**

முதல் மூன்று சீரிலும் அளபெடை அமையும்படி தொடுப்பது கூழை அளபெடைத் தொடையாகும்.

(எ-டு) மாஅத் தாஅள் மோஒட்டு எருமை

**5. மேற்கதுவாய் அளபெடை (1, 3, 4)**

முதல், மூன்று, நான்காம் சீர்களில் அளபெடை அமையும்படி தொடுப்பது மேற்கதுவாய் அளபெடைத்தொடை ஆகும்.

(எ-டு) தேஎம் புனலிடை சோஒர் பாஅல்

**6. கீழ்க்கதுவாய் அளபெடை (1, 2, 4)**

முதல், இரண்டு, நான்காம் சீர்களில் அளபெடை அமையும்படி தொடுப்பது கீழ்க்கதுவாய் அளபெடைத்தொடை ஆகும்.

(எ-டு) மீஇன் ஆஅர்த்து உகளும் சீஇர்

**7. முற்று அளபெடை (1, 2, 3, 4)**

நான்கு சீரிலும் அளபெடை அமையும்படி தொடுப்பது முற்று அளபெடைத்தொடை ஆகும்.

(எ-டு) ஆஅ னாஅ நீஇள் நீஇர்

**உறுப்பியற் செய்யுட்களின் முதல் நினைப்புக் காரிகை :**

(21) “கந்தமும் தேனுஞ் சுருக்கமுங் காதற் குறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாத்தண் குன்றத்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவாய்
அந்தமு மாவும் இருசீரு மோனையு மாமுறுப்பே”

1. கந்தமும் : கந்தம் மடிவில் கடிமலர்ப்
பிண்டிக்கண்ணார் நிழற்கீழ்

2. தேனும் : தேனார் கமழ் தொங்கல் மீனவன்
கேட்பத் தெண் நீர் அருவி

| | | | |
|---|---|---|---|
| 3. | சுருக்கமும் | : | சுருக்கமில் கேள்வித் துகள் தீர்<br>புலவர்முன் யான் மொழித்த<br>ஆவை மூன்றும் தற்சிறப்புப்<br>பாயிரமும் அவையடக்கமும் |
| 4. | குறில் | : | குறில் நெடில் ஆவி குறுகிய<br>மூஉயிர் ஆய்தம் மெய்யே |
| 5. | குறிலே | : | குறிலே நெடிலே குறில்<br>இணை ஏனைக் குறில் நெடிலே |
| 6. | ஈரசை | : | ஈரசை நாற்சீர் அகவற்கு<br>உரிய வெண்பா இனமாம் |
| 7. | தேமா | : | தேமா புளிமா கருவிளம்<br>கூவிளம் சீர் அகவற்காம் |
| 8. | தண் | : | தண் நிழல் தண்பூ நறும்பூ நறு நிழல்<br>தந்து உறழ்ந்தாள் |
| 9. | குன்றம் | : | குன்றக் குறவன் அகவல் பொன்<br>ஆரம் வெண்பாட்டு வஞ்சி |
| 10. | தண்சீர் | : | தண்சீர் தனது ஒன்றில் தன்<br>தளையாம் |
| 11. | திருவும் | : | திருமழை உள்ளார் அகவல்<br>சிலை விலங்காமல் வெள்ளை |
| 12. | குறள் | : | குறள் இருசீரடி சிந்து முச்சீரடி<br>நால் ஒரு சீர் |
| 13. | நிரை | : | நிரைத்த இருது குறள் சிந்து<br>அளவடி தேம் பழுத்து |
| 14. | வெள்ளைக்கு | : | வெள்ளைக்கு இரண்டடி<br>வஞ்சிக்கு மூன்று அடி<br>மூன்று அகவற்கு |

| | | | |
|---|---|---|---|
| 15. | அறத்து | : | அறத்தாறு இது என |
| | | | வெள்ளைக்கு இழிபு |
| | | | அகவற்கு இழிபு |
| 16. | எழுவாய் | : | எழுவாய் எழுத்தொன்றின் |
| | | | மோனை இயைபு இரண்டாம் |
| 17. | அந்தம்உம் | : | அந்தம் முதலாத் தொடுப்பது |
| | | | அந்தாதி அடி முழுவதும் |
| 18. | மாவும் | : | மாவும் புள்மோனை இயைபு |
| | | | இன்னகை வடியோர் எதுகைக்கு |
| 19. | இருசீர்உம் | : | இருசீர் மிசை இணையாகும் |
| | | | பொழிப்பு இடையிட்டு |
| | | | ஒருஉவாம் |
| 20. | மோனையும் | : | மோனை விகற்பம் அணிமலர் |
| | | | மொய்த்துடனாம் இயைபிற்கு |

# அலகு – 3

## 2. செய்யுளியல்

எழுத்து முதல் தொடை வரையுள்ள ஆறு உறுப்புகளையும் கொண்டு அமைவது செய்யுள் ஆகும். அவை, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் பாக்களாகவும். தாழிசை, துறை, விருத்தம் என்னும் இனங்களாகவும் பகுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உள்ள செய்யுட்களைப் பற்றிக் கூறுவதால் இவ்வியலுக்குச் செய்யுளியல் என்று பெயர் வந்தது. செய்யுளியலில் அமைந்துள்ள காரிகை மொத்தம் 15 ஆகும்.

### 1. பாக்களுக்குரிய அடியும் ஓசையும்

(22) “வெண்பா அகவல் கலிப்பா அளவடி வஞ்சியென்னும்
ஒண்பாஅடி குறள் சிந்தென் றுரைப்ப ஒலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சால் அகவல்சென் றோங்கு துள்ளல்
நண்பா அமைந்த நலமிகு தூங்கல் நறுநுதலே”

இக்காரிகை வெண்பா, ஆசிரியப்பா கலிப்பா, வஞ்சிப்பா என்ற நால்வகைப் பாக்களும் உரிய அடி பற்றியும் ஓசை பற்றியும் கூறுகிறது,

“வெண்பா முதலா விளம்புநாள் பாவொலி
செப்பல் அகவல் சீர்கெழு துள்ளல்
தூங்க லென்ப தொன்னூற் புலவர்”

என்று கூறுவதனால், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாவிற்கும் அடியும், ஓசையும் கூறப்பட்டது.

### நால்வகைப் பாக்களுக்குரிய அடியளவு

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா என்னும் மூன்று பாக்களும் நான்கு சீர்களைக் கொணட அளவடியால் வரும். வஞ்சிப்பா இருசீரால் அமைந்த குறளடியாலும் மூன்று சீரால் அமைந்த சிந்தடியாலும் வரும் என்பர்.

வெண்பா அகவல் கலிப்பா அளவடி (யா.க.கா. ப.55)

வஞ்சியென்னும் ஒண்பாவடி குறள் சிந்தென்றுரைப்ப (யா.க.கா. ப.55)

வஞ்சிப்பா இரு சீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறும்

வஞ்சியென்னு வெண்பா என்று சிறப்பித்ததனால் வெண்பாவின் ஈற்றடியும், நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலிவெண்பாவின் ஈற்றடியும் முச்சீரால் வரப்பெறும். இணைகுறளாசிரியப்பாவின் இடையடிகள் இரண்டும், பலவும், குறளடியானும், சிந்தடியானும் வரப்பெறும் கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்கவுறுப்பும் இருசீரடியானும், முச்சீரடியானும் வரப்பெறும்.

**நால்வகைப் பாக்களுக்குரிய ஓசை**

1. வெண்பா - செப்பலோசை
2. ஆசிரியப்பா - அகவலோசை
3. கலிப்பா - துள்ளலோசை
4. வஞ்சிப்பா - தூங்கலோசை

**1. வெண்பா**

வெண்பாவிற்குரிய செப்பலோசை 1. ஏந்திசைச் செப்பல் 2. தூங்கிசைச் செப்பல் 3. ஒழுகிசைச் செப்பல் என மூவகைப்படும்.

**ஏந்திசைச் செப்பலோசை**

பாடல் முழுவதும் வெண்சீர் வெண்டளை அமையப் பாடப்படுவது

"வெண்சீர் வெண்டளை யான்வரும் யாப்பை
ஏந்திசைச் செப்ப லென்மனார் புலவா" (யா.க.கா. ப.57)

(எ.டு) "யாதானு நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு"

**தூங்கிசைச் செப்பலோசை**

பாடல் முழுவதும் இயற்சீர் வெண்டளை அமையப் பாடப்படுவது.

"இயற்சீர் வெண்டளை யான்வரும் யாப்பைத்
தூங்கிசைச் செப்ப லென்மனார் புலவர்" (யா.க.கா. ப.57)

(எ.டு) "பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி நூறிய நீர்" (யா.க.கா. ப.57)

**ஒழுகிசைச் செப்பலோசை**

வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வருவது.

"வெண்சீ ரென்றலு மியற்சீர் விகற்பமும்
ஒன்றிய பாட்டே யொழுகினைச் செப்பல்" (யா.க.கா. ப.57)

(எ.டு) "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்" (யா.க.கா. ப.58)

**2. ஆசிரியப்பா (அகவற்பா)**

ஆசிரியப்பாவிற்கு அகவலோசை 1. ஏந்திசை அகவல் 2. தூங்கிசை அகவல் 3. ஒழுகிசை அகவல் என மூவகைப்படும்.

"நேர்நே ரியற்றவளை யான்வரு மகவலும்
நுறைநிரை யியற்றவளை யான்வரு மகவலும்
ஆயிரு தளையுமொத் தாகிய வகவலும்
ஏந்தல் தூங்கல் ஒழுகல் என்றிவை
ஆய்ந்த நிரனிறை ஆகும் என்ப" (யா.க.கா. ப.58)

**ஏந்திசை அகவலோசை** :

பாடல் முழுவதும் நேரொன்றாசிரியத்தளை அமையப் பாடப்படுவது.

(எ.டு) "போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதர் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே" (யா.க.கா. ப.58)

**தூங்கிசை அகவலோசை** :

பாடல் முழுவதும் நிரையொன்றாசிரியத்தளை அமையப் பாடப்படுவது.

(எ.டு) "அணிநிழல் அசோகர்மந் தருணெறி நடாத்திய
மணிதிகழ் அவிரொளி வரதனைப்
பணிபவர் பவநனி பரிசறுப் பவரே"

**ஒழுகிசை அகவலோசை**

நேரொன்றாசிரியத்தளையும், நிரையொன்றாசிரியத்தளையும் விரவி வருவது.

(எ.டு) "குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையர மகளிர் புரையுஞ் சாயலள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே"

## 3. கலிப்பா

கலிப்பாவிற்குரிய துள்ளலோசை

1. ஏந்திசைத் துள்ளலோசை
2. அகவல் துள்ளலோசை
3. பிரிந்திசைத் துள்ளலோசை என மூவகைப்படும்

### ஏந்திசைத் துள்ளலோசை

பாடல் முழுவதும் கலித்தளையால் வருவது.

"ஏந்திசைத் துள்ளல் கலித்தளை யியையின்" (யா.க.கா. ப.59)

(எ.டு) "முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே
வருசினனார் தருமறைநூல் வழிபிழையா மனமுடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியைஅரியா
நிருமலராய் அருவினராய் நிலவுவர்சோ தியினிடையே" (யா.க.கா. ப.59)

### அகவல் துள்ளலோசை

வெண்டளையும், கலித்தளையும் விரவி வருவது

"வெண்டளை தன்றளை யென்றிரண் டியையின்
ஒன்றிய வகவல் துள்ளலென் றோதுப" (யா.க.கா. ப. 59)

(எ.டு) "செல்லப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் லியன்கொண்மூ 'இடைநுழையு மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந் தொளித்ததே" (யா.க.கா. ப.59)

பிரிந்திசைத் துள்ளலோசை

பல தளையும் விரவி வருவது.

"தன்றளை பிறதளை யென்றினை யனைத்தும்
பொருந்தி வரினே பிரிந்திசைத் துள்ளல்" (யா.க.கா. ப.59)

(எ.டு) "குடநிலைத் தண்புறவிற் கோவலர் எடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவில் தகையேறு மரம் பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇ தாங்குவனத் தேறப்போய்க்
கலையினோடு முயலியரியக் கடிமுல்லை முறுவலிப்ப
என வாங்கு
ஆனொடு புல்லிப் பெரும்புதல் முனையும்
கானுசைத் தவர்தேர் சென்ற வாறே"

**4. வஞ்சிப்பா**

வஞ்சிப்பாவிற்குரிய தூங்கலோசை

1. ஏந்திசைத் தூங்கலோசை
2. அகவல் தூங்கலோசை
3. பிரிந்திசைத் தூங்கலோசை என மூவகைப்படும்.

"ஒன்றிய வஞ்சித் தளையே வரினும்
ஒன்றா வஞ்சித் தளையே வரினும்
என்றிவை யிரண்டும் பிறவு மயங்கிலும்
ஏந்த லகவல் பிரிந்திசைத் தூங்கலென்
றாய்ந்த நிரனிறை யாகு மென்ப" (யா.க.கா. ப.60)

**1. ஏந்திசைத் தூங்கலோசை**

ஒன்றிய வஞ்சித் தளையால் பாடப்பெறுவது

(எ.டு) "வினைத்திணபகை வீழச்செற்றவன்
வனப்பயங்க மலர்த்தாளினை
நினைத்தன்போடு தொழுதேத்தினர் நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே" (யா.க.கா. ப.61)

**2. அகவல் தூங்கலோசை**

ஒன்றாத வஞ்சித்தளையால் பாடப்பெறுவது.

(எ.டு) "வானோர்தொழ வண்தாமரைத்
தோனாமலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூரறிவனைக் கானார்
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே" (யா.க.கா. ப. 60)

**3. பிரிந்திசைத் தூங்கலோசை**

பல தளையும் விரவி பாடப்பெறுவது

"மந்தாநிலம் வந்தசைப்ப
வெண்தாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசை என வாங்கு
இனிதின் ஒதுங்கிய இறைவனை
முனமொழி மெய்களின் வணங்குதும் மகிழ்ந்தே" (யா.க.கா. ப.61)

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை** :

(23) "வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ் செய்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணார்கொடிபோல்
துளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கோடு நாவலர் ஓதினர் வஞ்சிக் குதாரணமே"

23 –ஆம் காரிகை முன் காரிகையில் கூறப்பட்ட அடிகளாலும், ஓசைகளாலும் வந்துள்ள பாடல்களை நினைவுப்படுத்திக் கொள்ள துணை செய்கிறது.

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரல ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் – களங்கனியைச்
காரென செய்தாரு மில்" (யா.க.கா. ப.58)

என வரும் இன்னிசை வெண்பா நான்கு சீருள்ள அடியால் வந்துள்ளபடியால் அளவடியால் வந்தது. இது செப்பலோசை, இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து வந்தபடியால் இது ஒழுகல் செப்பலோசை.

“சுறமறிவன துறையெல்லாம்
இறவுஈன்பன இல்லெல்லாம்
மீன் திரிவன கிடங்குஎல்லாம்
தேன்தாழ்வன பொழில்எல்லாம்

எனவாங்கு
தண்பனை கழீஇய இருக்கை
மண்கெடு நெடுமதில் மன்னன் ஊரே."

இது இருசீரடியால் தூங்கலோசையால் வந்த குறளடி வஞ்சிப்பா ஆகும்.

"தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோள்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவுஎய்தி
என்நலத்தகை இதுவென்னெ எழில்காட்டிச்
சொல்நலத்தகைப் பொருள்கருத்தி னில்சிறந்தாங்கு

எனப்பெரிதும்
கலங்கஞர் எய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவும் சேண்இவந்தற்றே."

இது முச்சீரடியாலும் தூங்கலோசையாலும் வந்ததால் சிந்தடி வஞ்சிப்பா ஆகும்.

## பாக்களின் வகையும், அதன் இனமும்

### 1. வெண்பா

நான்கு வகைப் பாக்களுள் தலைமைத் தன்மையுடைய சிறப்பினைப் பெற்று விளங்குவது வெண்பா ஆகும். வேறு தளையும் அடியும் கலவாமல் சிறப்புற்று விளங்குவதால் வெண்பா எனப் பெயர் பெற்றுள்ளது.

### வெண்பாவின் பொது இலக்கணம்

1. செப்பலோசை பெற்று வரும்.
2. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் அமையும்.
3. இயற்சீரும் வெண்சீரும் வரும்.
4. நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளைப் பெற்ற சீர்கள் நான்கனுள் ஒன்றைக் கொண்டு முடியும்.

5. இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை ஆகிய இரண்டு தளைகள் மட்டும் வரும்.
6. பிற தளைகள் வராது.
7. இரண்டடி முதல் பன்னிரண்டு அடிகள் வரை வரும்.

**வெண்பா வகைகள்**

1. குறள் வெண்பா
2. சிந்தியல் வெண்பா
3. நேரிசை வெண்பா
4. இன்னிசை வெண்பா
5. பஃறொடை வெண்பா

என ஐந்து வகைப்படும்.

## குறள் வெண்பா, நேரிசை வெண்பா

(24) "ஈரடி வெண்பாக் குறள் குறட்பா இரண்டாய் இடைக்கண்
சீரிய வான்தனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசை குன்றா
தோரிரண் டாயும் ஒருவிகற் பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகு நெறிகரி பூங்குழல் நேரிழையே'

இக்காரிகை குறள் வெண்பாவும், நேரிசை வெண்பாவும் எவ்வாறு வரும் என்பதைக் கூறுகிறது.

**குறள் வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணத்தைப் பெற்று இரண்டு அடியால் வரும் வெண்பா, குறள் வெண்பா எனப்படும். இது ஒரு விகற்பமாகவும், இருவிகற்பமாகவும் வரும்.

**ஒரு விகற்ப குறள் வெண்பா**

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" (குறள் 1)

இப்பாடலில் எதுகை ஒன்றுபட்டு வந்ததால் இது ஒரு விகற்பத்தால் வந்த குறள் வெண்பா ஆகும்.

**இரு விகற்ப குறள் வெண்பா**

'உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து' (குறள் 667)

இப்பாடலில் உரு, அச் என எதுகை வேறுபட்டு வந்ததால் இது இரு விகற்பத்தால் வந்த குறள் வெண்பா ஆகும்.

**1. நேரிசை வெண்பா (இருகுறள் நேரிசை வெண்பா)**

இரண்டு குறள் வெண்பாவாக வருவதோடு, இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று வரவேண்டும். செப்பலோசை வழுவாமல் வரவேண்டும். முதல் இரண்டுஅடி ஒரு விகற்பமாகவும், இறுதி இரண்டடி மற்றோர் விகற்பமாகவும் வரலாம் அல்லது நான்கு அடியும் ஒரே விகற்பமாகவும் வரலாம். அவ்வாறு வருவது இருகுறள் நேரிசை வெண்பா ஆகும்.

"அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரம் கொண்டு – தெரியின்
கரிய வரைநிலையார் காய்ந்தால்என் செய்வார்
பெரிய வரைவயிரம் கொண்டு" (யா.க.கா. ப.65)

இப்பாடல் இரண்டு குறள் வெண்பாவாக, நடுவு முதற்தொடைக்கு ஏற்ற தனிச்சொல்லால் அடிநிரப்பி, செப்பலோசை வழுவாது இரண்டு விகற்பத்தாலும், ஒரு விகற்பத்தாலும் வந்த இருகுறள் நேரிசை வெண்பா ஆகும்.

**ஆசியிடையிட்ட நேரிசை வெண்பா**

மேற்காரிகையில் "சீரியவான்தனிச்சொல்லடி மூய்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால், இருகுறள் நேரிசை வெண்பாவில் இரண்டு குறட்பாவையும் ஒன்று சேர்க்கவரும் தனிச்சொல்லானது முதற்குறட்பாவோடு சேராது (வெண்டளை கெடும்படி) நிற்குமானால், அதனைச் சேர்ப்பதற்காக (வெண்டளை கெடாதபடி) பற்றாக (இரண்டு உலோகங்களை ஒட்ட வைப்பதற்காக பொடி வைத்து ஊதுவார்கள் அதுபோல) முதற்குறளின் இறுதியில் ஓரசையையோ, இரண்டு அசைகளையோ சேர்ப்பார்கள். இதுவும் ஒரு விகற்பத்தாலும் இருவிகற்பத்தாலும் வரும். இது ஒரு சார் ஆசிடை நேரிசை வெண்பா என்று கூறப்படும்.

**ஈர் ஆசிடையிட்ட நேரிசை வெண்பா**

(எ.டு) "தாமரையின் தாதாடித் தண்துவலைச் சேரளைந்து
தாமரையின் நாற்றமே தானாறும் – தாமரைபோல்

கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடிஎன்

கண்ணார்வம் செய்யும் கருத்து."

இப்பாடல் ஒரு குறள் வெண்பா. முதற்குறளில் தான் என்பதை அடுத்து 'தாமரைபோல்' என ஒரு தனிச்சொல் வருகின்றது. தான், தாமரை போல் இந்த இரண்டு சொல்லையும் தளை கொள்ளும்போது 'தான்' என்பது நாள் (நேரசை), 'தாமரைபோல்' என்பதிலுள்ள' தா'- நேரசை. இதில் நேரொன்றாசிரியத்தளையாகி வெண்பா இலக்கணம் கெட்டு விடுகிறது. ஆகையால் தானாறும் என இரண்டு அசை சேர்க்கப் படுகிறது. 'னா' ஒரு நேரசை, 'றும்' ஒரு நேரசை. இந்த இரண்டு அசைகளும் 'ஆசு' என்று சொல்லப்படும்.

தானாறும் என்பது தேமாங்காய் (நேர்நேர்நேர் – தேமாங்காய்) இதற்கு முன் 'தா' ஒரு நேர் வந்துள்ளதால் காய்முன் நேர் வந்து வெண்சீர் வெண்டளையாகி வெண்பா இலக்கணம் கெடாமல் இருக்கிறது. இது ஈர் ஆசிடையிட்ட நேரிசை வெண்பா ஆகும்.

ஆசு – பற்றுக்கோடு – ஒற்றுமைப்படாமல் பிரிந்திருக்கின்ற உலோகங்களை ஒற்றுமைப்படும்படி (ஒட்டிக்கொள்ளும்படி) இடையே பொடி வைத்து ஊதுவார்கள்.

அதற்குப் பற்றாசு என்று பெயர். தான் என்பதனோடு தாமரை போல் என்பது சேர்ந்தால், வெண்பா இலக்கணம் ஒட்டாது. வெண்பா இலக்கணம் ஒட்டுதற் பொருட்டுப் பொடி வைத்து ஊதுதல் போல் னா, றும் என்ற இரண்டு அசை சேர்க்கப்பட்டது. ஆதலில் இது ஈர் ஆசு இடையிட்ட நேரிசை வெண்பா.

(எ.டு) "வஞ்சியே னென் றவன்ற னூருரைத்தான் யானுமவன்

வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன் – வஞ்சியான்

வஞ்சியேன் வஞ்சியே சென்றுரைத்தும் வஞ்சித்தான்

வஞ்சியாய் வஞ்சியார் கோ"

இவ்வெண்பா, வஞ்சியேன் என்பதனால் வாய் என முடியும். வாய் என்பதனோடு வஞ்சியான் என்னும் தனிச்சொல் சேர்ந்தால் நேரொன்றாசிரியத்தளை வந்து வெண்பா இலக்கணம் கெட்டு விடும். ஆதலின் நேர்ந்தேன் என நேர் நேர் ஆக இரண்டு அசை சேர்க்கப்பட்டது. வாய் நேர்ந்தேன் – வஞ்சியான். இப்போது தளை கெடாது வாய் நேர்ந்தேன் என்பது தேமாங்காய்.

‘வஞ்’ என்பது நேர், காய் முன் நேர் வந்தால் வெண்சீர் வெண்டளையாயிற்று. வெண்பா இலக்கணமும் பிழைபடாமல் தப்பியது. ஆதலின் இது ஓர் ஆசு இடை இடைநேரிசை வெண்பா.

### ஓர் ஆசிடையிட்ட நேரிசை வெண்பா

"கருமமும் உள்படாப் போகமும் துவ்வாத்
தருமமும் தக்கார்க்கே செய்யா-ஒருநிலையே
முட்டின்றி மூன்றுமுடியுமேல் அஃதுஎன்ப
பட்டினம் பெற்ற கலம்." (யா.க.கா. ப.66)

இவ்வெண்பா தருமமும் தக்கார்க்கே செய் என முடியும் ஒரு குறள் வெண்பா. முதற் குறளில் செய் என்பதை அடுத்து ஒருநிலையே' என ஒரு தனிச்சொல் வருகின்றது. ‘செய்' என்பது முடிந்த சொல்லாக வரும்போது நேர்அசையாக வருகிறது. இது சீராகாது. ஆகையால் 'யா' என்று அசை கூட்டி சீராக்கப் பட்டதால் 'செய்யா' என்பது நேர்நேர் (தேமா). இதற்குமுன் 'ஒரு' என்று நிரை அசை வந்துள்ளது. மாமுன் நிரை வந்துள்ளதால் இது இயற்சீர் வெண்டளையாகும். வெண்பா இலக்கணம் கெடாமல் வருவதற்கு 'யா' என்ற ஒரு அசை சேர்க்கப்பட்டுள்ளது. எனவே இது ஓர் ஆசு டையிட்ட இருகுறள் நேரிசை வெண்பா ஆகும்.

“ஆர்த்த வறிவினை ராண்டியைள ராயினுங்
காத்தோம்பித் தம்மை யடக்குப - மூத்தொறூஉந்
தீத்தொழிலே கன்றித் திரிந்த தெருவையோற்
மோத்தறார் புல்லறிவி னார்”

இவ்வெண்பாவில் காத்தோம்பித் தம்மை அடக்கு என முதற்குறள் வெண்பா முடியும். அடக்கு - மூத்தொறும் என வந்தால் நேரொன்றாசிரியத்தளை வந்து வெண்பா இலக்கணம் கெட்டு விடும். ஆதலின் ‘ப’ என்று ஓர் அசை சேர்க்கப்பட்டது. அடக்குப என்றாயிற்று. அடக்குப என்பது கருவிளம். ‘மூத்’ என்பது நேர். விளமுன் நேர் வந்து இயற்சீர் வெண்டளையாகி வெண்பா இலக்கணம் பிழைபடாமல் காத்தது. இவ்வாறு ஓர் அசை சேர்க்கப்பட்டதால் ஓர் ஆசிடை இட்ட நேரிசை வெண்பா ஆயிற்று.

**உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை.**

"உருவுகண்டு எள்ளா, உடையார் குறள் மடவாய் தடமண்டு
அரியவரை கீண்டு இருகுறள் நேரிசை தாமரையின்
கருமமும், ஆர்த்தவும் வஞ்சியும் காமர் தனிச்சொல்முன்னா
நெரிநுண் கருங்குழல் நேரிழை! ஆசிட்ட நேரிசையே"

இக்காரிகை குறள் வெண்பாவிற்கும், நேரிசை வெண்பாவிற்கும், ஆசிடை நேரிசை வெண்பாவிற்குமுரிய உதாரணப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது. ஆகவே இது உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகையாகும்.

உருவு கண்டு எள்ளாமை என்பது 'உடையார் முன் இல்லார் போல' ஏக்கற்றும் என்பதும் குறள் வெண்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

தடமண்டு அரியவரை கீண்டு என்பது தடமண்டு தாமரையின் தாதாடு அலவன் என்றும் அரியவரை கீண்டு காட்டுவார் யாரே என்னும் பாடல்கள் நேரிசை வெண்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

தாமரையின், கருமமும், ஆர்த்த, வஞ்சி என்றும் தொடங்கும் பாடல்கள் தனிச்சொல்லுக்கு முன் ஆசு இடைவந்த நேரிசை வெண்பாவிற்கு எடுத்துக்காட்டாய் வந்த பாடல்கள் ஆகும்.

**இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா**

(25) "ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பின் அஃது இன்னிசை துன்னும் அடிபலவாய்ச்
சென்று நிகழ்வது பஃறொடையாம் சிறை வண்டினங்கள்
துன்றும் கருமென் குழல்துடி ஏர்இடைத் தூமொழியே"

இக்காரிகை இன்னிசை வெண்பாவிற்கும், பஃறொடை வெண்பாவிற்கும் இலக்கணம் கூறுகிறது.

**இன்னிசை வெண்பா**

வெண்பாவிற்குரிய இலக்கணம் பெற்று நான்கு அடியாய், தனிச்சொல் பெற்றோ, பெறாமலோ ஒரு விகற்பத்தாலோ பல விகற்பத்தாலோ அமைந்து நேரிசை வெண்பாவினின்று சிறிது வேறுபட்டு அமைவது இன்னிசை வெண்பா ஆகும்.

"வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்

வைகலும் வைகலை வைகும் என்று இன்புறுவர்

வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்

வைகலை வைத்துணரா தார்' (யா.க.கா. ப.68)

இப்பாடல் நான்கு அடியாய்த் தனிச்சொல் இல்லாமல் ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

"இன்றுகொல் அன்றுகொல் என்றுகொல் என்னாது

பின்றையே நின்றது கூற்றம் என்று எண்ணி

ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்

மருவுமின் மாண்டார் அறம்' (யா.க.கா. ப.36)

இப்பாடல் நான்கடியாய் தனிச்சொல் இல்லாமல் பல விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

மேற்காரிகையில் 'இன்னிசை துன்னும்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால்,

இரண்டாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வருவதும்,

மூன்றாம் அடியின் இறுதியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தால் வருவதும்,

தனிச்சொல் இன்றிப் பல விகற்பத்தால் அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவதும்,

நேரிசை வெண்பாவில் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவதும், பிறவும் எல்லாம் இன்னிசை வெண்பா ஆகும்.

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்குந்

திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மற்று – இங்கண் மறுவாற்றும்

சான்றோர்அஃது ஆற்றார் தெருமந்து

தேய்வர் ஒருமாசு உறின்.'

இப்பாடல் இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

'வளம்பட வேண்டாதார் யார்யாரும் இல்லை,
அளந்தன போகம் அவர்அவர் ஆற்றால்
விளங்காய் திரட்டினர் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்."

இப்பாடல் மூன்றாம் அடியில் தனிச்சொல் பெற்று இரண்டு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

"மழைஇன்றி மாநிலத்தார்க்கு இல்லை,
மழையும் தவமிலார் இல்வழி இல்லை தவமும்
அரசிலார் இல்வழி இல்லை, அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்."

இப்பாடல் அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

"இன்னாமை வேண்டின் இரவெழுக – இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக – தன்னொடு
செல்வது வேண்டின் அறம்செய்க – வெல்வது
வேண்டின் வெகுளி விடல்."

இப்பாடல் அடிதோறும் தனிச்சொல் பெற்று மூன்று விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா.

**பஃறொடை வெண்பா**

வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று நான்கு அடிகளின் மிக்குப் பாடப்பெறுவது. பஃறொடை (பல் தொடை) வெண்பாவாகும். இது ஒரு விகற்பத்தாலும், பல விகற்பத்தாலும் வரும். ஐந்து அடிகள் முதல் பன்னிரண்டு அடிகள் வரை பெற்று வரும் வெண்பா பஃறொடை வெண்பா எனப்படும்.

"சேற்றுக்கால் நீலம் செருவென்ற வேந்தன்வேல்
கூற்று உறழ் மொய்ம்பின் பகழி பொருகயல்
தோற்றம் தொழில் வடிவு தம்முள் தடுமாற்றம்
வேற்றுமை இன்றியே ஒத்தன மாவடர்
ஆற்றுக்கால் ஆட்டியர் கண்."                    (யா.க.கா. ப.71)

இப்பாடல் ஐந்து அடியால் வந்த பஃறொடை வெண்பா ஆகும். சேற்,கூற்,தோற், வேற், ஆற் – என ஐந்து அடியிலும் எதுகையாகிய இரண்டாம்

எழுத்து ஒன்றி வந்துள்ளதால் ஒரு விகற்பத்தால் வந்த பஃறொடை வெண்பா ஆகும்.

"பன்மாடக் கூடல் மதுரை நெடுந்தெருவில்
என்னொடு நின்றார் இருவர் அவருள்ளும்
பொன்னோடை நன்றென்றாள் நல்லளே; பொன்னோடைக்கு
யானைநன்று என்றாளும் அந்நிலையள்; யானை
எருத்தத்து இருந்த இலங்கிலைவேல் தென்னன்
திருத்தார்நன் றென்றேன் றியேன்." (யா.க.கா. ப.72)

இப்பாடல் ஆறடியால் வந்த பஃறொடை வெண்பா. (பன், என், பொன் யானை எரு, திரு) என மூன்று விகற்பத்தால் வந்த பஃறொடை வெண்பா ஆகும்.

"வையக மெல்லாங் கழனியா – வையகத்துச்
செய்யகமே நாற்றிசையின் றேயங்கள் - செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு – வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் - சாறட்ட
டானேற்ற மான சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்" (யா.க.கா. ப.72)

இது பல விகற்பத்தான் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

### உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை.

"வைகலும் வைகல் துகள்தீர் கடற்குட்டம் இன்றும்அங்கண்
எய்து மலிதேர் வளம்படவே மழை இன்னிசைபோல்
வையகம் எல்லாம் பலவிகற்பேற்றது கேற்றொருகால்
பையரவு அல்குல் பன்மாடம் பஃறொடைப் பல்விகற்பே'

இக்காரிகை இன்னிசை வெண்பாவிற்கும், பஃறொடை வெண்பாவிற்கும் உதாரணப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

### சிந்தியல் வெண்பாவும், வெண்பாவின் ஈற்றடியும்

(26) 'நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தால்
நேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே'

இக்காரிகை நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகியவற்றின் இலக்கணத்தையும், வெண்பாவிற்கு உரிய ஈற்றடி அமையும் முறையையும் கூறியுள்ளது.

**சிந்தியல் வெண்பா** :

வெண்பாவின் பொது இலக்கணத்தோடு, மூன்றடிகள் பெற்று வருவது சிந்தியல் வெண்பா எனப்படும். இது நேரிசைச் சிந்தியல் வெண்பா எனவும், இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனவும் வழங்கப்படும்.

**நேரிசைச் சிந்தியல் வெண்பா**

"நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண்டு ஆர்ப்பப் புடைத்தாளே - பொன்தேரான்
பாலைநல் வாயில் மகள்." (யா.க.கா. ப.74)

இப்பாடல் தனிச்சொல் பெற்று மூன்றடியாய் இருவிகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

"அறிந்தானை ஏத்தி அறிவாங்கு அறிந்து
சிறந்தார்க்குச் செல்வன் உரைப்ப - சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு." (யா.க.கா. ப.74)

இப்பாடல் இரண்டாம் அடியின் இறுதி தனிச்சொல்பெற்று ஒருவிகற்பத்தால் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா**

இன்னிசை வெண்பாபோன்று தனிச்சொல் இன்றி ஒரு விகற்பத்தாலும், பல விகற்பத்தாலும் மூன்றடியால் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

"நறுநீல நெய்தலும் கொட்டியும் தீண்டிப்
பிறநாட்டுப் பெண்டிர் முடிநாறும் பாரி
பறநாட்டுப் பெண்டி ரடி." (யா.க.கா. ப.74)

இது தனிச்சொல்லின்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஆகும்.

"சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலை என்ப

கானக நாடன் சுனை."

இப்பாடல் மூன்று அடியால் தனிச்சொல் இன்றி பல விகற்பத்தால் வந்துள்ளது.

"முல்லை முறுவலித்துக் காட்டின – மெல்லவே

சேயிதழ்க் காந்தள் துப்பின்ற – போயினார்

திண்டேர் வரவுரைக்குங் கார்" (யா.க.கா. ப.74)

இவை மூன்றடியாக வந்து தனிச்சொல் இன்றிப் பல விகற்பத்தால் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை**

"நற்கொற்ற வாயில் அறிந்தானையும்நறும் பூங்குழலாய்

சொல்பெற்ற நேரிசைச் சிந்தியலாம் சுரைஆழ அம்மி

நிற்றற்கு உரிய நறுநீல நெய்தலும் முல்லையுமென்று

ஏற்றப்படாதன இன்னிசைச் சிந்திற்கு இலக்கியமே" (யா.க.கா. ப.75)

இக்காரிகை நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும், இன்னிசைச் சிந்தியல் வெண்பாவிற்கும் உதாரணப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

நற்கொற்ற வாயில், அறிந்தானை எனத் தொடங்கும் பாடல்கள் நேரிசைச் சிந்தியல் வெண்பாவிற்கு எடுத்துக்காட்டு ஆகும். சுரை ஆழ அம்மி, நறுநீல நெய்தல், முல்லை எனத் தொடங்கும் பாடல்கள் இன்னிசைச் சிந்தியல் வெண்பாவிற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

எல்லா வெண்பாவிற்கும் இறுதி அடி மூன்று சீராக இருக்கும். அதன் மூன்று சீரிலும் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் நான்கினுள் ஒன்றாக இருக்கும். நாள் – நேர், அசை, மலர் – நிரையசை, குற்றியலுகர ஈறாக முடிந்திருந்தால் காசு பிறப்பு இந்த இரண்டினுள் ஒன்றாக இருக்கும். இதனையே ஆசிரியர் 'நிகரில் வெள்ளைக்கு ஓரசைச்சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும் இற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம்' என்று விளக்கினார்.

“பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயி றூறிய நீர்” (குறள்-1121)

நீர் என்பது நாள் என்னும் வாய்ப்பாடு.

‘செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை

உள்ளறிவான் உள்ளங் கொளல்’ (குறள் - 677)

கொளல் என்பது மலர் என்னும் வாய்ப்பாடு.

‘மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்

நன்கலம் நன்மக்கட் பேறு’ (குறள்- 60)

பேறு என்பது குற்றியலுகர ஈறு. இது காசு என்னும் வாய்ப்பாடு.

‘அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

பகவன் முதற்றே உலகு’ (குறள் -1)

உலகு என்பது குற்றியலுகர ஈறு. இது பிறப்பு என்னும் வாய்ப்பாடு.

இக்காரிகையில் 'நிகரில் வெள்ளைக்கு' என்று கூறப்பட்டதால், பெறப்படும் செய்தி:

'நிகரில் வெள்ளைக்கு’ என்று சிறப்பித்ததனால்,

குறள் வெண்பாவினை ஓரடி முக்கால் என்றும்,

சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்கால் என்றும்,

நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடி முக்கால் என்றும்,

இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்கால் என்றும்,

பஃறொடை வெண்பாவினை பலவடி முக்கால் என்றும் பெயரிட்டு வழங்குவர்.

## குறள் வெண்பாவின் இனம்

குறள் வெண்பாவினை குறள் வெண் செந்துறை, குறட்டாழிசை என்னும் இரண்டும் குறள் வெண்பாவின் இனங்களாகும்.

குறள் வெண் செந்துறை குறட்டாழிசை

(27) “அந்தமில் பாத மாளவிரண் டொத்து முடியின் வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவாய்
அந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபு மங்கேழ்
சந்தஞ் சிதைந்த ருறளும் குறளினத் தாழிசையே’

இக்காரிகை குறள் வெண்பாவிற்கு இனச்செய்யுளாக வரும் குறள்வெண் செந்துறை, குறட்தாழிசை என்ற இரண்டின் இலக்கணத்தைக் கூறுகிறது.

## குறள் வெண் செந்துறை (செந்துறை வெள்ளை)

இரண்டு அடியாய்த் தம்முள் அளவு ஒத்து வருவது குறள்வெண் செந்துறை எனப்படும். இதற்குச் செந்துறை வெள்ளை என்ற பெயரும் உண்டு.

'அந்தமில் பாதம் அளவு இரண்டு ஒத்து' என்று கூறியுள்ளதால் இது அளவு ஒத்த இரண்டு அடிகளாய் வருவதுடன் விழுமிய (சிறந்த) பொருளும் ஒழுகிய ஓசையும் உடையதாக வரும்.

'ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்து ஒழுக்கம் உடைமை" (முதுமொழிக்காஞ்சி - 1)

"கொன்றை வேய்ந்த செல்வன் அடியினை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே" (கொன்றை வேந்தன் - 1)

இப்பாடல்கள் இரண்டடியாய் தம்முள் அளவு ஒத்து (நான்கு சீர் அடியாய் அமைந்து) விழுமிய பொருளும், ஒழுகிய ஓசையும் உடையதாக அமைந்ததால் குறள்வெண்செந்துறை ஆகும்.

## குறட்டாழிசை

1. இரண்டு அடியைப் பெற்று நான்கு சீருக்கு மிகுந்த சீரால் வருவது.
2. முதலடியின் சீர்களைவிட இரண்டாம் அடியின் சீர்கள் குறைந்து வருவது.
3. குறள்வெண் செந்துறை போன்று அளவொத்த இரண்டடிகளாய் வந்து விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி வருவது.
4. செப்பல் ஓசை மாறி, வேற்றுத் தளை வருவது.

இவ்வாறு வருவது குறட்டாழிசை எனப்படும்.

(எ.டு) ‘நீல மாகடல் நீடு வார்திரை நின்ற நின்றபோல் பொங்கிப்பொன்றுமால்
காலம்பல காலம் சென்றும்பின் செல்வர் யாக்கை கழிதலுமே’

இப்பாடல் இரண்டு அடியாய் வந்து, முதலடியில் எட்டுச்சீரும், இரண்டாமடியில் ஆறு சீரும் வந்த குறட்டாழிசை ஆகும்.

**செந்துறை சிதைந்த குறட்டாழிசை** :

‘பிண்டியின் நீழல் பெருமான் பிடர்தலை மண்டலம்

தோன்றுமால் வாழி அன்னாய்’

இப்பாடல் இரண்டு அடியாய் அளவு ஒத்து வந்து, விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையும் இன்றி வந்ததால் செந்துறை சிதைந்த குறட்டாழிசை ஆகும்.

**குறள் வெண்பா சிதைந்த குறட்டாழிசை** :

‘வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்

பண்டைய ளல்லல் படி’

இப்பாடல் இரண்டு அடியாய் வந்து செப்பலோசை சிதைந்த குறட்டாழிசை ஆகும்.

**வெண்பாவின் இனம்**

வெண்தாழிசை, வெண்துறை, வெளி விருத்தம் ஆகிய மூன்றும் வெண்பாவின் இனங்களாகும்.

(28) ‘மூன்றடி யானும் முடிந்தடி தோறும் முடிவிடத்துத்

தான்தனிச்சொல் பெறும் தண்டா விருத்தம்வெண் தாழிசையே

மூன்றடியாய் வெள்ளைபோன்று இறும்,மூன்றுஇழிவு பேழுயர்வாய்

ஆன்றடி தா ஞ்சில அந்தம் குறைந்திறும் வெண்டுறையே’

இக்காரிகை வெண்பா இனமாகிய வெளி விருத்தம், வெண் தாழிசை, வெண்துறை என்ற மூன்றின் இலக்கணத்தைக் கூறுகிறது.

**வெண்தாழிசை (வெள்ளொத்தாழிசை)**

இது மூன்றடி உடையதாக வரும் முதல் இரண்டடியும் நாற்சீர் உடையதாக இருக்கும். மூன்றாவது அடி முச்சீர் உடையதாக இருக்கும்.

“நண்பி தென்று தீய சொல்லார்

முன்பு நின்று முனிவு செய்யார்

அன்பு வேண்டு பவர்”

இப்பாடல் மூன்று அடியாய் வந்த வெண்தாழிசை ஆகும்.

## வெண்துறை (வெண்டுறை)

நண்பி தென்று இது நேரொன்றாசிரியத்தளை. இது ஆசிரியத்தளை உடையதாக வந்தமையால் வெண்பா இலக்கணத்தில் வழுவி அதனுடைய இனமாகிய தாழிசை ஆயிற்று.

மூன்றடிச் சிற்றெல்லையும் ஏழடிப் பேரெல்லையும் பெற்று இடையில் உள்ளவை நான்கு, ஐந்து, ஆறு அடிகளாய் வரும். இறுதியில் உள்ள அடிகளில் சிலசீர் குறைந்துவரும் செய்யுள் வெண் துறை எனப்படும். ஓரடியில் எத்தனை சீர்கள் வேண்டுமானாலும் வரும்.

'ஆன்ற அடிதாம் அந்தம் குறைந்து வரும்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் எல்லா அடிகளிலும் ஒரே ஓசை பெற்று வருவது ஓரொலி வெண்துறை ஆகும் எனவும் முன்பகுதி அடிகளில் ஒருவகை ஓசையும், பின்பகுதி அடிகளில் வேறுஓர் ஓசையும் வருவது வேற்றொலி வெண்துறை ஆகும் எனவும் கொள்ள வேண்டும்.

"தாளாளர் அல்லாதார் தாம்பலர் ஆயக்கால் என்னாம்என்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடுஇரண்டும்
பீலிபோல் சாய்த்துவிழும் பிளிற்றி யாங்கே"

இப்பாடல் மூன்றடி வந்து ஈற்றடி இரண்டும் இரண்டுசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

## வெளி விருத்தம்

மூன்று அடி உடையதாக இருக்கும். ஒவ்வொரு அடியிலும் நான்கு சீரே இருக்கும். ஒவ்வொரு அடியிலும் இறுதிக்கண் ஒரு சொல்லே தனிச்சொல்லாக இருக்கும். வெளிவிருத்தம் நான்கடியிலும் வருவது உண்டு. அப்போதும் ஒரே சொல் தனிச்சொல்லாக அடிதோறும் வரும்.

(எ.டு) கொண்டன் முழங்கினவாற் கோபம் பரந்தனவா – லென் செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவா – லென் செய்கோயான்
எண்டிசையுந் தோகை யிருந்தகலி யேங்கினவா – லென் செய்கோன்

இது மூன்றடியான், என்செய்கோயான் என்னுந் தனிச்சொல் பெற்று வந்த வெளிவிருத்தம்.

(எ.டு) "ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா – ரொருசாரர்

கூகூ வென்றே கூவிளி கொண்டா – ரொருசாரர்

மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா – ரொருசாரர்

ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றா – ரொருசாரர்

இது நான்கடியாய் ஒருசாரர் என்னுந் தனிசொற் பெற்று வந்த வெளிவிருத்தம்.

"மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை மூன்றழிபேழ்

ஆன்றடி தாஞ்சில வந்தத் தடிக ளவைகுறைத்து

தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந் தனிச்சொல்வந்து

மூன்றடி யானு முடியு முடியுமோர் நான்கினுமே" (யா.க.கா. ப.84)

இந்த காரிகையில் தலைதடுமாற்றம் என்னும் தந்திர உத்தி வந்துள்ளது. வெண்பாவிற்கு இனமாகிய தாழிசை, துறைவிருத்தம் ஆகியவற்றிற்கு இலக்கணத்தை முறையாகச் சொல்லாமல் விருத்தம், தாழிசை துறை என்ற முறையில் இலக்கணம் சொல்லப்பட்டுள்ளது. ஒருசார் வெண்துறையின் ஈற்றடி ஒன்றொரு சீர்குறைந்து வருதலும், உள்ளதென்பதூஉம், வெள்ளத்தாழிசையின் முதல் இரண்டடியும் நான்கு சீராகி வரும் என்பதூஉம், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேன் மூன்றடுக்கி வருவனவெல்லாம் வெள்ளொத் தாழிசை என்று கூறப்படும். இந்த மூன்று கருத்துக்களும் தலைதடுமாற்றமாகக் கூறியமையால் பெறப்பட்டன.

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை.**

'கொண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய

வண்டினம் வெண்டுறை தாளா முழங்கொடு தாழிசையே

நண்பிதென் றார்கலி கொன்றைவெண் செந்துறை நீலநண்ணும்

பிண்டி யறுவர்வண் டார்வெறி தாழிசை பெய்வனையே' (யா.க.கா. ப.85)

வளையல்களை அணிந்த கையை உடைய பெண்ணே என மகடூஉ முன்னிலை கூறி இக்காரிகை வெண்பா இனங்களுக்கு உதாரணப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

கொண்டல் முழங்கின, ஆஆ எனத்தொடங்கும் பாடல்கள் வெளிவிருத்தத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

குழலிசைய வண்டினம் எனத்தொடங்கும் பாடல் வெண்துறைக்கு எடுத்துக்காட்டாகும்.

தாளாண், முழங்கு எனத்தொடங்கும் பாடல்கள் இரண்டும் வெண்தாழிசைக்கு உதாரணமாகும்.

நண்பிதென்றார், ஆர்கலி, கொன்றை என்று தொடங்கும் பாடல்கள் குறள் வெண் செந்துறைக்கு எடுத்துக்காட்டாகும்.

நீலம், நண்ணு, பிண்டி, அறுவர், வண்டார் ஆகியவை குறள் தாழிசைக்கு தொடக்க எடுத்துக்காட்டுப் பாடலாகும்.

## 2. ஆசிரியப்பா

நால்வகைப் பாக்களுள் பெருமை மிகுந்தவையாக விளங்குவது ஆசிரியப்பாவாகும். அகவற்பா என்றும் இதனை அழைப்பர்.

### ஆசிரியப்பாவின் பொது இலக்கணம்

1) அகவல் ஓசை பெற்று வரும்.
2) நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் அமைந்து தேமா முதலான ஈரசைச்சீர் நான்கையும் மிகுதியாகப்பெற்று வரும்.
3) காய்ச் சீர்களைக் குறைவாகப் பெற்று வரும்.
4) ஆசிரியத் தளை மிகுதியாகப் பெற்று வரும்.
5) வெண்டளை, கலித்தளை ஆகிய இரண்டும் விரவி வரும்.
6) கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய வஞ்சித்தளைகள் ஆசிரியப்பாவில் வராது.

## ஆசிரியப்பாவின் வகைகள்

(29) கடையயர் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீர்
இடைபல குன்றின் இணைக்குற ளெல்லா அடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவல் அடிமறி மண்டிலமே'

ஆசிரியப்பா 1. நேரிசை ஆசிரியப்பா, 2. இணைக்குறள் ஆசிரியப்பா, 3. நிலை மண்டில ஆசிரியப்பா, 4. அடிமறிமண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

### 1. நேரிசை ஆசிரியப்பா

ஆசியரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடியும் அளவடியாக (நாற்சீரடியாக) வந்து ஈற்றயலடி முச்சீராய் வருவது நேரிசை ஆசிரியப்பா ஆகும். ஈற்றடியின் இறுதிச்சீர் 'ஏ' என்று முடியும்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே" (யா.க.கா. ப.85)

இப்பாடலில் ஈற்றயலடி முச்சீரால் வந்து ஈற்றடியின் இறுதிச்சீர் 'ஏ' என முடிவதால் நேரிசை ஆசிரியப்பா ஆகும்.

### 2. இணைக்குறள் ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, முதல் அடியும் கடைசி அடியும் நாற்சீர் அடியாய் அமைந்து. இடையில் இருசீரடி, முச்சீர் அடியும் கலந்து வருவது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும்.

"நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே" (யா.க.கா. ப.86)

இப்பாடலில் முதலடியும் ஈற்றடியும் நாற்சீரடியால் வந்து, இடையில் உள்ள அடிகள் இரண்டு சீராகவும், மூன்று சீராகவும் வந்துள்ளதால் இது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகும்.

### 3. நிலை மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடியும் நாற்சீர் அடியாய் அமைவது நிலை மண்டில ஆசிரியப்பா ஆகும்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னர் உயிர்த்தே மலர் தலையுலகம்

அதனால் யானுயிர் என்பது அறிகை

வேண்மிகு தானை வேந்தர்க்குக் கடனே" (யா.க.கா. ப.86)

இப்பாடலில் எல்லா அடியும் நாற்சீர் அடியாய் அமைந்துள்ளதால் நிலை மண்டில ஆசிரியப்பா ஆகும்.

### 4. அடிமறி மண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பெற்று, எல்லா அடியும் அளவு ஒத்துவந்து, எந்த அடியை தம் விருப்பம்போல் முன்னோ, பின்னோ இடம் மாற்றி வைத்துப் படித்தாலும் ஓசையோ, பொருளோ மாறாது அமைவது அடிமறி மண்டில ஆசிரியப்பா ஆகும்.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரல் எனினே யான்அஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே' (யா.க.கா. ப.87)

இப்பாடலின் அடிகளை மனம் விரும்பியபடி முதல், நடு, இறுதி என மாற்றி வைத்துப் படித்தாலும் ஓசையும், பொருளும் மாறாமல் வருவதால் இது அடிமறி மண்டில ஆசிரியப்பா ஆகும்.

### ஆசிரியப்பாவின் இனங்கள்

ஆசிரியத் தாழிசை, ஆசிரியத் துறை, ஆசிரிய விருத்தம் என்ற மூன்றும் ஆசிரியப்பாவின் இனங்களாகும்.

(30) ‘தருக்கியல் தாழிசை மூன்றடி கொப்பன நான்கடியாய்

எருத்தடி நைந்தும் இடைமடக் காயும் இடையிடையே

சுருக்கடி யாயுந் துறையாங் குறைவில் தொல்சீரகவல்

விருத்தங் கழிநெடில் நான்கொத் திறுவது மெல்லியவே’

இக்காரிகை ஆசிரியப்பாவின் மூன்று இனங்களின் இலக்கணத்தைக் குறிப்பிடுகிறது. அவை, 1. ஆசிரியத் தாழிசை, 2. ஆசிரியத் துறை, 3. ஆசிரிய விருத்தம் என்பனவாகும்.

### 1. ஆசிரியத் தாழிசை

மூன்று அடியாகத் தம்முள் அளவு ஒத்து வருவது ஆசிரியத் தாழிசை ஆகும்.

'வானுற நிமிர்ந்தனை, வையகம் அளந்தனை
பால்மதி விடுத்தனை பல்லுயிர் ஓம்பினை
நீல்நிற வண்ணநின் நிரைகழல் தொழுதனம்" (யா.க.கா. ப.92)

இப்பாடல் ஒத்த அடி மூன்றாய் வந்ததால் ஆசிரியத் தாழிசை ஆகும்.

'தருக்கியல் தாழிசை' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் இவ் ஆசிரியத் தாழிசையானது தனிப்பாடலாக வரும் என்றாலும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்பானது ஆகும்.

‘கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ’

"பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழீ."

"கொல்லையம் சாரல் குருந்துஒசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ." (யா.க.கா. ப.92)

இப்பாடல்கள் ஒருபொருள்மேல் (கண்ணன் வந்தால் அவன் வாயில் குழலிசை கேட்போம்) மூன்று அடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை ஆகும்.

### 2. ஆசிரியத் துறை

1) நான்கு அடியாய் ஈற்று அயலடி குறைந்து வருவதும்
2) நான்கு அடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் (வந்த வரியே மீண்டும் வருவது) வருவதும்
3) நான்கு அடியாய் இடைஇடை குறைந்து வருவதும்
4) நான்கு அடியாய் இடைஇடை குறைந்து இடை மடக்காய் வருவதும்

ஆசிரியத் துறை ஆகும்.

சீர் வரையறை சொல்லாததால் எத்தனை சீர் அடியாலும் வரலாம் எனக்கொள்ள வேண்டும்.

ஈற்று அயலடி குறைந்தும், நடுவிலுள்ள இரண்டு அடிகள் குறைந்தும், மிகுந்தும் வருவது ஆசிரியத் துறை ஆகும். அல்லது ஓரடி குறைந்து வருவன ஆசிரிய நேர்த்துறை என்றும் ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக்குறள்த் துறை எனவும் கொள்ள வேண்டும்.

"கரைபொரு கான்யாற்றங் கல்லதர் எம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத்து அடுபுலி ஏறுஅஞ்சி அகன்று போக
நரையுரு மேறுநும் கைவேல் அஞ்சும் நும்மை
வரையர மங்கையர் வெளவுதல் அஞ்சுதும் வார லையோ" (யா.க.கா. ப.93)

இப்பாடல் நான்கு அடியாய் வந்து ஈற்றயலடி மட்டும் சீர் குறைந்து (5 சீர்) மற்ற மூன்று அடிகளும் சீர் ஒத்து (6 சீர்) வந்த ஆசிரியத் துறை ஆகும்.

"வண்டுளர் பூந்தார் வளங்கெழு செம்பூட் சேய்வடிவே போலத்
தண்தளிர்ப்பூம் பிண்டித் தழைஏந்தி மாவினவித் தணந்தோன் யாரே
தண்தளிர்ப் பூம்பிண்டித் தழைஏந்தி வந்ததும்
பண்டைப் பதிவினவிப் பாங்கு படமொழிந்து படர்ந்தோன்ன்றே?'' (யா.க.கா. ப.93)

இப்பாடல் நான்கடியாய்வந்து ஈற்றயலடி மட்டும் சீர் குறைந்து (4 சீர்) இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை ஆகும். (இடை மடக்கு வந்த அடி மீண்டும் வருதல்)

"பாடகம்சேர் கால்ஒருபால் பைம்பொன் கணைகழல்கள் ஒருபால் தோன்றும்
நீடுகுழல் ஒருபால் நீண்டசடை ஒருபால்
வீடிய மானின் அதள்ஒருபால் மேகலை சேர்ந்து
ஆடும்துகில் ஒருபால் அவ்உருவம் ஆண்பெண்ணென்று அறிவர்யாரோ!"

இப்பாடல் நான்கடியாய் இடையிலுள்ள அடி சீர்குறைந்து வந்த ஆசிரியத் துறை ஆகும்.

"வரிகொள் அரவும் மதியும் சூழலக்
கரிகால் ஏந்தி ஆடுமே
கரிகால் ஏந்தி ஆடும் இறைவன்
புரிபுன் அடைமேல் புனலும் பிறழவே"

இப்பாடல் நான்கடியாய் இடையிலுள்ள அடி சீர்குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை ஆகும்.

**3. ஆசிரிய விருத்தம்**

கழிநெடிலடி நான்கு தம்முள் அளவு ஒத்து வருவது ஆசிரிய விருத்தம் ஆகும்.

ஆறு, ஏழு, சீருள்ள அடி கழிநெடிலடி எனப்படும்.

எட்டு சீருக்கு மேல் வரும் ஆசிரிய விருத்தங்கள் சிறப்பில்லை. குறைவில் என்று சிறப்பித்தமையால் ஆறு, ஏழு, எட்டு சீர்கள் உள்ள அடிகளாய் வந்தால் அது சிறப்புடைய ஆசிரிய விருத்தமாகும்.

(எ.டு) "விடஞ்சூ ழவிர னிடைநுடங்க மின்வாள்வீசி விரையோர்வேங்
கடஞ்சூழ் நாடன் காளிங்கன் கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சேர் கொங்கை மலைதாந்தம் வடிக்கண்ணீல் மலர்தாந்தம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தா மென்னுந் தன்னகத் தண்ணுமையே"

(யா.க.கா. ப.95)

இது அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

"கணி கொண் டலர்ந்த நறவேங்கை யோடு
கமழ்கின்ற காந்த ளிதழால்"

இது எழுச்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

"மூவடிவி னாலிரண்டு சூழ்சுடரு நாண
முழுதுலக மூடியெழின் முளைவயிர நாற்றி"

இது எண்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

"இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியின் எதிர்ந்த தானையை
இலங்கும் ஆழியின் விலங்கியோள்"

இது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

"கொங்கு தங்கு கோதை யோதி மாத ரோடு
கூடு நீடு மோடை நெற்றி"

இது பதின்சீர்க் கழிநெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

"கன்று குணில்வா னுறத்தா ழிசையாங் கறைபொருகாண்
என்றதும் வண்டுளர் பூந்தா ரிரங்கு குயின்முழவாக்

கொன்றார்ந் தமைந்த வகவற் றுரைகுறை யாவிருத்தம்

பின்றாழ் குழலி விடங்கணி மூவடி வாதியவே"

இவ்வுரைச் சூத்திர காரிகையின் வழியே ஆசிரியப்பா இனங்கட்குக் காட்டிய இலக்கியங்களை நினைத்துக் கொள்க.

# அலகு - 4

## 4. கலிப்பா

ஓசையால் சிறப்புற்று விளங்குவது கலிப்பா ஆகும். சீர்,பொருள், ஓசை ஆகியவற்றால் அழகு பெற்று விளங்குவதால் கலிப்பா எனப்பெயர் பெற்றுள்ளது.

### கலிப்பாவின் பொது இலக்கணம்

1. கலிப்பா துள்ளல் ஓசையைப் பெற்று வரும்.
2. நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் வரும்.
3. நேரிற்று இயற்சீரும் (தேமா, புளிமா) நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீரும் (கருவிளங்கனி, கூவிளங்கனி வராது.
4. நிரை முதலாகிய வெண்பா உரிச்சீர் (புளிமாங்காய், கருவிளங்காய்) மிகுந்து வரும்.
5. நான்கு அடிகளாய் கலித்தளையும், பிறதளைகளும் இடம்பெறும்.
6. தரவு, தாழிசை என்னும் முதல் உறுப்புக்களையும், அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் துணை உறுப்புக்களையும் பெற்று வரும்.

### கலிப்பாவின் உறுப்புக்கள்

கலிப்பா பல உறுப்புக்களைப் பெற்றிருப்பதால் வெண்பா, ஆசிரியப்பா என்னும் இரண்டு பாக்களைவிட சிறப்பானதாகக் கருதப்படுகிறது. கட்டுரைபோல் தொகுத்தும் வகுத்தும் கூறுவதால் இவ்வுறுப்புக்கள் கூற வந்தனவற்றை தெளிவாகக் கூறப் பயன்படு கின்றன. அவை, 1. தரவு, 2. தாழிசை, 3. தனிச்சொல், 4. சுரிதகம், 5. அராகம், 6. அம்போதரங்கம் என்பன. தரவும் தாழிசையும் முதல் உறுப்புக்கள். மற்றவை துணை உறுப்புக்களாகும். கலிப்பா பற்றி அறியும் முன்னர் அதன் உறுப்புக் களின் தன்மையை அறிவது சிறப்பாகும்.

### 1. தரவு

கலிப்பாவின் முதல் உறுப்பாக அமைவது தரவாகும். செய்யுளில் கூறப்போகும் செய்தியைத் தொடங்கி வைப்பது இதன் பணியாகும். இது மூன்றடிச் சிற்றெல்லையையும் வரையறையற்ற பேரெல்லை யையும் உடையது. இருந்தாலும் பன்னிரண்டு அடிகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. தரவிற்கு

எருத்தம் (பிடரி) என்னும் வேறு பெயரும் உண்டு. இது இக்காலக் கட்டுரையின் முன்னுரை போன்றது.

**2. தாழிசை**

தாழ்ந்து ஒலிப்பதால் தாழிசை என்று பெயர். இது செய்யுளின் முதன்மை உறுப்பாக அமைகிறது. தரவில் தொடங்கப்பட்ட செய்தியை விரித்துக் கூறுகிறது. தரவிற்கும் சுரிதகத்திற்கும் இடையில் வருவதால் இடைநிலைப்பாடு எனவும் வழங்கப்படும். தரவைவிடத் தாழிசையின் அடிகள் குறைவானதாக அமையும். இதன் சிற்றெல்லை இரண்டடி யாகவும் பேரெல்லை நான்கடியாகவும் அமையும். இத்தாழிசை மூன்றடியாகவும் ஆறடியாகவும் இரட்டித்தும் வரும்.

**3. தனிச்சொல்**

பொருள் தொடர்புடையதாக ஓரசை அல்லது சீராக அமைவது தனிச்சொல் ஆகும். தனித்து நிற்பதால் தனிச்சொல்லாக வழங்கப் படுகிறது. பெரும்பாலும் சுரிதகத்தின் முன்னும் சில இடங்களில் பிற உறுப்புக்களின் இடையிலும் வரும். இதற்கு விட்டிசை, தனிநிலை, கூன், அசைநிலை என்ற வேறு பெயர்களும் உண்டு.

**4. சுரிதகம்**

சுரிதகம் கலிப்பாவின் துணை உறுப்பாகக் கருதப்படுகிறது. சுருக்கமாகப் பொருளை முடிக்கும் தன்மையுடையதாக அமைவதால் இதனை முடிவுரையாகவும் கொள்ளலாம். கலிப்பாவிற்கு உரிய துள்ளல் ஓசையைப் பெற்று வராமல் பெரும்பான்மை ஆசிரியப்பா வையும் சிறுபான்மை வெண்பாவையும் கொண்டு முடியும். இதனால் இதனை அடைகொடுத்து ஆசிரியச் சுரிதகம், வெண்பாச் சுரிதகம் என்று வழங்குவர்.

**5. அராகம்**

அராகம் என்பதற்கு இசை என்பது பொருள். இச்சொல் தமிழில் இராகம் எனவும் வழங்கப் படுகிறது. இவ்வுறுப்பு கருவிளச் சீர்களை மிகுதியாகப் பெற்று வரும். அதனால் மிடுக்குற்றுச் செல்லும் ஓசையினைப் பெற்றிருக்கும். இது தாழிசைக்குப் பின்னரும் அம்போதரங்கத்திற்கு முன்னரும் வரும். அளவடி முதல்

எல்லா அடியாலும் வரும். சிற்றெல்லை நான்கு அடியாகவும் பேரெல்லை எட்டு அடியாகவும் வரும். இது வண்ணகம், அடுக்கியல், முடுகியல் என்னும் வேறு பெயர்களாலும் வழங்கப்படும்.

### 6. அம்போதரங்கம்

அராகத்தை அடுத்து அமையும் உறுப்பு அம்போதரங்கம் ஆகும். துவங்கும் போது பெரிதாக உருவெடுத்துக் கரையை முடிய முடிய நாற்சீரடி, முச்சீரடி, இருசீரடி எனக் குறைந்து கொண்டே வரும். இவ்வுறுப்பு தாழிசைக்கும், தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும், அராகத்திற்கும் தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும்.

அம்போதரங்கம் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் என்னும் நான்கு உறுப்புகளை உடையது. நாற்சீர் கொண்ட ஈரடியால் இரண்டு (பேரெண்), நாற்சீர் அடியால் நான்கு (அளவெண்), முச்சீரடியால் எட்டு (இடையெண்) இருசீரடியால் பதினாறு (சிற்றெண்) என வரும். அம்போதரங்க அடிகளில் காய்ச்சீர்களும் இயற்சீர்களும் விரவி வரும். அசையடி, பிரிந்திசைக்குறள், சொற்சீரடி, எண் என்பன அம்போதரங்கத்தின் வேறுபெயர்கள்.

### கலிப்பாவின் வகைகள்

(31) ‘தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதமாய்
நிரலொன்றி னேரிசை யொத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறண்டு வேமடுப்பின்
அரவொன்று மல்கு லதம்போ தரங்கவொத் தாழிசையே’

இக்காரிகை கலிப்பாவின் வகைகளைக் கூறுகிறது.

### கலிப்பா

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

   இவை மூன்றும் பொதுவாக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.
4. வெண் கலிப்பா
5. கலி வெண்பா

6. தரவு கொச்சகக் கலிப்பா
7. தரவிணை கொச்சகக் கலிப்பா
8. சிஃறாழிசைக் கலிப்பா
9. பஃறாழிசைக் கலிப்பா
10. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

இறுதி ஐந்தும் பொதுவாய் கொச்சகக் கலிப்பா எனப்படும்.

## 1. ஒத்தாழிசைக் கலிப்பா

ஒத்தாழிசைக் கலிப்பா மூன்று வகைப்படும். அவை 1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, 2. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

## நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா

நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா நான்கு உறுப்புகளை உடையது.

தரவு ஒன்று, தாழிசை மூன்று, தனிச்சொல் ஒன்று சுரிதகம் என்ற வரிசை மாறாமல் நான்கு உறுப்புக்களைப் பெற்று வருவது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

**தரவு**

(எ.டு) "வாள்நெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோள்நெடுந்தண் தகைதுறந்து துன்பம்கூர் பசப்பினவாய்ப்
பூண்ஒடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ"

**தாழிசை**

'சூருடைய கடுங்கடங்கள் சொலற்கரிய என்பவால்
பீருடைய நலம் தொலையப் பிரிவாரோ பெரியரே

சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய என்பவால்
நாணுடைய நலம்தொலைய நடப்பாரோ நலமிலரே.

சிலம்படைந்த வெங்கானம் சீரிலவே என்பவால்
புலம்படைந்து நலம்தொலையப் போவாரோ பொருள்இலரே.

இவை மூன்றும் தாழிசை.

**தனிச்சொல்**

எனவாங்கு,

**சுரிதகம்**

'அருள்எனும் இலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்

பன்னெடுங் காலமும் வாழியர்

பொன்னெடுந் தேரோடும் தானையிற் பொலிந்தே."

இப்பாடல் தரவு மூன்றடியாகவும், தாழிசை மூன்றும் இரண்டு இரண்டு அடியாகவும் தனிச்சொல் பெற்று மூன்றடி ஆசிரியச் சுரிதகத்தால் வந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

'தரவு தாழிசை தனிச்சொற் சுரிதகம்

எனுநான் குறுப்பின தொத்தா ழிசைக்கலி' (யா.க.கா. ப.98)

வெள்ளைச் சுரிதகத்தால் வந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டுப் பாடல் பின்வருமாறு,

**தரவு**

"முத்தொடு மணிதயங்கு முக்குடைக்கீழ் முனைவனே

எத்திசையும் பல்லுயிர்கள் இன்புற இனிதிருந்து

பத்துறு திசை அனைத்தும் பகைபசி பிணிநீங்க

உத்தமர்கள் தொழுதேத்த ஒளிர்வரைபோல் செலவினாய்

**தாழிசை**

எள்அனைத்தும் இடரின்றி எழில்மாண்ட பொன்னெயில்

உள்ளிருந்த உன்னையே உறுதுணைஎன்(று) அடைந்தோரை வெள்ளில்சேர்

வியன்காட்டுள் உறைக என்றல் விழுமிதோ

குணங்களின் வரம்பு இகந்து கூடிய பன்னிரண்டு

கணங்களும்வந்(து) அடியேத்தக் காதலித்துன் அடைந்தோரைப் பிணம்பிறங்கு

பெருங்காட்டுள் உறைகஎன்றல் பெருமையோ.

விடத்தகைய வினைநீக்கி வெள்வளைக்கைச் செந்துவர்வாய்

மடத்தகைய மயில்அனையார் வணங்கிநின் அடைந்தோரைத் தடத்தகைய காடுறைக என்பதுநின் தகுதியோ.

இவை மூன்றும் தாழிசை

**தனிச்சொல்**

எனவாங்கு

**சுரிதகம்**

எனைத்துணையை ஆயினும் ஆகமற்று உன்கண்

தினைத்துணையும் தீயவை இன்மையின் சேர்தும்

வினைத்தொகையை வீட்டுக என்று."

இப்பாடல் தரவு நான்கு அடியாகவும், தாழிசை மூன்றும் மூன்று மூன்று அடியாகவும் தனிச்சொல் பெற்று வெள்ளைச் சுரிதகத்தால் வந்த நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

### 1. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா

அம்போதரங்கம் கரையை நோக்கி வரவரக் குறைந்து வரும் நீரலையைப் போல, நாற்சீரடி, முச்சீரடி, இருசீர் அடி என வரும் அம்போதரங்க உறுப்பைத் தாழிசைக்கும் தனிச்சொல்லுக்கும் இடையில் வருமாறு அமைத்து தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் - என்ற ஐந்து உறுப்புகள் இதே வரிசையில் வருமாறு அமைவது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி, எண் என்ற வேறுபெயர்களும் உண்டு. இப்பாவிற்கு இலக்கணம் கூறும் பகுதியில் 'மரபொன்று நேரடி' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால், 1. அளவடி ஈரடி இரண்டும், 2. அளவடி ஓரடி நான்கும். 3. முச்சீரடி (சிந்தடி) எட்டும், 4. இருசீரடி (குறளடி) பதினாறும் வருவது சிறப்பானதாகும். இவற்றுள் சிந்தடி நான்காகவும், குறளடி எட்டாகவும் சுருங்கி வரப்பெறும் என்றும் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஈரடி இரண்டிற்கு | _ | பேரெண் என்று பெயர் |
| ஓரடி நான்கிற்கு | - | அளவெண் என்று பெயர் |
| சிந்தடி எட்டிற்கு | - | இடையெண் என்று பெயர் |
| குறளடி பதினாறுக்கு | _ | சிற்றெண் என்று பெயர் |

என்று சிலர் கூறவும் செய்வர்.

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

**தரவு**

"கெடலரும் மாமுனிவர் கிளர்ந்துடன் தொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரில் கலந்துஒளிரும் வால்உளைய
அழல்அவிர் சுழல்செங்கண் அரிமாவாய் மலைந்தானைத்
தாரொடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
ஆர்புனல் இழிகுருதி அகலிடம் உடன்நினைப்பக்
கூர்உகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்!

**தாழிசை**

முரசதிர் வியன்மதுரை முழுவதூஉம் தலைபனிப்பப்
புரைதொடித் திரள்திண்தோள் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண்டு அயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ?

கலியொலி வியனுலகம் கலந்துடன் நனிநடுங்க
வலியியல் அவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதார் உடம்பொடு மறம்பிதிர எதிர்கலக்கிச்
சேணுயர் இருவிசும்பில் சேர்த்ததுநின் சினமாமோ?

படுமணி இனநிரைகள் பரந்துடன் இரிந்தோடக்
கடுமுரண் எதிர்மலைந்த காரொலி எழிலேறு
வெரிநொடு மருப்பொசிய வீழ்ந்துதிறல் வேறாக
எருமலி பெருந்தொழுவின் இறுத்ததுநின் இகலாமோ?

இவை மூன்றும் தாழிசை

**நாற்சீரடி இரண்டு அம்போதரங்கம் (பேரெண்)**

இலங்கொளி மகரத்து எழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கையின் மாஅல் நின்நிறம்
விரிஇணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளிறு அட்டோய் புரையும் நின்னுடை

**நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம் (அளவெண்)**

கண்கவர் கதிர்முடி கனலும் சென்னியை

தண்சுடர் உறுபகை தவிர்த்த ஆழியை

ஒலியியல் உவணம் ஓங்கிய கொடியினை

வலிமிகு சகடம் மாற்றிய அடியினை

**முச்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம் (இடையெண்)**

போரவுணர்க் கடந்தோய் நீ

புணர்மருதம் பிளந்தோய் நீ

நீரகலம் அளந்தோய் நீ

நிழல் திகழ்ஐம் படையோய் நீ

**இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம் (சிற்றெண்)**

ஊழி நீ உருவு நீ

உலகு நீ அருவு நீ

ஆழி நீ அறமு(ம்) நீ

அருளு(ம்) நீ மறமு(ம்) நீ

**தனிச்சொல்**

எனவாங்கு

**சுரிதகம்**

அடுதிறல் ஒருவநிற் பரவுதும் எங்கோன்

தொடுகழல் கொடும்பூண் பகட்டெழில் மார்பில்

கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்

புயல்உறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதன்

தொன்று முதிர்கடல் உலகம்

ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே." (யா.க.கா. ப.102)

இப்பாடல் இடையெண் என்ற அம்போதரங்கம் எட்டடிக்குப் பதில் நான்கடியாகவும், சிற்றெண் என்ற அம்போதரங்கம் பதினாறு அடிக்குப் பதில் எட்டடியாகவும் வந்த அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்

ஒத்தாழிசைக் கலிப்பா இரண்டிற்கும்

உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை.

'வாள்நெடுங்கண்பனி நேரிசை ஆகும் மதர்த்து இருண்டு
சேணுற ஓடிக் குறைஇடறிச் செரு செய்யும்விழி
நாணும் திருவும் அறிவும் செறிவும் உடைய நல்லாய்
ஏணும் கெடலரும் மாமுனி அம்போ தரங்கம்என்னே'

இக்காரிகை நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும், அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் உரிய எடுத்துக்காட்டுப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

வாள்நெடுங்கண்பனி என்று தொடங்கும் பாடல் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

கெடலரும் மாமுனி என்று தொடங்கும் பாடல் அம்போதரங்க ஒத்தாழிசைக்கு எடுத்துக்காட்டுப் பாடலாகும்.

### 3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா

(32) 'அசையடி முன்னர் அராகம்வந் தெல்லா உறுப்பு முண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளைதட்
டிசைதன தாகியும் வெண்பா இயைந்துமின் பான்மொழியாய்
விசையறு சிந்தடி யாலிறு மாய்விடின் வெண்கலியே'

இக்காரிகை வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும் வெண் கலிப்பாவிற்கும் இலக்கணம் கூறுகிறது.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்ற ஆறு உறுப்புகளையும் பெற்று அமைவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா ஆகும்.

அராகம் என்ற சொல்லிற்கு அடுக்கியல், முடுகியல், வண்ணகம் என்று வேறு பெயர்களும் உண்டு.

'வசையறு வண்ணகம்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் அராக உறுப்பு அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்ற மூன்று அடியாலும் வரும் வேண்டும். அவ்வாறு வரும்போது நான்கடி முதல் எட்டடி வரை வரும்.

## வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

### தரவு

"விளங்குமணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்கால் துறுமலர் நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பணைஎருத்தின் மிசைத்தோன்றும்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய்! குறைஇரந்து முன்நாட்கண்.
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கும் அல்லார்க்கும்
தாயாகித் தலையளிக்கும் தண்துறை ஊர கேள்'

### தாழிசை (மூன்று)

காட்சியால் கலப்பெய்தி எத்திறத்தும் கதிர்ப்பாகி
மாட்சியால் திரியாத மரபொத்ததாய்! கரவினால் பிணிநலம் பெரிதுஎய்திப்
பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலம் தனியேவந்து அருளுவதும் அருளாமேர்

அன்பினால் அமிழ்துஅளைஇ அறிவினால் பிறிதின்றிப்
பொன்புனை பூண்ஆகம் பசப்பு எய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோள் அருளுதற்கு இருளிடைத் தமியையாய்க்
கருவரைத்தோள் கதிர்ப்பிக்கும் காதலும் காதலோ;

பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்துஒழுகும்
தேங்காத கரவினையும் தெரியாத இருளுடைக்கண்
குடவரைவேய்த் தோள்இணைகள் குளிர்ப்பிப்பான்தமியையாய்த்
தடமலர்த்தார் அருளும்நின் தகுதியும் தகுதியோ.

### அராகம் (நான்கு)

தாதுறு முறிசெறி தடமலர் இடையிடை தழல்என விரிவனபொழில்
போதுறு நறுவிரை புதுமலர் தெரிதரு கருநெய்தல் விரிவனகழி
தீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவனதுறை
மூதுறும் ஒலிகலி நுரைதரு திரையொடு கழிதொடர் புடையதுகடல்

**அம்போதரங்கம்**

நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்

கொடுந்திறல் உடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி இராவருதல் வேண்டாஎன்று இசைத்திலமோ
கருநிறத்து அடுதொழில் கராம்பெரி துடைமையால்
இருள்நிறத்து ஒருகானல் இராவாரல் என்றிலமோ.

**நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்**

நாணொடு கழிந்தன்றால் பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலும் ஒழிந்தன்றால் தொடித்தோளி தடங்கண்ணே
அரற்றொடு கழிந்தன்றால் ஆரிருளும் ஆயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்றால் நனவதுவும் நல்நுதற்கே.

**முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்**

அத்திறத்தால் இசைந்தன தோள்
அலர்தற்கு மெலிந்தன கண்
பொய்த்துரையால் புலர்ந்தது முகம்
பொன்நிறத்தால் போர்த்தன முலை
அழலினால் அசைந்தது நகை
அணியினால் ஒசிந்தது இடை
குழலினால் அவிர்ந்தது முடி
குறையினால் கோடிற்று நிறை.

**இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்**

உட்கொண்ட தகைத்தொருபால்
உலகறிந்த வலத்தொருபால்
கண்கொண்டல் துளித்தொருபால்
கழிவெய்தும் படித்தொருபால்
பரிவுறூஉம் தகைத்தொருபால்
படர்வுறூஉம் பசப்பொருபால்
இரவுறூஉம் துயரொருபால்

இளிவந்த வெளிற்றொருபால்

மெலிவுறூஉந் தகைத்தொருபால்

விளர்ப்புவந் தடைந்தொருபால்

பொலிவுசென் றகன்றொருபால்

பொறைவந்து கூர்ந்தொருபால்

காதலில் கதிர்ப்பொருபால்

கட்படாத் துயரொருபால்

ஏதில்சென் றணைந்தொருபால்

இயல்நாணிற் செறிவொருபால்.

**தனிச்சொல்**

எனவாங்கு

**சுரிதகம்**

"இன்னதுஇவ் வழக்கம் இத்திறம் இவள்நலம்

என்னவும் முன்நாள் துன்னாய் ஆகிக்

கலந்த வண்மையை ஆயினும் நலந்தகக்

கிளையொடு கெழீஇத் தளைஅவிழ் கோதையைக்

கற்பொடு காணிய யாமே

பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே." (யா.க.கா. ப.106)

## வெண்கலிப்பா

கலித்தளை பொருந்தி துள்ளல் ஓசை பெற்று ஈற்றடி முச்சீரால் வருவது வெண்கலிப்பா ஆகும். விசையறு சிந்தடி என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் பிற தளைகளும் அருகிவரும் எனக் கொள்ள வேண்டும்.

'வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்

கோளார்ந்த பூண்ஆகம் குழைபுரளக் கோட்டெருத்தின்

மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்

சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தம் சொல்முறையான்

மனையறமும் துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்

வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் டிவைஉரைத்த

தொன்மைசால் மிகுகுணத்தெம் துறவரசைத் தொழுதேத்த

நன்மைசால் வீடுஎய்து மாறு." (யா.க.கா. ப.107)

இப்பாடல் கலித்தளை வந்து, துள்ளல் ஓசை பெற்று, ஈற்றடி வெண்பாப் போன்று முச்சீரடியால் முடிந்துள்ளதால் வெண்கலிப்பா ஆகும்.

**கலி வெண்பா**

வெண்டளையும், செப்பலோசையும் பெற்று ஈற்றடி முச்சீரடியால் வருவது கலிவெண்பா ஆகும்.

"சுடர்த்தொடீஇ கேளாய்! தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலிற்சிதையா அடைச்சிய
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானும் இருந்தேமா இல்லிரே
உண்ணுநீர் வேட்டேன் எனவந்தாற்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீர் ஊட்டிவா என்றாள் எனயானும்
தன்னை அறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
அன்னாய் இவனொருவன் செய்ததுகாண் என்றேனா
அன்னை அலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினான் என்றேனா அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ மற்றுஎன்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன். (யா.க.கா. ப.108)

இப்பாடல் வெண்டளையும் செப்பல் ஓசையும் பெற்று, ஈற்றடி வெண்பாப் போன்று முடிந்து ஒருபொருள்மேல் வந்ததால் கலிவெண்பா ஆகும்.

இனிப் பிறதளை கலந்துவந்த கலிவெண்பாப் பாடல்

"ஏர்மலர் நறுங்கோதை எருத்தலைப்ப இறைஞ்சித்தண்
வார்மலர்த் தடங்கண்ணார் வலைப்பட்டு வருந்திய என்

தார்வரை அகன்மார்பன் தனிமையை அறியுங்கொல்

சீர்மலி கொடிஇடை சிறந்து'

இப்பாடல் ஆசிரியத்தளையும் கலித்தளையும் கலந்து வந்த கலிவெண்பா ஆகும்.

**உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை.**

நின்று விளங்கு மணிப் பசும்பொன்நிறம் ஆறு உறுப்பும்

ஒன்றிய வண்ணக ஒத்தாழிசைக்கலி ஓசை குன்றாத்

துன்றிய வாளார் மழையும் சுடர்த்தொடீஇ ஏர்மலரும்

என்றுஇவை வெண்கலிப்பாவிற்கு இலக்கியம் ஏந்திழையே!

இக்காரிகை வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கும்,

வெண்கலிப்பாவிற்கும் உரிய எடுத்துக்காட்டுப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

விளங்குமணிப் பசும்பொன் எனத் தொடங்கும் பாடல் வண்ண ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

வாளார்மழை, சுடர்த்தொடீஇ, ஏர்மலர் என தொடங்கும் பாடல்கள் வெண்கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

**கொச்சகக் கலிப்பா**

தரவு முதலான உறுப்புக்களுள் சிலவற்றைப் பெற்றுவரும். அவ்வுறுப்புகள் முறை மாறியும் மிகுந்தும் குறைந்தும் வரும். இவ்வாறு வருவது கொச்சகக் கலிப்பா ஆகும். இது ஐந்து வகைப்படும்.

**கொச்சகக் கலிப்பாவின் வகை**

(33) ‘தரவே தரவினை தாழிசை தாமும் சிலபலவாய்

மரபே இயன்றும் மயங்கியும் வந்தன ஆங்குஅமைந்தோள்

அரவுஏர் அகல்அல்குல் அம்புஏர் நெடுங்கண் வம்பேறு கொங்கைக்

குரவே கமழ் குழலாய்! கொண்ட வான்பெயர் கொச்சகமே.

வளைந்த மூங்கிலைப்போன்ற தோள்களையும், பாம்பின் படம் போன்ற அல்குலையும், அம்புபோல் அழகிய நீண்ட கண்களையும், புதுமை அழமுமிகுந்த மார்பகங்களையும், மணம் வீசும் கூந்தலையும் உடையவளே என மகடூஉ

முன்னிலை கூறி, இக்காரிகை கொச்சகக் கலிப்பாவின் ஐந்து வகைகளையும் இலக்கணத்தையும் கூறுகிறது.

1. ஒரு தரவு வருவது – தரவு கொச்சகக் கலிப்பா
2. இரண்டு தரவு வருவது – தரவிணைக் கொச்சகக் கலிப்பா
3. சில தாழிசை வருவது – சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
4. பல தாழிசை வருவது – பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா
5. உறுப்புகள் முன்பின் கலந்து மயங்கி வருவது – மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

'மரபே இயன்றும்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால்,

1) கலிப்பாவுக்குச் சொல்லப்பட்ட ஆறு உறுப்புகளும் மிகுந்தும் குறைந்தும் வரும்.
2) ஆறு உறுப்புகளும் இடம் பெயர்ந்தும், திரிந்தும் ஒன்றுடன் ஒன்று மயங்கியும் வரும்.
3) கலிப்பாவில் வராது என்று விலக்கப்பட்ட நேரீற்று இயற்சீரும் (தேமா, புளிமா) நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீரும் (கருவிளங்கனி, கூவிளங்கனி), ஐஞ்சீர் அடியும் ஆகிய இவை சேர்ந்து வரும்.

மேலே கூறப்பட்ட மாறுபாட்டுடன், மூவகை ஒத்தாழிசைக் கலிப்பாவோடு (நேரிசை, அராகம், வண்ணகம்) ஒத்தும், ஒவ்வாதும் வருவன எல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும் என்று கொள்ள வேண்டும்.

## 1. தரவு கொச்சகக் கலிப்பா

தரவு மட்டும் வந்த கொச்சகக் கலிப்பா தரவு கொச்சகக் கலிப்பா எனப்படும்.

"செல்வப் போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ இடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந்து ஒளித்ததே."

இப்பாடல் தனிச்சொல்லும் சுரிதகமும் இல்லாமல் கலித்தளையால் வந்த தரவு கொச்சகக் கலிப்பா ஆகும்.

"ஊதுமினோ வெற்றி ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள் ஓங்குமினோ ஓங்குமினோ

தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகண்டோம்

வேதனைகளினி வேண்டர் விடுதலையோ திண்ணமே."

இப்பாடல் தனிச்சொல்லும் சுரிதகமும் இல்லாமல் கலித்தளையால் வந்த தரவு கொச்சகக் கலிப்பா ஆகும்.

"குடநிலைத் தண்புறவில் கோவலர் எடுத்தார்ப்பத்

தடநிலைப் பெருந்தொழுவில் தகையேறு மரம்பாய்ந்து

வீங்குமணி கயிறு ஒரீஉத் தாங்குவனத் தொன்றாப்போய்க்

கலையினொடு முயல்இரியக் கடிமுல்லை முறுவலிப்ப, எனவாங்கு

ஆனொடு புல்லிப் பெரும்புதல் முனையும்

கானுடைத்து அவர்தேர் சென்ற வாறே"

இப்பாடல் தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்றூ வந்த தரவு கொச்சகக் கலிப்பா ஆகும்.

### 2. தரவு இணைக் கொச்சகக் கலிப்பா

**தரவு**

"வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய

கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்கும் காவலனாம்

கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே

**தனிச்சொல்**

எனவாங்கு

**தரவு**

துணைவளைத்தோள் இவள்மெலியத் தொன்னலந் துறப்புண்டாங்(கு)

இணைமலர்த்தார் அருளுமேல் இதுஇதற்கோர் மாறென்று

துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ

**தனிச்சொல்**

அதனால்

**சுரிதகம்**

செவ்வாய்ப் பேதை இவள்திறந்து

எவ்வாறாங் கொல்இஃது எண்ணிய வாறே."

இப்பாடல் இடைஇடைத் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிகத்தால் முடிந்த தரவினைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**3 சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

**தரவு**

"பரூஉத்திடக்கை மதயானைப் பணைஎருத்தின் மிசைத்தொன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழ்ப்
படைப்பரியான் தேரினோடும் பரந்துலவும் மறுகினிடைக் கொடித்தானை
இடைப்பொலிந்தான் கூடலார் கோமானே

**தனிச்சொல்**

ஆங்கொருசார்.

**தாழிசை**

உச்சியார்க்கு இறைவனாய் உலகமெலாம் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூண் புரந்தரனாப் பாவித்தார
வச்சிரம் காணாத காரணத்தான் மயங்கினரே

**தனிச்சொல்**

ஆங்கொருசார்.

**தாழிசை**

அக்கால மணிநிரைகாத்து அருவரையால் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாய்ப் பாவித்தார்
சக்கரம் காணாத காரணத்தால் சமழ்த்தனரே

**தனிச்சொல்**

ஆங்கொருசார்

**தாழிசை**

மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங் கோல்கொண்ட
சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கொண்டது இன்மையால் விம்மிதராய் நின்றனரே

**தனிச்சொல்**

அஃதான்று

கொடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்

நின்றபுகழ் ஒருவன் செம்பூட் சோஎய்

என்றுநனி அறிந்தனர் பலரே தானும்

ஐவருள் ஒருவன் என்று அறிய லாகா

மைவரை யானை மடங்கா வென்றி

மனையன் வாழிஎன்று எத்தத்

தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே!

இப்பாடல் நான்கடித் தரவும், மூன்றடித் தாழிசை மூன்றும், சரிதகமும், இடையிடை தனிச்சொல் பொற்று நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் சிறிது வேறுபட்டு வந்ததால் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**4. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா**

**தரவு**

"தண்மதியோர் முகத்தானைத் தனியிடத்து நனிகண்டாங்கு

உண்மதியும் உடைநிறையும் உடன்தளர முன்நாட்கள் கண்மதியோர்ப்பு இவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து பெண்மதியின் மகிழ்ந்தநின் போரருளும் பிறிதாமோ

**தாழிசை**

இளநலம் இவள்வாட இரும்பொருட்குப் பிரிவாயேல்

தளநல முகைவெண்பல் தாழ்குழல் தளர்வாளோ

தகைநலம் இவள்வாட தரும்பொருட்குப் பிரிவாயேல்

வகைநலம் இவள்வாடி வருந்திஇல் இருப்பாளோ; 2

அணிநலம் இவள்வாட அரும்பொருட்குப் பிரிவாயேல்

மணிநலம் மகிழ்மேனி மாசோடு மடிவாளோ; 3

நாம்பிரியேம் இனிஎன்று நறுநுதலைப் பிரிவாயேல்

ஓம்பிரியோம் எனஉரைத்த உயர்மொழியும் பழுதாமோ; 4

குன்றளித்த திரள்தோளாய் கொய்புனத்தில் கூடியநாள்

அன்றளித்த அருள்மொழியால் அருளியதும் பழுதாமோ; 5

சில்பகலும் ஊடியக்கால் சிலம்பொலிச்சீ றடிபரவிப்

பல்பகலும் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ. 6

**தனிச்சொல்**

எனவாங்கு

**சுரிதகம்**

அரும்பெறல் அமிழ்தினும் தரும்பொருள் அதனினும்

பெரும்பெறல் அரிதுஇவள் வெறுக்கையும் அற்றே

விழுமியது அறிமதி வாழி

கெழுமிய காதலில் தரும்பொருள் சிறிதே."

இப்பாடல் நாலடித் தரவும், இரண்டடித் தாழிசை ஆறும், தனிச்சொல்லும், நாலடிச் சுரிதகமும் பெற்று வந்துள்ளது. தாழிசை மூன்று மட்டும் வராமல் ஆறு வந்துள்ளதால் இது பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

### 5. மயங்கிசை கொச்சகக் கலிப்பா

**தரவு**

'மணிகிளர் நெடுமுடி மாயவனும் தம்முனும்போன்று
அணிகிளர் நெடுங்கடலும் கானலும் தோன்றுமால்
நுரைநிவந் தவைஅன்ன நொய்ப்பறைய சிறைஅன்னம்
இரைநயந் திறைகூரும் ஏமம்சார் துறைவகேள்; 1
மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி இறக்கலாது
எழும்முந்நீர் பரந்தொழுகும் ஏமம்சால் துறைவகேள்! 2

**தாழிசை**

கொடிபுரையும் நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள் தொடிநெகிழ்ந்த

தோள்கண்டும் துறவலனே என்றியால்; 1

கண்கவரும் மணிப்பைம்பூண் கயில்கவைஇய சிறுபுறத்தோள்

தெண்பனிநீர் உகக்கண்டும் தெரியலனே என்றியால்; 2

நீர்பூத்த நிரையிதழ்க்கண் நின்றுஒசிந்த புருவத்தோள் பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே என்றியால்; 3

கனைவரல்யாற்று இடுகரைபோல் கைந்நில்லா(து) உள்நெகிழ்ந்து நினையும்என் நிலைகண்டு நீங்கலனே என்றியால்; 4

கலங்கவிழ்ந்த நாய்கன்போல் களைதுணை பிறிதின்றிப் புலம்பும்என் நிலைகண்டும் போகலனே என்றியால்; 5

வீழ்சுடரின் நெய்யேபோல் விழுமநோய் பொறுக்கல்லாத் தாழும்என் நிலைகண்டும் அகல்கிலனே என்றியால்; 6

**தனிச்சொல்**

அதனால்

**அராகம்**

அடும்பமல் இறும்பின் நெடும்பனை மிசைதொறும்
கொடும்புற மடலிடை ஒடுங்கின குருகு; 1
செறிதரு செருவிடை எறிதொழில் இளையவர்
நெறிதரு புரவியின் மறிதரும் திமில் 2
அரசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல் 3
அலங்கொளி அவிர்சுடர் இலங்கெழில் மலர்தொறும் கலந்தெறி காலொடு புலம்பின பொழில். 4

**தாழிசை**

விடாஅது கழலும்என் வெள்வளையும் தவிர்ப்பாய்மன்
கெடாஅது பெருகும்என் கேண்மையும் நிறுப்பாயோ 1

ஒல்லாது கழலும்என் ஒளிவளையும் செறிப்பாய்மன்
நில்லாது பெருகும்என் நெஞ்சமும் நிறுப்பாயோ 2

தாங்காது கழலும்என் தகைவளையும் தவிர்ப்பாய்மன்
நீங்காது பெருகும்என் நெஞ்சமும் நிறுப்பாயோ; 3

மறவாத அன்பினேன் மனன்நிற்கு மாறுஉரையாய்
துறவாத தமருடையேன் துயர்தீரு மாறுஉரையாய்; 4

காதலர் மார்பின்றிக் காமக்கு மருந்துரையாய்

ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுஉரையாய்; 5

இணைபிரிந்தார் மார்பின்றி இன்பக்கு மருந்துஉரையாய் துணைபிரிந்த

தமருடையேன் துயர்தீரு மாறுஉரையாய் 6

**தனிச்சொல்**

எனவாங்கு

அம்போதரங்கம் (இருசீர் ஓரடி அம்போதரங்கம்)

| | | | |
|---|---|---|---|
| பகைபோன்றது துறை; | 1 | தகையிழந்தன தோள்; | 5 |
| பரிவாயின குறி; | 2 | தலை சிறந்தது துயர்; | 6 |
| நகையிழந்தது முகம்;: | 3 | புகைபரந்தது மெய்; | 7 |
| நனிநாணிற்று உளம் | 4 | பொறையாயிற்று என்னுயிர். | 8 |

**தனிச்சொல்**

அதனால்

**சுரிதகம்**

இனையது நினையால் அனையது பொழுதால்

நினையல் வாழி! தோழி தொலையாப்

பனியொடு கழிக உண்கண்

என்னோடு கழிகஇத் துன்னிய நோயே."

இப்பாடல் இரண்டு தரவு, ஆறு தாழிசை, தனிச்சொல், நான்கு அராகம், மறுபடியும் ஆறு தாழிசை, தனிச்சொல், எட்டு அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்று கலிப்பாவிற்குக் கூறப்பட்ட உறுப்புகள் இடம் மாறியும், திரிந்தும், மயங்கியும் வந்ததால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

"காமர் கடும்புனல் கலந்து எம்மொடு ஆடுவாள்" என்ற (கலித்தொகை –39) பாட்டு ஆசிரியப்பாவும் வெண்பாவும் மயங்கி வந்த மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**கொச்சகக் கலிப்பா வகைகளுக்கு உரிய உதாரண**

**இலக்கிய முதல்நினைப்புக் காரிகை**

குடநிலைத்தண் செல்வப்போர்க்கதக் கண்ணன் தரவு; குன்றா வடிவுடை
ஆகும் தரவிணை; மன்னும் பரூஉத்தடக்கை
இடமிகவாம் சில்தாழிசை; தண்மதியோர் பலவாய்;
மடல்அவிழ் கோதை மணிகிளர் ஆகும் மயங்கிசையே.

மடல் அவிழ்ந்தது போன்ற கூந்தலை உடையவளே என மகடூஉ முன்னிலை கூறி, இக்காரிகை கொச்சகக் கலிப்பாவின் ஐந்து வகைகளுக்கும் உரிய எடுத்துக்காட்டுப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

1) குடநிலைத் தண்புறவில், செல்வப்போர் எனத்தொடங்கும் பாடல்கள் தரவு கொச்சகக்கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டு ஆகும்.

2) வடிவுடை என்று தொடங்கும் பாடல் தரவிணைக் கொச்சகக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

3) நிலைபெற்ற பரூஉத்தடக்கை என்னும் பாடல் சி்றாழிசைக் கொச்சகக்கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

4) தண்மதியோர் எனத் தொடங்கும் பாடல் ப்றாழிசைக் கொச்சகக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

5) மணிகிளர் எனத்தொடங்கும் பாடல் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

மேலே இவ்எடுத்துக்காட்டுப் பாடல்களே கொடுக்கப் பட்டுள்ளன.

## கலிப்பாவின் இனங்கள்

(34) அடிவரை இன்றி அளவொத்தும் அந்தடி நீண்டு இசைப்பின்
கடிதல் இல்லாக் கலித்தாழிசை ஆகும் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி ஈர்இரண்டாய்
விடின்அது ஆகும் விருத்தம் திருத்தகு மெல்லியலே

திருமகளைப் போன்ற அழகையும் மென்மையும் உடையவளே எனக்கூறி இக்காரிகை கலிப்பாவின் இனமான கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் ஆகியவற்றின் இலக்கணத்தைக் கூறுகிறது.

## 1. கலித்தாழிசை

இரண்டடி முதல் பலஅடி வந்து ஈற்றடி மட்டும் சீர்கள் மிகுதியாகப் பெற்று மற்ற அடிகள் தம்முள் அளவு ஒத்து வருவது கலித்தாழிசை ஆகும்.

"கடிதல் இல்லாக் கலித்தாழிசை' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் கலித்தாழிசை தனிச் செய்யுளாக வரும் என்றாலும் ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடையது ஆகும் எனக் கொள்ள வேண்டும்.

**கலித்தாழிசை (தனித்து வருதல்)**

"வாள்வரி வேங்கை வழங்கும் சிறுநெறிஎம்
கேள்வரும் போழ்தில் எழால்வாழி வெண்திங்காள்
கேள்வரும் போழ்தில் எழாலாய்க்கு உறாலியரோ
நீள்வரி நாகத்து எயிறே வாழி வெண்திங்காள்."

இப்பாடல் ஈற்றடி மிகுந்து (5 சீர்) ஏனைய அடிகள் அளவு ஒத்து (4 சீர்) தனித்து வந்த கலித்தாழிசை ஆகும்.

**கலித்தாழிசை (அடுக்கி வருதல்)**

"கொய்தினை காத்தும் குளவி அடுக்கத்துஎம்
பொய்தற் சிறுகுடி வாரல்நீ ஐய! நலம் வேண்டின்."

"ஆய்தினை காத்தும் அருவி அடுக்கத்துஎம்
மாசில் சிறுகுடி வாரல்தி ஐய! நலம் வேண்டின்."

"மென்தினை காத்தும் மிகுபூங் கமழ்சோலைக்
குன்றச் சிறுகுடி வாரல்நீ ஐய! நலம் வேண்டின்."

இப்பாடல் இரண்டடியாய் ஈற்றடி மிகுந்து (5 சீர்) ஒருபொருள் மேல் மூன்று அடுக்கி வந்த கலித்தாழிசை.

"பூண்ட பறைஅறையப் பூதம்மருள
நீண்ட சடையன் ஆடுமே
நீண்ட சடையான் ஆடும் என்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே."

இப்பாடல் ஈற்றடி மிகுந்து ஏனைய அடிகள் ஒவ்வாது வந்த கலித்தாழிசை ஆகும்.

## 2. கலித்துறை

நெடிலடி (ஐஞ்சீரடிகள்) நான்கு அளவொத்து வருவது கலித்துறை ஆகும்.

"யானும் தோழியும் ஆயமும் ஆடும் துறைநண்ணித்
தானும் தேரும் பாகனும் வந்துஎன் நலன்உண்டான்
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேல்
கானும் புள்ளும் கைதையும் எல்லாம் கரிஅன்றே"

இப்பாடல் நெடிலடி (ஐஞ்சீரடி) நான்கு வந்ததால் கலித்துறை ஆகும்.

## 3. கலிவிருத்தம்

நாற்சீரடி நான்கு வருவது கலிவிருத்தம் ஆகும்.

"கண்டனன் கற்பினுக்கு அணியைக் கண்களால்
தெண்திரை அலைகடல் இலங்கைத் தென்நகர்
அண்டர் நாயக இனிதுறத்தி ஐயமும்
பண்டுஉள துயரும் என்று அனுமன் பன்னுவான்."

இப்பாடல் கலிவிருத்தம் ஆகும்.

**கலிப்பாவின் இனங்களுக்கு**

**உதாரண இலக்கிய முதல் நினைப்புக் காரிகை.**

கொய்தினை ஆய்தினை மென்தினை வாள்வரி பூண்டபறை எய்திய
தாழிசை யானும் வென்றானும் கலித்துறையே
மைதிகழ் ஓதி வரிநெடுங் கண்ண வனமுலையாய்
மெய்தரு வேய்தலை தேம்பழுத்து என்ப விருத்தங்களே.

இக்காரிகை கலிப்பாவின் இனங்க இனங்களுக்கு எடுத்துக்காட்டுப் பாடலின் தொடக்கத்தினைக் கூறுகிறது.

1) கொய்தினை, ஆய்தினை, மென்தினை என்று தொடங்கும் பாடல்கள் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கிய கலித்தாழிசைக்கு எடுத்துக்காட்டாகும். வாள்வரி, பூண்பறை என்பவை தனித்துவந்த கலித்தாழிசைக்கு எடுத்துக்காட்டுப் பாடலாகும்.

2) யானும், வென்றான் எனத் தொடங்கும் பாடல்கள் கலித்துறைக்கு எடுத்துக்காட்டு ஆகும்.

3) மெய்யைத் தருகின்ற வேய்தலை, தேம்பழுத்து எனத்தொடங்கும் பாடல்கள் கலிவிருத்தத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

## 5. வஞ்சிப்பா

நான்கு வகைப் பாக்களுள் இறுதியாக இடம்பெறுவது வஞ்சிப்பா. இது குறளடி, சிந்தடி அல்லாத பிற அடிகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் பொய்த்து (வஞ்சித்து) வருவதால் வஞ்சிப்பா எனப் பெயர் பெற்றது.

(35) குறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னாலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே'

இக்காரிகை வஞ்சித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், வஞ்சிப்பாவின் ஈறு ஆகியவற்றின் லக்கணத்தைக் கூறுகிறது.

**வஞ்சிப்பாவின் பொது இலக்கணம்:**

1) தூங்கலோசை பெற்று வரும்.

2) குறளடி, சிந்தடி மட்டும் பொருந்தி வரும்.

3) புளிமாங்கனி, கருவிளங்கனி ஆகிய கனிச்சீர்களை மிகுதியாகப் பெற்றுவரும்.

4) வஞ்சித்தளையும், பிறதளையும் வரும்.

5) தனிச்சொல்லும், ஆசிரியச் சுரிதகமும் பெற்றுவரும்.

**வஞ்சிப்பாவின் வகைகள்:**

வஞ்சிப்பா 1. குறளடி வஞ்சிப்பா, 2. சிந்தடி வஞ்சிப்பா என இருவகைப்படும்.

**1. குறளடி வஞ்சிப்பா.**

இருசீர்களைக் கொண்ட குறளடியைப் பெற்றுத் தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது குறளடி வஞ்சிப்பா ஆகும்.

"சுறமறிவன துறைஎல்லாம்

இறவுஈன்பன இல்எல்லாம்

மீன்திரிவன கிடங்குஎல்லாம்

தேன்தாழ்வன பொழில்எல்லாம்

எனவாங்கு

தண்பணை தழீஇய இருக்கை

மண்கெழு நெடுமதில் ஊரே"

இப்பாடல் குறளடி வஞ்சிப்பா ஆகும்.

**2. சிந்தடி வஞ்சிப்பா**

மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடிகளைக் கொண்டு தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது சிந்தடி வஞ்சிப்பா ஆகும்.

"தொல்நலத்தின் புலம்புஅலைப்பத் தொடித்தோள்மேல்

பல்நலத்த கலம்தொலையப் பரிவுஎய்தி

என்நலத்தகை இதுஎன்என எழில்காட்டிச்

சொல்நலத்தகைப் பொருள்கருதினிற் சிறந்தாங்கே

பெரிதும்

கலங்குஅஞர் எய்தி இருப்பவும்

சிலம்பிடைச் செலவும் பேணி வந்தற்றே."

இப்பாடல் சிந்தடி வஞ்சிப்பா ஆகும்.

## வஞ்சிப்பாவின் இனம்

வஞ்சிப்பாவின் இனம் 1. வஞ்சித்தாழிசை, 2. வஞ்சித்துறை, 3. வஞ்சிவிருத்தம் என மூன்று வகைப்படும்.

**1. வஞ்சித்தாழிசை**

இருசீரடி நான்கு பெற்ற மூன்று செய்யுள்கள் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வருவது வஞ்சித்தாழிசை ஆகும்.

"மடப்பிடியை மதவேழம்

தடக்கையான் வெயில்மறைக்கும்

இடைச்சுரம் இறந்தார்க்கே

நடக்கும்என் மனனேகாண்.

பேடையை இரும்போத்துத் தோகையான் வெயில்மறைக்கும்

காடகம் இறந்தார்க்கே

ஓடும்என் மனனேகாண்.

இரும்பிடியை இகல்வேழம்

பெருங்கையான் வெயில் மறைக்கும்

அருஞ்சுரம் இறந்தார்க்கே

விரும்பும்என் மனனேகாண்."

இப்பாடல் குறளடி நான்காய் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி வந்ததால் வஞ்சித் தாழிசை ஆகும்.

**2. வஞ்சித்துறை**

இருசீரடி நான்கு பெற்ற ஒரு செய்யுள், ஒரு பொருள்மேல் ஒன்றாய் வருவது வஞ்சித்துறை எனப்படும்.

மைசிறந்தன மணிவரை

கைசிறந்தன காந்தளும்

பொய்சிறந்தனர் காதலர்

மெய்சிறந்திலர் விளங்கிழாய்."

இப்பாடல் இருசீரடி நான்காய் ஒரு பொருள்மேல் தனியே வந்ததால் வஞ்சித்துறை ஆகும்.

**3. வஞ்சி விருத்தம்.**

முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தம் எனப்படும்.

"சோலை ஆர்ந்த சுரத்திடைக்

காலை யார்கழல் ஆர்ப்பவும்

மாலை மார்பன் வருமாயின்

நீல உண்கண் இவள்வாழுமே."

இப்பாடல் சிந்தடி நான்காய் வந்துள்ளதால் வஞ்சி விருத்தம்

ஆகும்.

'ஊனு யர்ந்த வுரத்தினான்

மேல்நி மிர்ந்த மிடுக்கினான்
தானு யர்ந்த தவத்தினான்
வானு யர்ந்த வரத்தினான்.

இப்பாடலும் வஞ்சி விருத்தத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

வஞ்சிப்பாவுக்கு ஈறு

"பூந்தாமரை" (காரிகை 9 எடுத்துக்காட்டுப்பாடல்) என்னும் குறளடி வஞ்சிப்பா நாளும் என தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் வந்துள்ளது எனக் கொள்க.

வஞ்சிப்பாவுக்கும், இனத்திற்கும் உதாரண

இலக்கிய முதல் நினைப்புக் காரிகை.

மடப்பிடி, பேடை இரும்பிடி வஞ்சியின் தாழிசையாம்
வடுப்புரை கண்ணின் நல்லாய்! மைசிறந்தன வான்துறையாம் தடப்பெரும்
சோலை விருத்தம தாகும்; தயங்குவஞ்சிக்
கொடித்தொடி பூந்தாமரை கொடிவாலன் உதாரணமே.

மாவடுவை பிளந்தது போன்ற கண்களையும், வஞ்சிக் கொடிபோன்ற உடலையும், கைகளில் வளையலும் அணிந்த நல்லவளே என மகடூஉ முன்னிலை கூறி, வஞ்சிப்பா வகைக்கும், இனத்திற்கும் எடுத்துக்காட்டுப் பாடல்களின் தொடக்கத்தினைக் கூறுகிறது.

1) மடப்பிடி, பேடை, இரும்பிடி எனத் தொடங்கும் பாடல்கள் மூன்றும் வஞ்சித் தாழிசைக்கு உரிய எடுத்துக்காட்டுக்களாகும்.

2) மை சிறந்தன எனத் தொடங்கும் பாடல் வஞ்சித்துறைக்கு எடுத்துக்காட்டாகும்.

3) அகன்ற பெருமைக்கு உரிதாகிய சோலை எனத்தொடங்கும் பாடல் வஞ்சி விருத்தத்திற்குரிய எடுத்துக்காட்டாகும்.

4) பூந்தாமரை, கொடிவாலன் எனத்தொடங்கும் பாடல்கள் வஞ்சிப்பாவிற்கு எடுத்துக்காட்டாகும்.

## 6. மருட்பா

வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலந்து ஒரு பாவாக அமைவதற்கு மருட்பா என்று பெயர். மருள் என்றால் மயக்கம் என்று பொருள். வெண்பாவும்,

ஆசிரியப்பாவும் சமநிலையில் அளவு ஒத்து வருவது சமநிலை மருட்பா என்றும் ஒவ்வாமல் வருவது வியநிலை மருட்பா என்றும் பெயர் பெறும். மருட்பாவின் முன்பகுதி வெண்பா இலக்கணத்தையும் பின்பகுதி ஆசிரியப்பா இலக்கணத்தையும் கொண்டு அமையும்.

## மருட்பா இலக்கணம்

புறநிலை வாழ்த்து, கைக்கிளை, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ என்ற பொருளை உடையதாக ஒருபாடல் வெண்பாவில் தொடங்கி ஆசிரியப்பாவில் முடிவது மருட்பா ஆகும்.

## மருட்பாவும் அதன் வகைகளும்

(36) ‘பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்

தொண்பாச் செவியாறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா

வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்

வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகம்”

இக்காரிகை மருட்பாவின் இலக்கணத்தையும் அதன் வகைகளான 1. புறநிலை வாழ்த்து மருட்பா 2. கைக்கிளை மருட்பா 3. வாயுறை வாழ்த்து மருட்பா 4. செவியறிவுறூஉ மருட்பா என்ற நான்கின் இலக்கணத்தையும் கூறுகிறது.

### 1. புறநிலை வாழ்த்து மருட்பா

தெய்வத்தைப் புறத்தே நிறுத்தி வாழ்த்துவது புறநிலை வாழ்த்து. நீ வணங்கும் தெய்வம் உன்னைப் பாதுகாக்கும். உன்செல்வம் உன் தலைமுறைக்கும் பொருந்தும்படி சிறந்து வாழ்க என வாழ்த்தும் தன்மையில் அமைவது புறநிலை வாழ்த்து . மருட்பா ஆகும்.

"தென்றல் இடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை

முன்றில் முகை விரியும் முத்தநீர்த் தண்கோளூர்க்

குன்றமர்ந்த கொல்லேற்றான் நிற்காப்ப என்றும்

தீரா நண்பில் தேவர்

சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே"

இப்பாடல் முதல் மூன்று அடியும் வெண்பா அமைப்பிலும் பின் இரண்டு அடியும் ஆசிரியப்பா அமைப்பிலும் வந்ததால் மருட்பா ஆகும்.

தெய்வம் உன்னைக் காக்க. அதனால் சீர்சால் செல்வத்தோடு நாளுக்கு நாள் சிறந்து ஓங்குக என வாழ்த்தியதால் இது புறநிலை வாழ்த்து மருட்பா ஆயிற்று.

**2. கைக்கிளை மருட்பா**

ஒத்த தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் ஒருவரை ஒருவர் காண்பர். அவ்வாறு காணும்போது இருவரில் ஒருவரிடத்துக் காணும் வேட்கையே கைக்கிளை ஆகும். ஒருதலைக் காமம் என்றும் கூறப்படும். இப்பொருளில் அமைவது கைக்கிளை மருட்பா ஆகும்.

"திருநுதல் வேர்வுஅரும்பும் தேங்கோதை வாடும்
இருநிலம் சேவடியும் தோயும் – அரிபரந்த
போகிதழ் உண்கணும் இமைக்கும்
ஆகும் மற்றிவள் அகலிடத்து அணங்கே". (யா.க.கா. ப.120)

இப்பாடலில் முதலிரண்டு அடி வெண்பா அமைப்பாலும், பின் இரண்டு அடி ஆசிரிய அமைப்பிலும் வந்ததால் மருட்பா ஆகும்.

இது தலைவன் முதல் காட்சியில் ஒரு பெண்ணைப் பார்த்து இவள் நெற்றியில் வியர்வை காணப்படுகிறது. மாலை வாடுகிறது, கால் நிலத்தை தோய்க்கின்றது, கண் இமைக்கின்றது, ஆகையால் இவள் மானிடப் பெண்ணே என ஐயமுறத் தெரிந்துகொள்கிறான். இங்கே உள்ளது ஒருதலைக் காமம் ஆகையால் கைக்கிளை மருட்பா ஆகும்.

**3. வாயுறை வாழ்த்து மருட்பா**

ஒருவருக்குச் சொல்லாகிய மருந்தால் நன்மை தோன்றப் பாடுவது வாயுறை வாழ்த்து ஆகும். சொல்லப்படும் சொல் செவிக்கு கைப்பினும் உயிர்க்கு உறுதி அளித்து மறுமைக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கூறுவது வாயுறை வாழ்த்து மருட்பா ஆகும்.

"பலமுறையும் ஓம்பப் படுவன கேண்மின்
சொலல்முறைக்கண் தோன்றிச் சுடர்மணித்தேர் ஊர்ந்து
நிலமுறையின் ஆண்ட நிகரில்லார் மாட்டும்

சிலமுறை அல்லது செல்வங்கள் நில்லா
இலங்கும் எறிபடையும் ஆற்றலும் அன்பும்.
கலந்ததம் கல்வியும் தோற்றமும் ஏனைப்
பொலன்செய் புனைகலனோடு இவ்ஆற னாலும்
விலங்கிவரும் கூற்றை விலக்கலும் ஆகாது
அனைத்தாதல் நீயிரும் காண்டிர் – நினைத்தக்க
கூறிய வெம்மொழி பிழையாது
தேறிநீர் ஒழுகில் சென்றுபயன் தருமே." (யா.க.கா. ப.120)

இப்பாடல் உண்மைப்பொருளைச் சொன்னதால் வாயுறை வாழ்த்து மருட்பா ஆகும்.

**4. செவியறிவுறூஉ மருட்பா**

செவிக்கு அறிவுறுத்துவதால் இது செவியறிவுறூஉ எனப் பெயர் பெற்றது. ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளாமல் சான்றோர்க்குக் கட்டுப்பட்டு அடங்கி நடத்தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இத்தன்மை உடையதாகக் கூறுவது செவியறிவுறூஉ மருட்பா ஆகும்.

"பல்யானை மன்னர் முருங்க அமர் உழந்து
கொல் யானைத் தேரோடும் கோட்டத்து – நல்ல
தலையாலம் கானம் பொலியத் – தொலையாப்
படுகளம் பாடுபுக்கு ஆற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக – அடுதிறல்
ஆளி நிமிர்தோள் பெருவழுதி எஞ்ஞான்றும்
ஈரம் உடையையாய்! என்வாய்ச்சொல் கேட்டி!
உரிய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகால் உழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவர் இழைக்கும் வரைக்காள் நிதியீட்டம்
காட்டும் அமைச்சரை ஆற்றத் தெளியல்
அடைத்த அரும்பொருள் ஆறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொருள் ஆசையி னால்சென்று

மன்ற மறுக அகழாதி என்றும்

மறப்புறம் ஆக மதுரையார் ஓம்பும்

அறப்புறம் ஆசைப் படேற்க – அறத்தால்

அவையார் கொடுநாத் திருத்தி – நவையாக

நட்டார் குழிசி சிதையாதி – ஒட்டார்

செவிபுதைக்கும் தீய கடுஞ்சொல் – கவிபடைத்தாய்க்

கற்றார்க்கு இனனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்

செற்றார்ச் செறுத்துநின் சேர்ந்தாரை ஆக்குதி!

அற்றம் அறிந்த அறிவினாய்! – மற்றும்

இவைஇவை ஈயாது ஒழுகின் நிலையாப்

பொருகடல் ஆடை நிலமகள்

ஒருகுடை நீழல் துஞ்சுவண் மன்னே."

இப்பாடல் அளவு இன்றி உயர்ந்தவர்களிடத்தில் அடங்கி நடத்தல் கடன் என்று அரசர்க்கு உரைத்ததால் செவியறிவுறூஉ மருட்பா ஆகும்.

'என்ற இப்பொருண்மிசை' என்று சிறப்பித்துக் கூறியதால் மருட்பா புறநிலை, கைக்கிளை, வாயுறை, செவியறிவுறூஉ என்ற நான்கு பொருளைத் தவிர வேறு பொருளில் வராது எனக் கொள்ள வேண்டும்.

புறநிலையைப் 'பண்பார் புறநிலை' என்றும் செவியறிவுறூஉவை 'ஒண்பார் செவியறிவுறூஉ' என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளதால் கைக்கிளையைத் தவிரப் புறநிலை, வாயுறை, செவியறிவுறூஉ என்ற மூன்று பொருளும் இவ்வாறு மருட்பாவில் வராமல் வெண்பாவிலும் ஆசிரியப்பாவிலும் வரும் என்றும், கலிப்பாவிலும் வஞ்சிப்பாவிலும் வராது எனவும் கொள்ள வேண்டும்.

'பாங்குடைக் கைக்கிளை' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால் கைக்கிளை எல்லாப் பாவாலும் வரும். வெண்பா அடியும் ஆசிரிய அடியும் ஒத்து வருவன சமநிலை மருட்பா என்றும், சமம் இன்றி வந்தால் வியனிலை மருட்பா என்றும் கொள்ள வேண்டும்.

'ஊனமில் வெண்பா' என்று கூறியுள்ளதால் வெண்பாவில் பிற ஓசை வந்து கலக்காது. ஆனால் வெண்பா ஓசையானது எல்லாப் பாவிலும் சென்றுகலக்கும்

சிறப்பு வெண்பாவிற்கு உண்டு, ஆதலாலும், அதுபோன்றே வெண்பாவில் பிறதளையும் அடியும் வந்து கலக்காது ஆதலாலும், மங்கல மரபை உடையது ஆதலாலும் பிற பாக்களை விட வெண்பாச் சிறப்புடையது. ஆகவே வெண்பா முதலில் வைக்கப்பட்டது எனவும் கொள்ள வேண்டும்.

மருட்பாவிற்கு உதாரண இலக்கிய முதல்நினைப்புக் காரிகை

'தென்றல் இடையும் திருநுதல்வோ் வரும் பன்முறைஎன்று
ஒன்றிய பாவும் பல்யானையும் என்ப ஒண்போது அமைந்த பொன்திகழ்
ஓதிபுறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்து
என்று இவற்றிற்கும் செவியறி விற்கும் இலக்கியமே'

இக்காரிகை நான்குவகை மருட்பாவிற்கு உரிய எடுத்துக்காட்டுப் பாடல்களின் முதல் நினைப்பைக் கூறுகிறது.

தென்றல் இடை எனத் தொடங்கும் பாடல் புறநிலை வாழ்த்து மருட்பாவிற்கு எடுத்துக்காட்டு.

திருநுதல்வோ் எனத் தொடங்கும் பாடல் கைக்கிளை மருட்பாவிற்கு எடுத்துக்காட்டு.

பலமுறை எனத் தொடங்கும் பாடல் வாயுறை வாழ்த்து மருட்பாவிற்கு எடுத்துக்காட்டு.

பல்யானை என்று தொடங்கும் பாடல் செவியறிவுறூஉ மருட்பாவிற்கு எடுத்துக்காட்டு.

# அலகு - 5

## 3. ஒழிபியல்

உறுப்பியல், செய்யுளியல் ஆகிய இரண்டு இயல்களிலும் கூறப்படாமல் எஞ்சி நின்ற செய்திகளைக் கூறுவதால் இவ்வியல் ஒழிபியல் எனப் பெயர் பெற்றது. 1. எழுத்து முதல் பாவினம் வரை கூறப்பட்ட விதிகளுக்கு விலக்காக விளக்கமாகக் கூறப்படும் செய்திகள் 2.முன்பு கூறாமல் விடுபட்ட விகாரம் முதலிய யாப்பு உறுப்புக்கள் ஆகியவற்றை இவ்வியல் ஒன்பது காரிகைகளில் விளக்குகின்றது.

**உறுப்பியல் ஒழிபு (புறனடை)**

### 1. எழுத்தொழிபு

(36) "சீரும் தளையும் சிதையின் சிறிய இஉ அளபோடு
ஆரும் அறிவர் அலகு பெறாமை, ஐகாரம் நைவேல்
ஓரும் குறில்இயல், ஒற்றளபாய் விடின் ஓர்அலகாம்,
வாரும் வடமும் திகழும் முகிழ்முலை வாள்நுதலே"

கச்சால் கட்டப்பட்டு முத்துமாலை திகழும் மொட்டுப் போன்ற மார்பினையும் ஒளிவீசும் நெற்றியையும் உடையவளே என மகடூஉ முன்னிலை கூறி இக்காரிகை சில எழுத்துகளுக்கு உரிய இலக்கணத்தைக் கூறுகிறது.

சீரின் இலக்கணமும் தளையின் இலக்கணமும் கெடும்போது (அவை கெடாத வண்ணம்) குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரள பெடை என்ற மூன்றும் அசையாகக் கணக்கிடப்படாது.

ஐகாரக்குறுக்கம் குறில் எழுத்துப்போல முன்பின் எழுத்துகளுடன் சேரும்போது குற்றெழுத்தாகக் (ஒரு மாத்திரையாக) கொண்டு கணக்கிடப்படும்.

ஒற்றளபெடை வரும்போது அவற்றை அரை மாத்திரை உடைய ஒற்றெழுத்தாகக் கொள்ளாமல் ஒருமாத்திரை அளவுடைய குற்றெழுத்தாகக் கணக்கிடவேண்டும்.

'இஉ 'அளபோடு' என்பதில் அளபெடை என்று மட்டும் கூறியிருந்தாலும் 'ஒற்று அளபாய்விடின் ஓர் அலகாம்' என்று அடுத்துக் கூறியுள்ளதால் இங்கு அளபெடை என்பது உயிரளபெடையையே குறித்தது.

'சீரும். தளையும் சிதையின், சிறிய, இஉ, அளபோடு ஆரும் அறிவர் அலகு பெறாமை' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால்

1. குற்றியலிகரமும், குற்றியலுகரமும் ஒற்றெழுத்துப் போலக் கணக்கிடப்படும்.
2. உயிரளபெடை நெட்டெழுத்தைப் போலக் கணக்கிடப்படும் எனக் கொள்ள வேண்டும்.

## 1. குற்றியலிகரம் அசையாகக் கணக்கிடப்படாமை

### நேரிசை வெண்பா

"சிறுநன்றி இன்றிவர்க்கியாம் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி பின்னும் பெரிதுஎன்(று) – உறுநன்றி
தானவாய்ச் செய்வதும் தானமன்று என்பவே
வானவாம் உள்ளத் தவர்".

இந்நேரிசை வெண்பாப் பாடலில் வரும் ‘இன்றிவர்க்கியாம்' என்பது குற்றியலிகரம் வந்து வெண்பாவினுள் வஞ்சி உரிச்சீர் ஆயிற்று. வெண்பாவினுள் வஞ்சி உரிச்சீர்கள் விரவும் என்னும் இலக்கணம் இல்லாமையால் வெண்பா சிதைந்து நிற்கும். ஆதலால் இங்கு குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறாது என்று விட்டுவிடவே சீர் சிதையாது.

### குறள் வெண்பா

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" (குறள் – 66)

இப்பாடலில் தி என்பதில் உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். (இனிது + யாழ் = இனிதியாழ்) இதை ஓர் குற்றெழுத்தாகக் கொண்டு அசை பிரித்துத் தளை கூட்டினால்

| | |
|---|---|
| குழ/லினி | தியா/ழினி |
| நிரை நிரை | நிரை நிரை |
| கருவிளம் | கருவிளம் |

என விளம் முன் நிரைவந்து நிரையொன்றாசிரியத் தளையில் அமைந்துள்ளன. இது குறள்வெண்பா ஆதலால் இத்தளை வரக்கூடாது. எனவே குற்றியலிகரத்தைக் கணக்கிடாமல்

குழ/லினி (தி)யா/ழினி

நிரை நிரை நேர் நிரை

கருவிளம் கூவிளம்

இவ்வாறு அடைப்புக் குறியிட்டு அலகு பெறாமல் செய்து விட்டால், விளம் முன் நேர் வந்து இயற்சீர் வெண்டளையாக மாறிவரும். இயற்சீர் வெண்டளை குறள் வெண்பாவில் வரலாம். பாடல் சரியாக வரும்.

### 2. குற்றியலுகரம் அசையாகக் கணக்கிடப்படாமை

**வஞ்சிப்பா**

"கொன்றுகோடுநீடு குருதி பாயவும்"

என்ற வஞ்சிப்பா அடியில் உள்ள குற்றியலுகரங்களைக் குறில் எழுத்தாகக் கொண்டு அசையாகக் கணக்கிட்டால்

கொன்/று/கோ/டு/நீ/டு

நேர் நேர் நேர் நேர் நேர் நேர்

என ஆறசைச் சீராகும் (இதனை கொன்-றுகோ-டுநீ-டு என ஓசை ஆறு சிதையும்படி அசை பிரிக்கக்கூடாது என்பது இலக்கணம்). அசைச்சீர் என்பது இல்லை ஆதலால் இதில் உள்ள குற்றிய லுகரங்களைக் கணக்கிடாது விட்டால் மூவசைச் சீராகிவிடும் இலக்கணமும் சிதையாது.

### 3. உயிரளபெடை அசையாகக் கணக்கிடப்படாமை

**நேரிசைவெண்பா**

"பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
சொல்லுக்குத் தோற்றின்னம் தோற்றுஅனவாலி - நெல்லுக்கு நூறோஓநூ
றென்பாள் நுடங்கிடைக்கும் மென்முலைக்கும்
மாறோமால் அன்றளந்த மண்."

இப்பாடலின் மூன்றாம் அடியிலுள்ள (நூ/றோ/ஓ/நூ என்னும் சீர் நான்கு அசைகளைப் பெற்றுள்ளது. வெண்பாவில் நான்கு அசைகள் வந்துள்ளன. இவ்வாறு வெண்பாவில் நான்கு அசைச்சீர் வராது. ஓசையூட்டும் பொழுது ஓசை கெட்டு செப்பலோசை சிதைந்து நிற்கும். எனவே உயிரளபெடையை ஒரு நேரசையாகக் கொண்டால் சீரும் தளையும் கெடாமல் இயல்பாக வெண்பா இலக்கணம் பொருந்தி வரும்.

சீரும் தளையும் கெடாதபோது குற்றியலிகரம், குற்றியலுகரம், உயிரளபெடை என்ற மூன்றும் அசையாகக் கணக்கிடப்படும் என்று முன்னர் கூறப்பட்டது அதற்கு ‘எடுத்துக்காட்டு வருமாறு.

"வந்துநீ சேரின் உயிர்வாழும், வாராக்கால்

முந்தியாய் பெய்த வளை கழலும்".

என்ற வெண்பா அடிப்பாடலில் 'வந்துநீ' என்பதில் உள்ள குற்றியலுகரத்தை (து) எழுத்தாகக் கணக்கிட்டு அசைபிரித்தால்

வந் /துநீ சே/ரின்

நேர்நிரை நேர்நேர்

கூவிளம் தேமா

விளம்முன் நேர் வந்து இயற்சீர் வெண்டளை ஆகி வெண்பா இலக்கணம் சிதையாது. இவ்இடத்தில் குற்றியலுகரத்தைக் கணக்கிடாமல் அசைபிரித்தால்

வந் /(து)நீ சே/ரின்

நேர் நேர் நேர் நேர்

தேமா தேமா

என மாமுன் நேர்வந்து நேரொன்றாசிரியத் தளை ஆகிவிடும். ஆகையால் இங்குக் குற்றியலுகரம் அசையாகக் கணக்கிடப்பட்டது.

'முந்தியாய்' என்பதில் உள்ள குற்றியலிகரத்தை (முந்து + யாய் முந்தியாய்) எழுத்தாகக் கணக்கிட்டு அசைபிரித்தால்,

முந் /தியாய் பெய் /த

நேர் நிரை நேர் நேர்

கூவிளம் தேமா

என்று விளம்முன் நேர்வந்து இயற்சீர் வெண்டளையாகி வெண்பாவின் இலக்கணம் சிதையாது. குற்றியலிகரத்தை எழுத்தாகக் கணக்கிடாமல்

விட்டால்

முந்(தி) /யாய் பெய் /த

நேர் நேர் நேர் நேர்

தேமா தேமா

மாமுன் நேர் வந்து நேரொன்றாசிரியத் தளையாகி வெண்பாவின் இலக்கணம் கெடும். எனவே இங்கு குற்றியலிகரம் அசையாகக் கணக்கிடப்பட்டது.

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்

படாஅ முலைமேல் துகில். குறள் 1087)

என்ற குறள்வெண்பாப் பாடலில் உள்ள உயிரளபெடையை அசையாகக் கணக்கிட்டால் கடாஅக்-நிரைநேர், படாஅ-நிரைநேர் என ஆகும். கணக்கிடாமல் விட்டால் கடா(அ)க் -நிரை, படா(அ) நிரை என அசைச்சீராகி விடும். வெண்பாவின் ஈற்றில்தான் அசைச்சீர் வரும் என்பது இலக்கணம், முதலிலும் இடையிலும் வராது. எனவே இங்கு உயிரளபெடை அசையாகக் கணக்கிடப்பட்டது.

### 4. ஐகாரக்குறுக்கம் குற்றெழுத்தாக நிற்றல்

ஒன்றரை மாத்திரை அளவு எனக் குறிக்கப்பட்ட ஐகாரக்குறுக்கம் குறில் எழுத்துப் போலவே கொண்டு அலகிடப்பட வேண்டும்.

"அன்னையையா நோவ தவமால் அணியிழாய்

புன்னையையா நோவன் புலந்து"

இக்குறள் வெண்பாவில், முதல் அடியில் 'முதற்சீரும், இரண்டாம் அடியில் முதற்சீரும் நான்கு நான்கு அசைகளாக வருகின்றன. வெண்பாவில் நான்கசைச்சீர்கள் வரக்கூடாது என்பது இலக்கணம். எனவே இரண்டு சீர்களில் உள்ள ஐகாரக்குறுக்கங்களை (னை, யை) மேலும் குறுக்கி, நெடில் எழுத்தாக இருப்பதனை குறில் எழுத்தாக ஆக்கிவிட்டால், மூவசைச் சீர்களாக மாறிச் சீரும் தளையும் சிதையாது. வெண்பா இலக்கணத்தோடு பொருந்திவரும். கொள்ளும்பொழுது ஒரு மாத்திரையாகிவிடும்.

"காதலர் இல்வழி மாலை கொலைக்களத்(து)

ஏதிலர் போல வரும்" (குறள் 1224)

இதில் கொலைக்களத்(து) என்பதில் கொலைக் களத் என ஐகாரக் குறுக்கம் (லை)'கொ' என்ற குறிலைச் சேர்ந்து நிரை அசை ஆயிற்று.

## 5. ஒற்றளபெடை நேரசையாகக் கணக்கிடுதல்

பாடலுள் வரும் ஒற்றெழுத்துக்கள் அனைத்தும் மதிப்பில்லாது அலகுபெறாது. அவற்றைக் குறிலோடும் நெடிலோடும் சேர்த்து அலகிடல் வேண்டும். ஆனால் ஒற்றளபெடையாக வரும்போது மட்டும் ஒற்றெழுத்துக்கள் குறில் எழுத்தாகக் கருதப்பட்டு அலகு பெறும்.

**இன்னிசை வெண்பா**

"கண்ண் கருவிளை, கார்முல்லை கூர்எயிறு

பொன்ன் பொறிசுணங்கு, போழ்வாய் இலவம்பூ

மின்ன் நுழைமருங்குல், மேதகு சாயலாள்

என்ன் குறமகள், ஆமாறு"

இப்பாடலில் கண்ண் என்பது க-ண்ண் (நேர்நேர்) ஒற்றளபெடை நேரசையாக வந்துள்ளது.

எஃஃகு இலங்கிய கையராய் இன்உயிர்

வெஃஃகு வார்க்கு இல்லை வீடு

என்பதில் ஆய்த அளபெடையும் எஃஃகிலங்கி என்பதில் எ-ஃஃ என்பது எஃ/ஃ நேர் நேர் என நேரசையாக வந்தது. (ஆய்த அளபெடையும் ஒற்றபெடையுள் அடங்கும்)

1. கார்க்கடல், கார்ச்சேதம், வேர்ச்சொல், தாய்ப்பாசம் என ஈரொற்று உடனிலையாக (இரண்டு ஒற்றெழுத்துக்கள் புள்ளியுடன் சேர்த்து வருவது) இரண்டு ஒற்று எழுத்துகள் அடுத்தடுத்து வந்தால் அவை நேரசையாகக் கணக்கிடக்கூடாது என்றும்.

2. ஒற்றளபெடையை அசையாகக் கணக்கிடும்போது, இது தனித்து நேரசையாகக் கணக்கிடப்படுமே ஒழிய, மற்றோர் எழுத்துடன் சேர்ந்து நிரை அசை ஆகாது என்பதும் பெறப்படுகிறது.

## 2. அசை ஒழிபு

(37) “விட்டிசைத்து அல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசைஎன்று
ஒட்டப்படாது அதற்கு உண்ணான் உதாரணம் ஓசைகுன்றா
நெட்டளபாய் விடின் நேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தினால் குறில் சேரின் இலக்கியம் ஏர்சிதைவே”

இக்காரிகை சில அசைகளுக்கு உரிய இலக்கணத்தைக் கூறுகிறது.

1. சீரின் இறுதியில் நின்ற தனிக்குறில் நேரசை ஆகும் என்று (5) கூறினார். சீரின் முதலில் விட்டிசைத்தல் இல்லாதபோது தனிக் குறில் நேரசையாகக் கணக்கிடப்படாது. அடுத்துள்ள குறிலுடனோ நெடிலுடனோ சேர்த்து நிரை அசையாகக் கணக்கிடப்படும். சீரின் முதலில் விட்டிசைத்தால் தனிக்குறில் நேரசையாகக் கணக்கிடப் படும் என்பது கருத்து. இதற்கு உண்ணான் என்று தொடங்கும் பாடல் எடுத்துக்காட்டாகும்.

2. தனியாக நின்று நெட்டெழுத்து அளபெடுத்தால் 'நேர்நேர்' என்று அலகிடப்படவேண்டும். குறில் எழுத்துடன் சேர்ந்து நெட்டெழுத்து அளபெடுத்தால் அது நிரைநேர் என்று அலகிடப்படவேண்டும். 'ஏளா சிதை' என்று தொடங்கும் பாடல் இதற்கு எடுத்துக் காட்டாகும்.

### 1. விட்டிசையை அசைபிரித்தல்

அசையில் எழுத்துக்கள் சேர்ந்து இசைக்காமல் பிரித்து இசைப்பது விட்டிசை ஆகும். இது குறிப்பு, ஏவல், தற்சுட்டு, சுட்டு, வினா ஆகிய ஐந்து இடங்களில் வரும்.

"உண்ணான் ஒளிநிறான், ஓங்குபுகழ், செய்யான்
துன்னரும் கேளிர் துயர்களையான், – கொன்னே
வழங்கான், பொருள் காத்து இருப்பானேல் அ ஆ
இழந்தான் என்று எண்ணப் படும்."

இப்பாடலின் மூன்றாம் அடியின் இறுதிச்சீர் 'அஆ' என்பதாகும். இது இலக்கணப்படி ஓரசையாகும். அதாவது நிரையசையாகும். பாடலின் இடையில் ஓரசை வரக்கூடாது. தளை தட்டுகின்றது. எனவே இதை விட்டிசைத்து, தனித்தனியாக வந்துள்ளதாகக் கொண்டு, முதலில் உள்ள குறிலைத் தனிக்குறில்

எனக் கொண்டும், அடுத்து வந்துள்ள நெடிலைத் தனிநெடில் எனக் கொண்டும் அசைபிரித்தல் வேண்டும். இவ்வாறு பிரித்தால் நேர், நேர் என அமைந்து தேமாவில் முடிந்து தளை பொருந்தி வருகின்றது. இவ்வாறு விட்டிசைத்து அசைபிரிக்கின்றமையால் இதற்கு விட்டிசைத்தல் என்று பெயர்.

இது பயனின்றிப் பொருள் காத்திருப்பான் மீது கொண்ட அருளினால் வந்தது. எனவே குறிப்பில் வந்த விட்டிசை ஆகும்.

அஉ அறியா அறிவில் இடைமகனே

நொஅலையல் நின்ஆட்டை நீ

என்ற பாடலில் நொ அலையல் என்பதில் நொ-அலை-யல் என விட்டி சைக்கும் 'நொ' என்ற குற்றெழுத்து அடுத்துவரும் குற்றெழுத்துடன் சேர்ந்து நிரை அசையாகக் கணக்கிடாது, தனித்து நேரசையாகக் கணக்கிடப் பட்டது. 'நொ' (துன்பம்) ஏவல் பொருளில் வந்த விட்டிசை ஆகும்.

'அஉஅறியா' என்பதில் அ, உ என்பன வேறு பொருளைக் குறிக்காமல் அ என்ற எழுத்தையும் உ என்ற எழுத்தையும் குறிப்பதால் இது தற்சுட்டு ஆகும். எனவே அஉ என்பதை நிரைஅசையாகக் கொள்ளாமல் அ-உ நேர்-நேர் என்று அசை பிரிக்க வேண்டும். இது தற்சுட்டில் வந்த விட்டிசை ஆகும்.

"அஅவனும் இஇவனும் உவனும் கூடியக்கால்

எஎவனும் வெல்லார் இகல்"

என்ற பாடலில் வரும் விட்டிசைகளில் அஅவனும், இஇவனும், உஉவனும் ஆகியன சுட்டில் வந்த விட்டிசை. குறிலை நேர் என்று அசைபிரிக்கவேண்டும். இவற்றின் முதல்

எஎவனும் என்பதில் விட்டிசை வினாவில் வந்தது. இதன்முதற் குறிலும் நேரசை ஆகும்.

இக்காரிகையில் 'நேரசை என்று ஒட்டப்படாது' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால்,

1. விட்டிசையானது மொழி முதல், இடை, கடை என்ற மூன்று இடத்திலும் வரும்.
2. விட்டிசையானது குறிப்பு, ஏவல், தற்சுட்டு, சுட்டு, வினா என்ற ஐந்து பொருளில் வரும்.

3. விட்டிசைத்து நிற்கும் குற்றெழுத்து மற்றோர் எழுத்துடன் சேர்ந்து நிரை அசை ஆகாது எனக் கொள்ள வேண்டும்.

'அஇஉ அம்மூன்றும் சுட்டு" என்பதில் தற்சுட்டின் கண் குற்றெழுத்து மொழிமுதல், இடை கடையில் விட்டிசையாக வந்தது.

## 2. உயிரளபெடையை அசைபிரித்தல்

"ஓஒ இனிதே எமக்கு இந்நோய் செய்தகண்

தாஅம் இதற்பட் டது" (குறள் 1176)

இப்பாடலில் ஓஒ, தாஅம் என நெட்டெழுத்துத் தனித்தே அளபெடுத்தது. ஆகையால் இவை நேர் நேர் (ஓ/ஒ- நேர்நேர், தா / அம் நேர்நேர்) என அசை பிரிக்க வேண்டும்.

"கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்

படாஅ முலைமேல் துகில்" (குறள் 1087)

இப்பாடலில் அளபெடை குறில் எழுத்துடன் (க, ப) சேர்ந்து அளபெடுத்துள்ளதால் இவை கடா/அக் நிரைநேர், படா/அ நிரைநேர் என அசைபிரிக்க வேண்டும்.

"ஓசைகுன்றா நெட்டளபாய் விடின் நேர்நேர்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால் உயிரளபெடை தனித்து மூன்று மாத்திரையை விட மிகுந்து ஒலித்தாலும் (வாஅஅ) நேர்நேர் என்றே அசைபிரிக்க வேண்டும் எனக் கொள்ள வேண்டும். இதனை நேர்நிரை என்று அசைபிரிக்கக்கூடாது.

'நிரையொடு நேரசையாம் இட்டத்தினால் குறில் சேரின்' என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால் பின்பு நிற்கும் குறிலோடும் நெடிலோடும் சேர்ந்து அளபெடை நிரை அசை ஆகாது எனக் கொள்ள வேண்டும்.

## 3. சீருக்கும் தளைக்கும் ஒழிபு

(38) "மாஞ்சீர் கலியுள் புகா, கலிப்பாவின் விளங்கனி வந்து
ஆம்சீர் அடையா அகவல் அகத்தும், அல்லாத எல்லாம்
தாம்சீர் மயக்குந் தளையும் அஃதே, வெள்ளைத் தன்மை
குன்றிப் போம்சீர் கனி புகின் புல்லாது அயல்தளை பூங்கொடியே"

பூங்கொடி போன்றவளே என மகடூஉ முன்னிலை கூறி இக்காரிகை சீரும், தளையும் செய்யுளில் வரும்முறை குறித்துக் கூறுகிறது.

1. தேமா, புளிமா என்னும் மாச்சீர் இரண்டும் கலிப்பாவினுள் வராது.
2. கருவிளங்கனி, கூவிளங்கனி என்னும் வஞ்சியுரிச்சீர் இரண்டும் கலிப்பாவில் வராது.
3. இவ்விரு கனிச்சீர்களும் ஆசிரியப்பாவில் வராது.
4. மற்ற எல்லாச் சீரும் எல்லாப்பாவிலும், எல்லாப் பாவினத்துள்ளும் வரும். எல்லாத்தளையும் எல்லாப்பாவிலும் எல்லாப் பாவினத்திலும் வரும்.
5. எல்லாச்சீரும் எல்லாப்பாவிலும் வரும் என்று கூறியிருந்தாலும் வெண்பாவில் கனிச்சீர் (தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி) வராது. வந்தால் செப்பலோசை சிதையும். (வெண்பாவில் கனிச்சீரே வராது என்பதால் நாலசைச்சீர் வராது என்பதை அறியலாம்.)
6. எல்லாத் தளையும் எல்லாப் பாவிலும் வரும் என்று கூறியிருந்தாலும். வெண்பாவில் வெண்டளை (வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும்) தவிர பிற தளைகள் வராது.

"மலிதிரை ஊர்ந்துதன் மண்கடல் வெளவலின்

மெலிவின்றி மேற்சென்று மேவார்நா(டு) இடம்பட‌ப்

புலியொடு வில்விலக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை

வலியினால் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்". (கலி –104)

இப்பாடலில்

மலிதிரை - என்று நிரைஈற்று ஆசிரிய உரிச்சீர் வந்துள்ளது.

மெலிவின்றி - என்று வெண்சீர் வ்ந்துள்ளது

இடம்பட‌ப் - புலியொடு- என்று ஆசிரியத்தளை வந்துள்ளது.

மெலிவின்று - மேற்சென்று- என்று வெண்சீர் வெண்டளை வந்துள்ளது.

புகழ்பொறிக்க – கிளர்க்கெண்டை - என்று கலித்தளை வந்துள்ளது.

## ஆசிரியப்பா

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி

மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி

மறுகில் பெண்டிர் அம்பல் தூற்ற

சிறுகோல் வலத்தனள் அன்னை அலைப்ப

அலந்தனென் வாழி தோழி! கானல்

புதுமலர்த் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்

கடுமான் பூண்ட நெடுந்தேர் கடைஇ

நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு

செலவு அயர்ந் திசினால் யானே

அலர் சுமந்து ஒழிக இவ் அழுங்கல் ஊரே" (நற்றிணை 149)

ஆசிரியப்பாவில் அமைந்த இப்பாடலில் உச்சி, சிலரும், கடைக்கண், புதுமலர் என்பது ஆசிரியச் சீர்கள், பூநாறு என்பது வெண்சீர். குரூஉச்சுவல் என்பது வஞ்சிச்சீர். மேலும் மூக்கின்-உச்சி என ஆசிரியத்தளையும், சிலரும்-பலரும் என வெண்டளையும், பூநாறு - குரூஉச்சுவல் எனக் கலித்தளையும் குரூஉச்சுவல்-கடுமான் என வஞ்சித்தளையும் விரவி வந்துள்ளன. இதில் நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் வரவில்லை.

## வஞ்சிப்பா

"மண்திணிந்த நிலனும்

நிலன்ஏந்திய விசும்பும்

விசும்புதைவரும் வளியும்

வளித்தலைஇய தீயும்

வஞ்சிப்பா

தீமுரணிய நீரும்"

இக்குறளடி வஞ்சிப்பாடலில் வெண்சீர், தன்சீர், நேரீற்று இயற்சீரும் வந்து, வெண்டளையும், தன்தளையும், கலித்தளையும், ஆசிரியத் தளையும் மயங்கி வந்துள்ளன.

## கலிவிருத்தம்

'வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மௌவல்,நளர்கொடியன

நகுவிரையன நறுமலரன வகுளம்,

குளிர்கொடியன குழைமாதவி, குவிமுகையன கோங்கம், ஒளிர்கொடியன

உயர்தளிரினொடு ஒழுகிணான ஓடை". (சூளாமணி - தூது -4)

இக்கலிவிருத்தப்பாடலில் நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் (வளர் கொடியன). நேர்ஈற்று இயற்சீர் (கோங்கம்) வந்து வஞ்சித்தளையும் (வளர்கொடியன மணம்பிரிவன), இயற்சீர் வெண்டளையும் (மௌவல்-தளர்கொடியன) கலந்து வந்துள்ளன.

நேர்ஈற்று இயற்சீர் ஒத்தாழிசைக் கலிப்பாவில் வராமையும், நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் கலிப்பாவிலும் ஆசிரியப்பாவிலும் வராமையும், வெண்பாவில் வஞ்சிச் சீரும் வேற்றுத் தளையும் வராமையும் மேற்காட்டிய பாடல்களிலும் பிற பாடல்களிலும் கண்டு கொள்ள வேண்டும்.

நேர்ஈற்று இயற்சீர் வெண்கலிப்பாவிலும், கொச்சகக் கலிப்பாவிலும் வருவது பற்றியும், நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் கொச்சகக் கலிப்பாவில் அருகிவருவது பற்றியும் செய்யுளியலில் (காரிகை 31) காட்டப்பட்டுள்ளன.

## 4. அடிக்கு ஒழிபு

**அடிமயங்குதல்**

இன்ன பாவிற்கு இன்ன தளையால் அமைந்த அடி உரியது என்பது உறுப்பியலில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு பாவிற்குரிய அடி மற்றொரு பாவில் இடம் பெறுவது அடிமயக்கம் ஆகும்.

**அடிமயக்கம்**

(39) “இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள்ளால்
மயக்கப் படாஅல்ல, வஞ்சி மருங்கின் எஞ்சாஅகவல்
கயல்கண் நல்லாய்! கலிப்பாதமும் நண்ணும், கலியின் உள்ளால்
முயக்கப்படும் முதல்கால் இருபாவும் முறைமையினே”

கயல்மீன் போன்ற கண்களை உடைய நல்லபெண்ணே என்று மகடூஉ முன்னிலை கூறி இக்காரிகை ஒரு பாவில் மற்ற பாக்களின் அடிவந்து கலத்தல் பற்றிக் கூறுகிறது.

**1. ஆசிரியப்பாவில் வந்து கலக்கும் அடிகள்**

இயற்சீர் வெண்டளையால் வந்த வெண்பா அடியும் வஞ்சி அடியும் ஆசிரியப்பாவில் வந்து கலக்கும்.

'எறும்பி அளையின் குறும்பல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி" (குறுந்தொகை 12)

என்ற இப்பாடலில் "நேரிசை ஆசிரியப்பாவின் முதலடி. இயற்சீர்வெண்டளையால் வந்த வெண்பா அடியாகும். இதனை

"எறும்பி அளையின் குறும்பல் சுனைய

குறுந்தொடி! யாம்செல் சுரம்".

என்று வெண்பாவாக மாற்றி உச்சரித்தால் வெள்ளடியாவதை உணரலாம்.

மண்திணித்த என்று தொடங்கும் புறநானூற்று இணைக்குறள் ஆசிரியப்பாவில்,

மண்திணித்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்புதைவரு வளியும்

வளி தலைஇய தீயும்

தீமுரணிய நீரும் என்றாங்கு

என வஞ்சி அடி கலந்து வந்துள்ளதை அறியலாம்.

இயற்களை வெள்ளடி, வஞ்சியின் பாதம் மயங்கப்படா அல்ல என்று இரு எதிர்மறையில் கூறியுள்ளதால், இடைஇடையிலே வெண்சீர் வந்த இயற்தளை வெள்ளடியும், கலித்தளை வந்த கலி அடியும் ஆசிரியப்பாவில் சிறுபான்மை வரும் எனக் கொள்ள வேண்டும்.

"யாண்டுபல வாக நரைஇல ஆகுதல்

யாங்குஆ கியரென வினவுதி ராயின் (புறம் 191)

என்ற பாடலின் முதலடியில் வெண்சீர் (யாண்டுபல) கலந்து வந்த இயற்சீர் வெண்டளை அடியாக உள்ளதைக் காணலாம். இதனை

"யாண்டுபல வாக நரைஇல ஆகுதல்

மாண்ட மனையின் ஒழுக்கு"

என்று வெண்பாவாக மாற்றி அமைத்தால் இது வெள்ளடி என்பதை அறியலாம்.

"குருகு வெண்டொளி கோடு புய்த்து உண்டென

மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது

மருள்பிடி திரிதரும் சாரல்

அருளான் ஆகுதல் ஆயிழை கொடிதே"

என்ற நேரிசை ஆசிரியப்பாவால் அமைந்த இப்பாடலின் இரண்டாம் அடியில் கலித்தளை வந்து கலிஅடியாக அமைந்துள்ளது. இதனை

"மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது தீவழங்கு சுழல்விழிக்கண்

சீயம்சென்று உழலுமே"

என உச்சரித்தால் இது கலியடியாக இருப்பதை அறியலாம்.

### 2. வஞ்சிப்பாவில் கலக்கும் அடிகள்

வஞ்சிப்பாவில் ஆசிரிய அடியும், கலி அடியும் கலந்து வரும். பட்டினப்பாலையில் ஆசிரிய அடிபயின்றும் கலிஅடி சிறுபான்மை யாகவும் கலந்துள்ளன.

"நேரிழை மகளிர் உணங்குணா கவரும்"

"வயலாமைப் புழுக்குண்டும்.

வரளடம்பின் மலர்மலைந்தும்".

என்பது கலி அடி ஆகும். இதனை,

'வயலாமைப் புழுக்குண்டாம் வரளடம்பின் மலர்மலைந்தும் கயனாட்டக்

கடைசியர்தம் காதலர்தோள் மணந்தனரே"

என்று உச்சரித்தால் இது கலியடியாக இருப்பதை அறியலாம்.

'வஞ்சி மருங்கின் எஞ்சா அகவல்' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால், வஞ்சிப்பாவில் ஆசிரிய அடி பயின்று (மிகுதியாக) வரும் என்றும், வெள்ளடியும், கலி அடியும் அருகி வரும் என்றும் கொள்ள வேண்டும்.

"கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை"

என்பது இயற்சீர் வெண்டளை வந்த வெள்ளடி, இதனை,

"கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை

ஆழிசூழ் வையகக் கனி".

என்று வெண்பாவாக ஆக்கி உச்சரித்தால் இது வெள்ளடி என்பதனை அறியலாம்.

### 3. கலிப்பாவில் கலக்கும் அடிகள்

கலிப்பாவில் முதல் இருபாக்களாகக் கூறப்பட்ட வெண்பாவும், ஆசிரியப்பாவும் வந்து கலக்கும்.

'காமர் கடும்புனல் கலந்து எம்மோடு ஆடுவாள்' (கலித்தொகை 35) என்ற மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவில் வெண்பாவும் ஆசிரியப்பாவும் வந்து கலந்ததைக் கண்டுகொள்க.

இக்காரிகையில் 'முறைமையினே' என்பது தொன்றுதொட்டு வரும் முறைப்படி வந்து மயங்கும் என்பதை உணர்த்தியது.

## செய்யுளியல் ஒழிபு

### 1. தரவு தாழிசைக்கு ஒழிபு (அடிவரையறை)

(42) "சுருங்கிற்று மூன்றடி ஏனைத்தரவு, இருமூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக்கும் தரவுஆவது, தாழிசைப்பா
சுருங்கிற்று இரண்டடி ஓக்கம் இரட்டி, சுரும்பு இமிரும்
தரங்கக் குழலாய் சுருங்கும் தரவினில் தாழிசையே"

இக்காரிகை கலிப்பாவின் உறுப்புகளாகிய தரவுக்கும் தாழிசைக்கும் உரிய சில இலக்கண வரையறைகளைக் கூறுகிறது.

1. அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவிலும், வண்ணக ஒத்தாழிகைக் கலிப்பாவிலும் வரும் தரவு, ஆறு அடியாக இருக்கும். இதில் குறைவோ மிகுதியோ பெற்று வராது. மற்ற கலிப்பாக்களில் வரும் தரவு குறைந்தது மூன்றடி வரும். பேரெல்லைக்கு அளவு பாடும் புலவனின் பொருள் முடிவைப் பொறுத்தது ஆகும். வரையறை இல்லை.

2. மற்ற கலிப்பாக்களில் வரும் தரவு குறைந்தது மூன்றடி வரும் என்று கூறப்பட்டிருந்தாலும் வெள்ளைக்கு இரண்டடி என்று தொடங்கும் காரிகையில் (14) 'எள்ளப்படாக் கலிக்கு ஈரிரண்டு ஆகும் இழிபு' என்று கூறப்பட்டதால் தரவு கொச்சகக் கலிப்பாவுக்கு மட்டும் நான்கு அடிதான் சிற்றெல்லை என்று கொள்ளவேண்டும்.

3. தாழிசைக்குச் சிற்றெல்லை இரண்டடி, பேரெல்லை நான்கடி ஆகும். இவ்வாறு சொல்லியிருந்தாலும் இடையிலுள்ள மூன்றடியாலும் தாழிசை வரும் எனக் கொள்க.

4. எல்லாக் கலிப்பாக்களிலும் தரவின் அடி எண்ணிக்கையை விடத் தாழிசையின் அடி எண்ணிக்கை குறைந்து வரும்.

இவற்றிற்கான எடுத்துக்காட்டுகளைச் செய்யுளியலில் கொடுத்துள்ள பாடல்களிலும் (காரிகை 30, 31, 32) கலித்தொகை போன்ற நூல்களிலும் கண்டு கொள்க.

ஒழிபியலில் கூறப்படும் செய்யுள் உறுப்புப் பற்றிய கருத்துக்கள்

**எல்லாப் பாக்களுக்கும் உரிய பொது ஒழிபு**

(43) பொருளோடு அடிமுதல் நிற்பது கூன், அதுவே பொருந்தி
இருள்சேர்விலா வஞ்சி ஈற்றினும் நிற்கும், இனி ஒழிந்த
மருள்தீர் விகாரம் வகையுளி, வாழ்த்து, வசை, வனப்புப்
பொருள்கோள், குறிப்பிசை, ஒப்பும் குறிக்கொள் பொலங் கொடியே!

இக்காரிகை முன்னர் கூறப்பட்ட நால்வகைப் பாக்களுக்கும் உரிய இலக்கணத்தைக் கூறுகிறது. செய்யுள் உறுப்புக்களான,

1. கூன் 2. விகாரம் 3. வகையுளி 4. வாழ்த்து 5. வசை 6, வனப்பு 7.பொருள் 8. பொருள்கோள் 9. குறிப்பிசை 10. ஒப்பு ஆகியவை பற்றி உணர்த்துகின்றன.

### 1. கூன்

அடியின் முதலில் வரும் பாடலின் பொருளைத் தழுவி நிற்கும் தனிச்சொல்லைக் கூன் என்பர். கூன் என்றால் வளைவு எனப்பொருள்

**நேரிசை வெண்பா**

'உதுக்காண்
சுரந்தானா வண்கைச் சுவணமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழைப் பாடி – இரந்தார்மா
இன்மை அகல்வது போல இருள்நீங்க
மின்னும் அளிதேர் மழை"

இவ்வெண்பாவின் அடியின் முதலில் உதுக்காண் என வந்துள்ளதை அறியலாம்.

**நேரிசை ஆசிரியப்பா**

"அவரே
கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியம் காடிறந் தோரே

யானே,

தோடார் எல்வளை நெகிழ ஏங்கிப்

பாடமை சேக்கையுள் படர்கூர்ந் திசினே

அன்னள் அளியள் என்னாது மாமழை

இன்னும் பெய்யு முழங்கி

மின்னும் தோழிஎன் இன்னுயிர் குறித்தே (குறுந்தொகை –216)

நேரிசை ஆசிரியப்பாவாக அமைந்த இப்பாடலில் அவரே, யானே என கூன் வந்துள்ளதை அறியலாம்.

**தரவு கொச்சகக் கலிப்பா**

"உலகினுள்,

பெருந்தகையார் பெருந்தகைமை பிறழாவே பிறழினும்

இருந்தகைய இறுவரைமேல் எரிபோலச் சுடர்விடுமே

சிறுதகையார் சிறுதகைமை சிறப்பெனினும் பிறழ்வின்றி உறுதகைமை

உலகினுக்கோர் ஒப்பாகித் தோன்றாதே"

தரவு கொச்சகக் கலிப்பாவால் அமைந்த இப்பாடலில் உலகினுள் எனக் கூன் வந்துள்ளதை அறியலாம்.

**வஞ்சிப்பா**

“உலகே

முற்கொடுத்தார் பிற்கொளவும்

பிற்கொடுத்தார் முற்கொளவும்

உறுதிவழி ஒழுகும் என்ப

அதனால்,

நற்றிறம் நாடுதல் நன்மை

பற்றற யாவையும் பரிவறத் துறந்தே”

வஞ்சிப்பாவால் அமைந்த இப்பாடலில் உலகே எனக் கூன் வந்துள்ளதை அறியலாம்.

'வஞ்சி ஈற்றினும் நிற்கும்' என்று கூறியுள்ளதால் ஈற்றில் மட்டுமல்லாமல் நடுவிலும் கூன் வரும் எனக் கொள்ள வேண்டும்.

"மாவழங்கலின் மயக்குற்றன...... வழி. (புறம் 345)

வஞ்சி அடியில் 'வழி' என கூன் இறுதியில் வந்துள்ளது.

"கலங்கழாலிற் – துறை – கலக்குற்றன (புறம்–345)

இவ்வஞ்சி அடியின் நடுவில் 'துறை' நடுவில் கூனாய் வந்துள்ளது.

"தேரோடத் துகள் கெழுமின தெருவு" (புறம்.345)

'தெருவு' என்பது உகரத்தில் முடிந்த நேர்ஈற்று இயற்சீர் வஞ்சி அடியில் கூனாக வந்துள்ளது.

வஞ்சிப்பாவை 'இருள்சேர்வு இலா வஞ்சி' என்று சிறப்பித்துக் கூறியுள்ளதால்

1. வஞ்சிப்பாவில் நடுவிலும் இறுதியிலும் அசை கூனாக வருவது சிறப்பு உடையது
2. சீர் கூனாக வந்தாலும் உகர இறுதிபெற்ற நேர் ஈற்று இயற்சீராக மட்டுமே வரும்.
3. கொச்சகக் கலியில் ஓர் அடியே கூனாக வரும்.
4. ஆசிரியப்பாவின் இடையில் கூன் வந்தாலும் வரும் ஆனால் இறுதியில் வராது.
5. வெண்பாவிலும் கலிப்பாவிலும் இடையிலும் ஈற்றிலும் கூன் வராது எனக் கொள்க.

'காமர் கடும்புனல்' எனத் தொடங்கும் (கலி.39) கொச்சகக் கலிப்பாவில் 'சிறுகுடியீரே சிறுகுடியீரே' என ஓர் அடியே கூனாக வந்துள்ளதைக் காண்க.

செய்யுள் உறுப்புகளாக எடுத்துக்கூறப்படாத உறுப்புகள் வருமாறு.

## 2. விகாரம்

செய்யுளில் புலவர்கள் செய்துகொள்ளும் சொல்திரிபு விகாரம் எனப்படும். இது ஆறுவகைப்படும் அ. வலித்தல். ஆ. மெலித்தல் இ. விரித்தல் ஈ. தொகுத்தல் உ நீட்டல் ஊ. குறுக்கல்

### அ. வலித்தல் விகாரம்

ஒரு சொல்லில் உள்ள மெல்லெழுத்தை வல்லெழுத்தாகத் திரித்தல் (மாற்றுதல்)

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்" (குறள் 415)

இப்பாடலில் ஊன்றுகோல் என வரவேண்டியது ஊற்றுக்கோல் என வல்லினமாக மாறியுள்ளதைக் காணலாம்.

### ஆ. மெலித்தல் விகாரம்

ஒரு சொல்லில் உள்ள வல்லெழுத்தை மெல்லெழுத்தாகத் திரித்தல்

"தண்டையின் இனக்கிளி கடிவோள்

பண்டையல் அல்லள் மான் நோக்கினளே"

இப்பாடலில் "தட்டை" என வரவேண்டியது (தட்டை என்பது ஒருவகைக் கிளி) தண்டை என மெல்லினமாக மாறியுள்ளதால் இது மெலித்தல் விகாரம் ஆகும்.

### இ. விரித்தல் விகாரம்

இருசொற்களுக்கு இடையே மேலும் ஒரு சொல்லைச் சேர்த்து விரித்தல்

"தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்

முன்னம் உணர்ந்த வளை." (குறள் 1277)

இப்பாடலில் தண் + துறைவன்= தண்டுறைவன் என்று வரவேண்டியது தண் + அம் + துறைவன் என இடையில் அம் என்ற சொல் பெற்றுத் தண்ணந் துறைவன் என்று வந்துள்ளதால் இது விரித்தல் விகாரமாகும்.

### ஈ. தொகுத்தல் விகாரம்

சொற்றொடர்களுக்கு இடையே சொல் குறைந்து போதல் தொகுத்தல் விகாரம் எனப்படும்.

"பூந்தாள் புறவின் புனைமதில் கைவிடார்

காத்தலில் காமுறுவர் ஏனையார் - பார்த்துறார்

வேண்டார் வணக்கி விறல்மதில் தான்கோடல்

வேண்டுமாம் வேண்டார் மகன்".

இப்பாடலில் வேண்டாதாரை வணக்கி என்று வரவேண்டியது வேண்டார் வணக்கி என சொல் குறைந்து வந்ததால் தொகுத்தல் விகாரம் ஆகும்.

### உ. நீட்டல் விகாரம்

ஒரு சொல்லில் உள்ள குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்குவது நீட்டல் விகாரம் ஆகும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்

மூசு வண்டுறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே".

இப்பாடலில் நிழலே என்று வரவேண்டியது நீழலே என்று வந்ததால் நீட்டல் விகாரம் ஆகும்.

**ஊ. குறுக்கல் விகாரம்**

ஒரு சொல்லில் உள்ள நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்குவது குறுக்கல் விகாரம் எனப்படும்.

"யானை எருத்தத்து இருந்த இலங்கு இலைவேல்

தென்னன் திருத்தார் நன்று என்றேன் தியேன்"

இப்பாடலில் தீயேன் என்று வரவேண்டியது தியேன் என்று வந்ததால் இது குறுக்கல் விகாரம் ஆகும்.

இக்காரிகையில் மருள்தீர் விகாரம் என்று சிறப்பித்துக் கூறியுள்ள தால் தலைக்குறை (முதற்குறை), இடைக்குறை, கடைக்குறை என்று இவற்றையும் கொள்ள வேண்டும்.

"மரைஇதழ் புரையும் அஞ்செஞ் சீறடி"

இப்பாடலில் தாமரை என்று வரவேண்டியது முதல் எழுத்து கெட்டு மரை என வந்ததால் முதற்குறை ஆகும்.

"வேதின வெரிநின் ஓதி முதுபோத்து" (குறுந்தொகை-140)

இப்பாடலில் ஓந்தி என்பதற்கு ஓதி என வந்ததால் இடைக்குறை ஆகும்.

"நீலுண் துகிலிகை கடுப்ப"

இப்பாடலில் நீலம் உண் என்பதில் நீலம் என்று வரவேண்டியது நீல் என்று வந்தது கடைக்குறை விகாரமாகும்.

## 3. வகையுளி

முன்பின் அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்கும் இயல்பை அறிந்து பாவின் ஓசை கெடாதவாறு சொற்களைச் சிதைத்து ஓசை ஊட்டுவது வகையுளி ஆகும்.

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" (குறள் 3)

இப்பாடலில் நீடுவாழ் - வார் என்பதை நீடு - வாழ்வார் என்று பிரித்தால் நீடு - நேர்நேர்- தேமா ஆகும். வாழ்வார் நேர்நேர் - தேமா ஆகும். மா முன் நேர் வந்து நேர்ஒன்றாசிரியத் தளையாகிவிடும். இதனால் வெண்பாவின் இலக்கணமும் ஓசையும் கெடும். மேலும் வெண்பாவின் இறுதிச்சீர் நாள், மலர், காசு, பிறப்பில் தான் முடியவேண்டும். நேர் நேர் என முடியக்கூடாது. ஆகையால் நீடு வாழ்வார் என்பதை நீடுவாழ் - வார் எனப் பிரித்தல் வகையுளி ஆகும்.

## 4. வாழ்த்து

ஒருவருடைய பெருமையைப் புகழ்ந்து கூறுவது வாழ்த்து எனப்படும். இது அ. மெய்வாழ்த்து. ஆ. இருபுறவாழ்த்து என இரண்டு வகைப்படும்.

### அ. மெய்வாழ்த்து

ஒருவரை உண்மையாகப் புகழ்வது மெய்வாழ்த்து ஆகும்.

"கார்நறு நீலம் கடிக்கயத்து வைகலும்

நீர்நிலை நின்ற பயன்கொலோ-கூர்நுனைவேல்

வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியால்

கொண்டிருக்கப் பெற்ற குணம்" (முத்தொள்ளாயிரம்)

இப்பாடல் ஒருவரை வாழ்த்த வேண்டும் என்பதற்காகவே வாழ்த்தியதால் மெய் வாழ்த்து ஆகும்.

### ஆ. இருபுற வாழ்த்து

ஒருவனை வாழ்த்துவதைப் போலப் பழித்தல் இருபுற வாழ்த்து ஆகும்.

"கன்னபுர மாலே கடவுளிலும் நீ அதிகம்

உன்னை விட நான் அதிகம் - ஒன்று கேள்

உன் பிறப்போ பத்தாம் உயர் சிவனுக்கு ஒன்றுமில்லை

என் பிறப்போ எண்ணத் தொலயாதே"

(தனிபாடல் திரட்டு. காளமேகம் 144)

இப்பாடலில் கடவுளைவிட மானுடப் பிறப்பு உயர்ந்தது என்று புகழ்ந்து சொல்லப்பட்டது என்றாலும் உண்மையில் மானுடப் பிறப்பின் இழிவு உணர்த்தப்பட்டுள்ளது.

## 5. வசை

ஒருவனைப் பழித்துக் கூறுதல் வசை எனப்படும். இது அ. மெய்வசை ஆ. இருபுற வசை என இரண்டு வகைப்படும்.

### அ. மெய்வசை

ஒருவனை அல்லது ஒன்றை நேரடியாகப் பழித்துக் கூறுதல் மெய்வசை எனப்படும்.

"தந்தை இலைச்சுமன் தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்(கு) இது எங்ஙனம் பட்டதுகொல் - முந்தை
அவிஉணவி னார்தெரியின் ஆவதாம் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு."

இப்பாடல் நேரே பழித்துரைத்ததால் மெய்வசை ஆகும்.

### ஆ. இருபுற வசை

ஒருவனை அல்லது ஒன்றைப் பழிப்பது போலப் புகழ்வது இருபுற வசை ஆகும்.

பாரிபாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டுஈண்டு உலகு புரப்பதுவே (புறம்-107)

இப்பாடலில் பாரியைப் பழிப்பது போல மாரிக்கு (மழைக்கு) ஒப்பாகப் புகழ்ந்துள்ளதால் இது இருபுற வசை ஆகும்.

## 6. வனப்பு

செய்யுளுக்கு அழகுசேர்ப்பது வனப்பு எனப்படும். இது அ. அம்மை ஆ. அழகு இ.தொன்மை ஈ. தோல் உ.விருந்து ஊ. இயைபு எ.புலன் ஏ. இழைபு என எட்டு வகைப்படும்.

"அம்மை அழகு தொன்மை தோல்விருந்து

இயைபு புலன்இழைபு என வனப்பு எட்டே"

என்பது இலக்கணம்

**அ. அம்மை**

மெல்லிய சொற்கள் சிலவற்றைக் கொண்டு உயர்ந்த பொருள்மேல் சில அடிகள் வருவது அம்மை ஆகும். (எ-டு) திருக்குறள், நாலடியார்.

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

உள்ளத் தனைய துயர்வு" (குறள் -595)

**ஆ. அழகு**

செய்யுளுக்கு உரிய திரிசொற்களைக் கொண்டு இனிய ஓசை புலப்படும்படியாக அமைப்பது (எ-டு) எட்டுத்தொகை.

"துணியிரும் பௌவம் குறைய வாங்கி

அணிகிளர் அடுக்கன் முற்றிய எழிலி

காலொடு மயங்கிய கனையிருள் நடுநாள்

யாங்குவந் தனையோ ஓங்கல் வெற்ப

நெடுவரை மருங்கில் பாம்பென இழிதரும்

கடுவரல் கலுழி நீந்தி

வல்லியம் வழங்கும் கல்லதர் நெறியே"

பௌவம், அடுக்கல், எழிலி, கால், கனை, ஓங்கல், வெற்பு, கடுவரல், கலுழி, வல்லியம் ஆகியவை செய்யுளுக்கே உரிய சொற்கள்.

**இ. தொன்மை**

பழைய வரலாற்று நிகழ்ச்சிகளை உரையும் பாடலும் கலந்த வடிவில் கூறுவது தொன்மை ஆகும். (எ-டு) இராமாயணம், சிலப்பதிகாரம்.

"செறிதொடி உவகை கேளாய் செஞ்சுடர்த்

தெறுகதிர்ச் செல்வன் செய்வதென்".

**ஈ. தோல்**

இழும் என்ற இசையுடன் மெல்லிய சொற்களால் விழுமிய பொருளைச் சொல்வதும் எல்லாச் சொற்களும் சேர்ந்து பல அடிகளில் வருவதும் என இரண்டு வகையும் தோல் எனப்படும்.

"இம்மை இல்லை மறுமை இல்லை
நன்மை இல்லை தீமை இல்லை
செய்வோர் இல்லை செய்பொருள் இல்லை
அறிவோர் யார் அஃது இறுவுழி இறுகென்"

இப்பாடல் மார்க்கண்டேயனார் காஞ்சிப்பாடல். இது இழும் என்ற இசையுடன் விழுமியதைச் சொன்னது.

"திருமழை தலைஇய ........... சென்றவாறே"
(மலைபடுகடாம்)

இப்பாடல் பரந்த மொழியால் அடிபல வந்தது ஆகும்.

**உ. விருந்து**

புதியவகை யாப்பில் கூறப்படுவது விருந்து ஆகும். எடுத்துக்காட்டு வந்த வழிக்கண்டு கொள்க.

**ஊ. இயைபு**

ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்ற பதினோரு எழுத்தில் ஒன்றை ஈற்றில் பெற்று வந்த செய்யுள் இயைபு ஆகும். எடுத்துக்காட்டு வந்தவழிக் கண்டு கொள்க.

**எ. புலன்**

இயற்சொற்களைக் கொண்டு பொருள் எளிதில் விளங்கும்படி பாடுவது.

(எ-டு) பள்ளு, குறவஞ்சி.

"கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்

அதனினும் கொடிது அன்பு இலாப் பெண்டிர்,

அதனினும் கொடிதே

இன்புற அவர்கையில் உண்பது தானே" (ஔவையார் பாடல் -54)

எளிமையான சொற்களால் பொருள் விளங்கும்படி அமைந்ததால் இப்பாடல் புலன் ஆகும்.

**ஏ. இழைபு**

வல்லின மெய்கள் மிகுதியும் வராமல், குறளடி முதல் கழிநெடிலடி வரை உள்ள ஐந்துவகைஅடிகளில் எழுத்தெண்ணிப் பாடுவது. நான்கு எழுத்து முதல் இருபது எழுத்துவரை பதினேழ் நிலமாக வரும்படி ஓங்கிய சொற்களால் அமைவது இழைபு ஆகும். (எ-டு) கலித்தொகை, பரிபாடல்.

இனிச் செய்யுளியல் உடையார் எழுத்தெண்ணிச் சொன்ன கட்டளை அடிகள் வருமாறு இக்கட்டளை அடி நாற்சீர் கொண்ட அடியில் கணக்கிடப்படும். ஓரடியில்,

| | |
|---|---|
| 4-6 எழுத்து இருந்தால் | - குறளடி |
| 7-9 எழுத்து இருந்தால் | - சிந்தடி |
| 10-14 எழுத்து இருந்தால் | - அளவடி |
| 15-17 எழுத்து இருந்தால் | - நெடிலடி |
| 18-20 எழுத்து இருந்தால் | - கழிநெடிலடி |

இவர் இருபது எழுத்திற்கு மிகுந்த நாற்சீர் அடி இல்லை என்பார்.

கட்டளை அடிக்கு எழுத்து எண்ணும்போது குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மெய்எழுத்து ஆகிய இவற்றை எண்ணாமல் உயிர் எழுத்தும் உயிர்மெய் எழுத்தும் மட்டும் எண்ண வேண்டும்.

| | எழுத்துக்கள் |
|---|---|
| போந்து போந்து சார்ந்து சார்ந்து | - 4 |
| தேர்ந்து தேர்ந்து மூசி நொந்து | - 5 |
| வண்டு சூழ விண்டு வீங்கி | - 6 குறளடி |
| நீர்வாய் கொண்டு நீண்ட நிலம் | - 7 |
| ஊர்வாய் ஊதை வீச ஊர்வாய் | - 8 |
| மதியோர் வண்டோ டொல்கி மாலை | - 9 சிந்தடி |

நன்மணம் கமழும் பல்நெல் ஊர – 10

அமைஏர் மென்தோள் ஆயரி நெடுங்கண் – 11

இணைஈர் ஓதி ஏந்தின வனமுலை – 12

இறும்பமல் மலரிடை எழுந்த மாவின் – 13

நறுந்தழை துயில்வரூஉம் செறிந்து ஏந்து அல்குல் – 14 அளவடி

அணிநகை அசைஇய அரியமை சிலம்பின் – 15

மணிமருள் வணர்குழல் வளரிளம் பிறைநுதல் – 16

ஒளிநிலவு வயங்கிழை உருவுடை மகளிரொடு – 17 நெடிலடி

நளிமுழவு முழங்கிய அணிநிலவு மணிநகர் – 18

இருந்தளவு மலரளவு கரும்புலவு நறுந்தொடை – 19

கலனளவு கலனளவு கலனளவு கலனளவு – 20 கழிநெடிலடி

பெருமணம் புணர்ந்தனை என்ப அஃது

ஒருநீ மறைப்பின் ஒழிகுவது அன்றே .

என வருவதால் இது இழைபு ஆகும்.

## 7. பொருள்

காரிகையில் சொல்லப்பட்ட 'பொருள்கோள்' என்பது உம்மைத் தொகை. இது பொருளும், பொருள் கோளும் எனப் பொருள்படும்.

பொருள் அகம், புறம் என இரு வகைப்படும்.

.குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – அகம்

கைக்கிளை, பெருந்திணை – அகப்புறம்

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி,

உழிஞை, தும்பை – புறம்

வாகை, பாடாண், பொதுவியல் – புறப்புறம்

இவை பற்றி அகப்பொருள் இலக்கணம் கூறும் நூலிலும், புறப்பொருள் இலக்கணம் கூறும் நூலிலும் கண்டுகொள்ள வேண்டும்.

# 8. பொருள்கோள்

செய்யுளில் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்பில்லாது இடம் மாறி மாறி அமைந்திருந்தாலும், அந்தச் சொற்களையெல்லாம் பொரு ளுக்கேற்ப ஒன்றோடொன்று இணைத்துப் பொருள் கொள்ளுவதற்குப் பொருள்கோள் என்று பெயர். இப்பொருள்கோள் 1. நிரல்நிறைப் பொருள்கோள் 2. சுண்ண மொழி மாற்றுப் பொருள்கோள் 3. அடிமறி மொழி மாற்றுப் பொருள்கோள், 4. அடிமொழி மாற்றுப் பொருள்கோள் 5. பூட்டுவில் பொருள்கோள் 6.புனல்யாற்றுப் பொருள் கோள் 7. அளைமறிபாப்புப் பொருள்கோள் 8. தாப்பிசைப் பொருள் கோள் 9. கொண்டு கூட்டுப் பொருள்கோள் என ஒன்பது வகைப்படும்.

## 1. நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் சொற்கள் தனி வரிசையிலும் அவற்றின் பொருள் தனி வரிசையிலும் நிற்றல் நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். இது அ. பெயர் நிரல் நிறை ஆ. வினை நிரல்நிறை என இருவகைப் படும்.

### அ. பெயர்நிரல்நிறை

"கொடிகுவளை கொட்டை நுசுப்பு உண்கண் மேனி
மதி பவள முத்தம் முகம் வாய் முறுவல்
பிடி பிணை மஞ்ஞை, நடை நோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்".

1. கொடி போன்ற நுசுப்பு (நுசுப்பு இடை) 2. குவளை போன்ற உண்கண் (உண்–மையுண்ட) 3. கொட்டை போன்ற மேனி (கொட்டையின் திரட்சி போன்ற உடல்) 4. திங்களைப் போன்ற முகம் (மதிமுகம்) 5. பவளம் போன்ற வாய் (பவளவாய்) 6. முத்தைப் போன்ற பல் (முத்துப்பல்) 7. பெண் யானை போன்ற நடை (பிடி நடை) 8. பெண்மான் போன்ற பார்வை (பிணை நோக்கு) 9. மயில் போன்ற சாயல் (மஞ்ஞை சாயல்). இவ்வாறு சொல்லை ஒரு வரிசையிலும் அதன் பொருளை வேறு ஓர் இடத்தில் அதே வரிசையிலும் வைத்தல் நிரல்நிறை ஆகும். இவை பெயர்ச்சொற்கள் ஆதலால் இது பெயர்நிரல் நிறை ஆகும்.

**ஆ. வினை நிரல்நிறை**

"மாசு போகவும் காய்பசி நீங்கவும்

கடிபுனல் மூழ்சி அடிசில் கை தொட்டு"

இப்பாடலில் மாசுபோக கடிபுனல் மூழ்கியும், காய்பசி நீங்க அடிசில் கை தொட்டும் (அடிசில் - உணவு) எனவும் கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். இதில் நேரே நிரலே நிறுத்தி பொருள்கொள்வதால் நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும். வினைச்சொற்கள் சேர்வதால் வினைநிரல் நிறை ஆகும்.

**2. சுண்ண மொழிமாற்றுப் பொருள்கோள்**

சுண்ணம் என்றால் பொடி என்பது பொருள். சுண்ணம் போலச் சிதறிக்கிடக்கும் சொற்களைக் கூட்டிப் பொருள் காண்பது சுண்ண மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும். நாற்சீர் கொண்ட ஓரடியில் அமைந்த சொற்களை மாற்றிப் பொருள் கொள்வதே இலக்கணமாகும்.

"சுரைஆழ அம்மி மிதப்ப வரையனைய

யானைக்கு நீத்து முயற்கு நிலைஎன்ப

கானக நாடன் சுனை'

கானக நாடன் சுனைநீரில் சுரைமிதக்கும், அம்மி அமிழும், யானை நிற்கும், முயல் தத்தளிக்கும் என்று பொருள் கொள்ள வேண்டும். சுரை என்பதோடு மிதப்ப என்று சொல்லை எடுத்து

பொருள் கொள்ளவும். அம்மி என்பதோடு ஆழ என்ற சொல்லை எடுத்து பொருள் கொள்ளவும், யானை என்பதோடு நிலை என்ற சொல்லை எடுத்து பொருள் கொள்ளவும், முயல் என்பதோடு நீத்து என்ற சொல்லை எடுத்து பொருள் கொள்ளவும் வேண்டும். இதனால் இது சுண்ண மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

**3. அடிமறி மொழிமாற்றுப் பொருள்கோள்**

ஒரு பாடலில் அமைந்த அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பொருளும் ஓசையும் மாறாமல் அமைவது அடிமறி மொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

"சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரலை எனினே யான்அஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே"                    (காரிகை 28- எடுத்துக்காட்டு)

இப்பாடலில் எந்த அடியை எங்கு மாற்றினாலும் பொருளும், ஓசையும் சிதையாது. ஆகையால் இது அடிமறிமொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

### 4. அடிமொழிமாற்றுப் பொருள்கோள்

இரண்டு அடிகளில் உள்ள சொற்களைப் பொருந்தும் இடத்தில் சேர்த்துப் பொருள் கொள்வது அடிமொழிமாற்றுப் பொருள்கோள் ஆகும்.

"ஆலத்து மேல குவளை குளத்துள

வாலின் நெடிய குரங்கு"

இப்பாடலில் ஆலமரத்தின்மேல் வாலின் நெடிய குரங்கு, குளத்தில் குவளை எனப் பொருள் கொள்ள வேண்டும். எனவே இது அடிமொழி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

### 5. பூட்டுவில் பொருள்கோள்

பாடலில் உள்ள முதல்சொல்லையும் இறுதிச்சொல்லையும் சேர்த்துப் பொருள் கொள்வது பூட்டுவில் பொருள்கோள் ஆகும்.

"திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்

இறந்து படின்பெரிதாம் ஏதம் - உறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் தமிழர் பெருமானைக்

கண்ணாரக் காணக் கதவு"                    (முத்தொள்ளாயிரம் 42)

இப்பாடலில் திறந்திடுமின் கதவு என்று முதற்சொல்லும் இறுதிச் சொல்லும் சேர்ந்து பொருள் தருவதால் பூட்டுவில் பொருள்கோள் ஆகும்.

### 6. புனல் யாற்றுப் பொருள்கோள்

ஆற்றுநீர் தொடர்ந்து செல்வதுபோல் பாடலின் பொருள் தொடர்ந்து செல்லுதல். இதில் சொற்களையோ, அடிகளையோ மாற்ற வேண்டாம். ஓர் அடியில் ஒரு பொருள் முடிந்து விடவேண்டும். ஓர் அடியை மற்றோர் அடியுடன் சேர்க்க வேண்டிய தேவை இருக்காது.

"அலைப்பான் பிறிதுயிரை ஆக்கலும் குற்றம்

விலைப்பாலின் கொண்டூன் மிசைதலும் குற்றம்

சொலற்பால அல்லாத சொல்லுதலும் குற்றம்

கொலைப்பாலும் குற்றமே யாம்" (நான்மணிக்கடிகை - 28)

இப்பாடல் புனல்யாற்றுப் பொருள்கோள் ஆகும்.

### 6. அளைமறி பாப்புப் பொருள்கோள்

செய்யுளின் ஈற்றில் அமைந்த சொல்லோ, அடியோ பிற அடிகளோடு சென்று பொருந்திப் பொருளை வெளிப்படுத்துவது அளைமறிபாப்புப் பொருள்கோள் ஆகும். அளை -புற்று, மறி -மடங்குதல், பாப்பு பாம்பு. புற்றின் உள்ளே புகும் பாம்பு தலையை மடக்கி முன்னாக வைத்து உடலை உள்ளே இழுக்கும். அப்போது உடலும் வாலும் தலையைச் சார்ந்து செல்லும். அத்தன்மையைப் பெற்றதால் அளைமறி பாப்புப் பொருள்கோள் ஆயிற்று.

"தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார் தாமும்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து

நாற்கதியில் சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த

வினைஎன்றே முனிவார் தாமும்.

வாழ்ந்த பொழுதினே வான்எய்தும்

நெறிமுன்னி முயலா தாரே"

இப்பாடலில் 'தாழ்ந்த உணர்வினராய்த் தாள் உடைத்து தண்டு ஊன்றித் தளர்வார் தாம் வாழ்ந்த பொழுதினே வான் எய்து நெறி முன்னி முயலாதார்' எனக் கூட்ட வேண்டும். இவ்வாறே மற்ற இரண்டு அடிகளிலும் இறுதி அடியைச் சேர்க்க வேண்டும் இவ்வாறு இறுதி அடி இடையிலும், முதலிலும் சென்று பொருள் கொண்டதால் இது அளைமறி பாப்புப் பொருள்கோள் ஆகும்.

### 7. தாப்பிசைப் பொருள்கோள்

செய்யுளின் இடையில் நின்ற சொல் முன்னும் பின்னும் உள்ள சொற்களோடு இணைந்து பொருள் தருவது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும். ஊஞ்சலாய்க் கட்டப்பட்ட கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதைப் போல

இது அமைவதால் தாப்பிசைப் பொருள்கோள் ஆகும் (தாம்பு –தாப்பு (கயிறு + இசை (சொல்) = தாப்பிசை)

"உண்ணாமை உள்ள(து) உயிர்நிலை ஊன்உண்ண

அண்ணாத்தல் செய்யாது அளறு." (குறள் 255)

இப்பாடலில் ஊன் என்ற சொல் "ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை" என்று முன்னால் சென்று சேர்ந்தது. பின்னர் மீண்டும் வந்து 'ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யாது அளறு' என்று சேர்ந்தது. நடுவில் நின்ற ஊன் என்னும் சொல் முதலிலும் இறுதியிலும் சென்று பொருள் கொண்டதால் இது தாப்பிசைப் பொருள்கோள் ஆகும்.

### 9. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

பாடலின் பல அடிகளிலும் வெவ்வேறு இடங்களில் உள்ள சொற்களை பொருள் பொருந்தும் வகையில் முன்னும் பின்னும் கொண்டுசென்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்.

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி

அஞ்சனத்து அன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்".

இப்பாடலில் சொற்களை மாற்றிக் கூட்டாமல் பொருள் கொண்டால் உவமை பொருந்தி வராது. ஆகையால் அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் எனவும், தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட மாமேனி என்றும், வெண்கோழி முட்டை உடைத்தன்ன பசலை என்றும் கொண்டு கூட்டினால் உவமை பொருந்திப் பொருள் சிறப்பாக அமையும். ஆகையால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஆகும்.

## 9. குறிப்பிசை

பாடல்களில் எழுத்தில்லாத ஓசைகள் வரும். வாயின் சில ஒலிக் குறிப்புகள் அதாவது முற்கு (முக்குதல் ஓசை), வீளை (சீழ்கை விசில்அடித்தல்), இலதை (கத்தல் ஒலி), அனுகரணம் (ஒலிக்குறிப்பு போலச் செய்யும் ஒலி) போன்றவை. இவை செய்யுளில் வரும்போது அதனையும் அசை, சீர், தளை, தொடை

ஆகியவற்றின் இலக்கணம் கெடாதவாறு அலகிட்டுக்கொள்ள வேண்டும். எழுத்தல்லாத இவ்வோசைகளைக் குறிப்பிசை என வழங்கப்படுகிறது.

"சக்கரவர்த்தி என்றே - மேலாம்

தன்மை படைத்திருந்தோம்

பொக்கென ஓர்கணத்தே - எல்லாம்

போகத் தொலைந்து விட்டாய்" (பாரதி - பாஞ்சாலி சபதம் - 278)

'பொக்கு' என்ற ஒலிக்குறிப்புச் சொல்லையும் அலகிட்டுக் கொள்ள வேண்டும். இது முற்கு ஓசை ஆகும்.

## 10. ஒப்பு

பாக்களும் அவற்றிற்குரிய இனங்களும் முன்னால் எடுத்துரைக்கப் பட்டன. அவ்விரண்டிற்கும் சீர், தளை, அடி ஆகிய மூன்றும் வரையறுத்துக் கூறப்பட்டன. அவ்விதிகளிலிருந்து மாறுபட்டும் மிகுந்தும் குறைந்தும் வருவதுண்டு. அவ்வாறு வந்தால் ஒப்புமையைக் கருத்தில் கொண்டு அவற்றை அந்தந்த செய்யுளாகவே கொண்டு அவற்றுக்கு அந்தந்த செய்யுட் பெயரையே வழங்கவேண்டும் என்பதாகும்.

"கோழியும் கூவின குக்கில் குரல்காட்டும்

தாழியுள் நீலத் தடங்கணீர் போதுமினோ

ஆழிசூழ் வையத்துஎம் அண்ணல் அடியேத்திக்

கூழை நனையக் குடைந்தும் குளிர்புனல்

ஊழியும் மன்னுவாம் என்றேலோர் எம்பாவாய்!"

முன்னர் நாற்சீர் நான்கடியால் வருவது கலிவிருத்தம் என்று வரையறை கூறப்பட்டுள்ளது. இப்பாடல் ஐந்தடியால் வந்தாலும் ஒரு ஒப்புமை நோக்கி கலிவிருத்தத்தில் வைத்துக் கூறப்படும். இப்பாடலை தரவு கொச்சகக் கலிப்பா என்று கூறினாலும் பொருந்தும்.

சுற்றுநீர் சூழ்கிடங்கில்

பொற்றாமரைப் பூம்படப்பைத்

தெண்ணீர் நல்வயலூரன் கேண்மை

அல்இருங் கூந்தற்கு அலரானாவே.

இப்பாடல் இரண்டடியாக வந்த வஞ்சிப்பா ஆகும். வஞ்சிப்பாவிற்குச் சிற்றெல்லை மூன்றடியாகும் (காரிகை 14) இருந்தாலும் ஒப்புமையைக் கருத்தில் கொண்டு இதனை வஞ்சிப்பாவில் சேர்க்க வேண்டும்.

புராணக் கவிஞர்களால் பாடப்பட்ட இலக்கியங்களில் மிகுந்தும் குறைந்தும் வந்த பாடல்களை இவ்வாறு ஏதேனும் ஒரு பாவில் அடக்கிக் கொள்ள வேண்டும்.

இக்காரிகையில் 'ஒப்பும்' என்று உம்மைச் சேர்த்துக் கூறியுள்ள தால் (அ) வண்ணம் (ஆ) புனைந்துரை (இ) அடிவரையறை இல்லாதன (ஈ) ஓரடியால் வருவன ஆகியவற்றையும் கொள்ள வேண்டும்.

## வண்ணம்

செய்யுளில் வரும் நுண்ணிய ஓசை வண்ணம் எனப்படும். இதனைத் தற்காலத்தில் சந்த வேறுபாடு என்பர். உரையாசிரியர் தூங்கல், ஏந்திசை, அடுக்கிசை, பிரிந்திசை, மயங்கிசை என ஐந்தாகப் பாகுபடுத்துகிறார். ஒவ்வொன்றுக்கும் இருபது பிரிவுகளைக் காட்டி வண்ணம் நுறுவகைப்படும் என்கிறார். (5x20=100)

| | | |
|---|---|---|
| குறில் | அகவல் | தூங்கிசை வண்ணம் |
| நெடில் | ஒழுகல் | ஏந்திசை வண்ணம் |
| வலி | வல்லிசை | அடுக்கிசை வண்ணம் |
| மெலி | மெல்லிசை | பிரிந்திசை வண்ணம் |
| இடை | | மயங்கிசை வண்ணம் |

இவற்றை உறழ நூறு வண்ணம் வரும். (5×4=20x5=100)

### 1. தூங்கிசை வண்ணம் (20)

குறில் அகவல் தூங்கிசை வண்ணம், நெடில் அகவல் தூங்கிசை வண்ணம், வலி அகவல் தூங்கிசை வண்ணம், மெலி அகவல் தூங்கிசை வண்ணம், இடை அகவல் தூங்கிசை வண்ணம் எனப்படும்.

குறில் ஒழுகல் தூங்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் தூங்கிசை வண்ணம், வலி ஒழுகல் தூங்கிசை வண்ணம், மெலி ஒழுகல் தூங்கிசை வண்ணம், இடை ஒழுகல் தூங்கிசை வண்ணம் என வரும்.

குறில் வல்லிசை தூங்கிசை வண்ணம், நெடில் வல்லிசை தூங்கிசை வண்ணம், வலி வல்லிசை தூங்கிசை வண்ணம், மெலி வல்லிசை தூங்கிசை வண்ணம், இடை வல்லிசை தூங்கிசை வண்ணம் என வரும்.

குறில் மெல்லிசை தூங்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை தூங்கிசை வண்ணம், வலி மெல்லிசை தூங்கிசை வண்ணம், மெலி மெல்லிசை தூங்கிசை வண்ணம், இடை மெல்லிசை தூங்கிசை வண்ணம் என வரும்.

**2. ஏந்திசை வண்ணம் (20)**

குறில் அகவல் ஏந்திசை வண்ணம், நெடில் அகவல் ஏந்திசை வண்ணம், வலி அகவல் ஏந்திசை வண்ணம், மெலி அகவல் ஏந்திசை வண்ணம், இடை அகவல் ஏந்திசை வண்ணம் என வரும்.

குறில் ஒழுகல் ஏந்திசை வண்ணம், நெடில் ஒழுகல் ஏந்திசை வண்ணம், வலி ஒழுகல் ஏந்திசை வண்ணம், மெலி ஒழுகல் ஏந்திசை வண்ணம், இடை ஒழுகல் ஏந்திசை வண்ணம் என வரும்.

குறில் வல்லிசை ஏந்திசை வண்ணம், நெடில் வல்லின் எந்திசை வண்ணம், வலி வல்லிசை ஏந்திசை வண்ணம், மெலி ◌ான்றினர் ஏந்திசை வண்ணம், இடை வல்லிசை ஏந்திசை வண்ணம் என வரும்.

குறில் மெல்லிசை ஏந்திசை வண்ணம், நெடில் மெல்லிசை ஏந்திசை வண்ணம், வலி மெல்லிசை ஏந்திசை வண்ணம், மெலி மெல்லிசை ஏந்திசை வண்ணம், இடை மெல்லிசை ஏந்திசை வண்ணம் எனவும் வரும்

**3. அடுக்கிசை வண்ணம் (20)**

குறில் அகவல் அடுக்கிசை வண்ணம், நெடில் அகவல் அடுக்கிசை வண்ணம், வலி அகவல் அடுக்கிசை வண்ணம், மெலி அகவல் அடுக்கிசை வண்ணம், இடை அகவல் அடுக்கிசை வண்ணம் என வரும்.

குறில் ஒழுகல் அடுக்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் அடுக்கிசை வண்ணம், வலி ஒழுகல் அடுக்கிசை வண்ணம், மெலி ஒழுகல் அடுக்கிசை வண்ணம், இடை ஒழுகல் அடுக்கிசை வண்ணம் என வரும்.

குறில் வல்லிசை அடுக்கிசை வண்ணம், நெடில் வல்லிசை அடுக்கிசை வண்ணம், வலி வல்லிசை அடுக்கிசை வண்ணம், மெலி வல்லிசை அடுக்கிசை வண்ணம், இடை வல்லிசை அடுக்கிசை வண்ணம் என வரும்.

குறில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம், வலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம், மெலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம், இடை மெல்லிசை அடுக்கிசை வண்ணம் எனவும் வரும்

**4. பிரிந்திசை வண்ணம் (20)**

குறில் அகவல் பிரிந்திசை வண்ணம், நெடில் அகவல் பிரிந்திசை வண்ணம், வலி அகவல் பிரிந்திசை வண்ணம், மெலி அகவல் பிரிந்திசை வண்ணம், இடை அகவல் பிரிந்திசை வண்ணம் என வரும்.

குறில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம், நெடில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம், வலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம், மெலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம், இடை ஒழுகல் பிரிந்திசை வண்ணம் என வரும்.

குறில் வல்லிசை பிரிந்திசை வண்ணம், நெடில் வல்லிசை பிரிந்திசை வண்ணம், வலி வல்லிசை பிரிந்திசை வண்ணம், மெலி வல்லிசை பிரிந்திசை வண்ணம், இடை வல்லிசை பிரிந்திசை வண்ணம் என வரும்.

குறில் மெல்லிசை பிரிந்திசை வண்ணம், நெடில் மெல்லிசை பிரிந்திசை வண்ணம், வலி மெல்லிசை பிரிந்திசை வண்ணம், மெலி மெல்லிசை பிரிந்திசை வண்ணம், இடை மெல்லிசை பிரிந்திசை வண்ணம் எனவும் வரும்.

**5. மயங்கிசை வண்ணம் (20)**

குறில் அகவல் மயங்கிசை வண்ணம், நெடில் அகவல் மயங்கிசை வண்ணம், வலி அகவல் மயங்கிசை வண்ணம், மெலி அகவல் மயங்கிசை வண்ணம், இடை அகவல் மயங்கிசை வண்ணம் என வரும்.

குறில் ஒழுகல் மயங்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் மயங்கிசை வண்ணம், வலி ஒழுகல் மயங்கிசை வண்ணம், மெலி ஒழுகல் மயங்கிசை வண்ணம், இடை ஒழுகல் மயங்கிசை வண்ணம் என வரும்.

குறில் வல்லிசை மயங்கிசை வண்ணம், நெடில் வல்லிசை மயங்கிசை வண்ணம், வலி வல்லிசை மயங்கிசை வண்ணம், மெலி வல்லிசை மயங்கிசை வண்ணம், இடை வல்லிசை மயங்கிசை வண்ணம் என வரும்.

குறில் மெல்லிசை மயங்கிசை வண்ணம், நெடில் மெல்லிசை மயங்கிசை வண்ணம், வலி மெல்லிசை மயங்கிசை வண்ணம், மெலி மெல்லிசை மயங்கிசை வண்ணம், இடை மெல்லிசை மயங்கிசை வண்ணம் எனவும் வரும்

இவ்வாறு வண்ணம் நூறு வகைப்படும் என்றார் அவிநயனார். தொல்காப்பியர் இருபது வகையான வண்ணங்களை மட்டும் (தொல்காப்பியம் பொருள் 525) குறிப்பிட்டுள்ளார்.

## புனைந்துரை

புனைந்துரை என்பதற்கு கற்பனை என்று பொருள். இது 1. பெரியதைச் சிறிதாக்கிய புனைந்துரை 2. சிறியதைப் பெரிதாக்கிய புனைந்துரை என இரண்டு வகைப்படும்.

### 1. பெரியதைச் சிறிதாக்கிய புனைந்துரை

"வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைய
பெய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்"

இப்பாடல் பெரியதைச் சிறிதாக்கிய புனைந்துரை ஆகும்.

### 2. சிறியதைப் பெரிதாக்கிய புனைந்துரை

"அவாப்போல் அகன்றதன் அல்குல்மேல் சான்றோர்
உசாப்போல உண்டே மருங்குல் -உசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம்"

இப்பாடல் சிறியதைப் பெரிதாக்கிய புனைந்துரை ஆகும்.

"பொன்மலி கச்சி பூமலி கூடல்
மாரி ஈகை மணிமாடம்"

இதுபோன்ற செய்யுளில், கச்சி- காஞ்சிபுரம், கூடல்- மதுரை

இதுபோன்று வருவன எல்லாம் சிறியதைப் பெரிதாக்கிய புனைந்துரை ஆகும்.

## மேற்பார்வை நூல்கள்

### பாடநூல்

வேங்கடசாதி நாட்டார். ந.மு, யாப்பருங்கலக்காரிகை, மூலமும் குணசாகரர் உரையும், கழக வெளியீடு, சென்னை.

### பார்வை நூல்கள்

1. தமிழண்ணல் – யாப்பருங்கலக்காரிகை
மீனாட்சி புத்தக நிலையம்
மதுரை
2. மே.வி. வேணுகோபாலன் – யாப்பருங்கலக்காரிகை
கழக வெளியீடு,
சென்னை.
3. முனைவர் கு. கருப்பசாமி – அமிதசாகரரின்
யாப்பருங்கலக்காரிகை,
(எளிய உரை)
தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,
சென்னை.

### இணையதள முகவரிகள் :

1. www.thamizhkadal.com
2. www.tamilvu.org

**B.A. DEGREE EXAMINATION,**

**SECOND YEAR – III SEMESTER**

**TAMIL – MAJOR**

**SUBJECT – யாப்பிலக்கணம்**

Time : 3 hours | Maximum Mark : 75

**பகுதி – அ (5x 5=25 மதிப்பெண்கள்)**

**I. எவையேனும் ஐந்தனுக்கு ஒருபக்க அளவில் விடைதருக :**

1. எழுத்துக்கு உறுப்பாக அமையும் அசைகளை வகைப்படுத்துக.
2. தளை எத்தனை வகைப்படும் அவை யாவை? விளக்குக.
3. அடி என்றால் என்ன? அடியின் வகைகளை வகைப்படுத்துக.
4. நால்வகைப்பாக்களின் பொதுஇலக்கணத்தைக் கூறுக.
5. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவை விளக்குக.
6. வஞ்சிப்பாவின் இனங்களைக் கூறுக.
7. செய்யுள் உறுப்புக்களாக கூறப்படாத உறுப்புக்களுள் விகாரத்தின் வகைகளைக் கூறுக.
8. செய்யுளுக்கு அழகிற ஓசையைத் தரும் வண்ணத்தை நிறுவுக.

**பகுதி – ஆ (5x10=50 மதிப்பெண்கள்)**

**II. எவையேனும் ஐந்தனுக்கு மூன்றுபக்க அளவில் விடைதருக :**

9. யாப்பின் உறுப்புக்களுள் எழுத்தைக் குறித்து விவரித்து எழுதுக.
10. தொடை விகற்பங்களை கட்டுரைக்க.
11. வெண்பாவின் வகைகளை விளக்குக.
12. ஆசிரியப்பாவின் இனங்களை நிரல்படுத்துக.
13. மருப்பாவின் இலக்கணம் கூறி அதன் வகைகளை எழுதுக.
14. அசை ஒழிபை தெளிவுபடுத்துக.
15. சொற்களை இணைத்து பொருள் கொள்ளும் பொருள்கோளை ஆராய்க.
16. எண்வகை வனப்புகளை விவரி.

---------